பாகிஸ்தான்: கராச்சியில் தொடரும் கலவரம்.

# உலக உலா

ஒக்ரோபர் 1995



## மனதைத்தேடி

உருத் தெரியாத நனவு நிலையைக்காண விஞ்ஞானிகள் மூளைக்குள் தேடுகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக உலா

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்று
11-10-1995



## மோதல்கள் தொடர்கின்றன

கடந்த நான்கு மாதங்களாக நிலவிய சமாதான நிலை, சேர்பியர்களின் எறிகணை வீச்சுக்களால் சீர்குலைந்துள்ளது. அதனால் பொஸ்னியர்களும் பதிற் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

பக்கம் — 25



## மனித - மீன் நட்பு உண்மைக் கதை

படிப்பறிவு அற்ற 22 வயது அப்துல்லாவுடனும், அவனது சகாவான ஊமையும், செவிடுமான மொகமட்டுடனும் அன்னியோன்யமாகப் பழகும் " உள்மீன். "

பக்கம் — 57

# உலக விவகாரங்கள்

### ஆசியா

பிரிவினையில் பிறந்த நாடு — 09
தென்சீனக் கடலில் சீனா — 13
ஆப்கானிஸ்தானில் மன்னராட்சி ? — 18
மேற்குக் கரையினில் அரபாத் — 19
அமெரிக்க—வியற்நாம் நட்பு — 21
தண்ணீர்ப் பிரச்சனை — 23

### ஐரோப்பா

மோதல்கள் தொடர்கின்றன — 25
செச்னியாவில் ருஷ்ய இராணுவம் — 29
எதிர்காலப் பேரிடி — 32

### ஓசானியா

கீவி பறக்கத் தொடங்கியுள்ளது — 35

### ஆபிரிக்கா

முபாரக் படுகொலை முயற்சி — 36

### மருத்துவம் -- சிறப்புக் கட்டுரை

உள்ளத்தின் உள்ளே — 38
இதயத்துக்குப் பொருத்தமான உணவு — 55

### குற்றவியல்

சி. ஐ. ஏ. யின் நிலை — 45
போதைப் பொருள் கடத்தற் கும்பல் — 47

### மதம்

வரலாற்றின் விலை என்ன? — 49

உலா: 25

விலை: 80-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகாமைத்துவம்**
பேசும் மொழியில் கவனம் — 51
ஆளணி நிர்வாகம் — 53

**உயிரியல்**
டொல்பினின் நட்பு — 57

**விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்**
புயல் எச்சரிக்கை செய்யும் செய்மதி — 59
செலூலர் தொலைபேசி — 62

**கணனி**
மைக்ரோ சொவ்ற்— பில்கேற்ஸ் — 65

**பல்திணைப்பகுதி**
இலத்திரனியல் இன்று — 02
கின்னஸ் — 06

**அச்சுப்பதிப்பு**
**இராசன் அச்சகம்**
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

**முன் அட்டைப் பதிப்பு**
**அந்திவானம் பதிப்பகம்**
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

**வெளியீடு**
**உலக உலா நிறுவனம்**
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

★ ★ ★

## வெடிக்காத குண்டுகளை செயலிழக்கச் செய்யும் கருவி

இராணுவ சேவையில் வெடிக்காத குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் கடமையில் ஈடுபடுவோர் பரிதாபத்துக்குரியவராவர் அவர்களுக்கு எந்த நேரமும் உயிராபத்து நேரலாம். அநேகமானோர் கடமையிற் கருத்தாய் இருக்கும் போதே உயிர் இழக்கின்றனர். இரண்டாம் உலக யுத்தத்தில் ஐவர்ஸ் பிரபு இத்தொழிலில் நிபுணராக இருந்தார். பெருஞ் செல்வந்தராகவும், நிலச் சுவாந்தாராகவும் இருப்பினும் தனது நாட்டிற்குச் செய்யும் தொண்டாகவே



அவர் இதைச் செய்து வந்தார் ஜேர்மன் விமானப்படை இங்கிலாந்தின் மீது போட்ட குண்டுகளிற் பல வெடிக்காத நிலையிற் கிடந்தன. ஜேர்மனியில் இருந்து றொக்கெற் மூலம் அனுப்பப்பட்ட சில குண்டுகளும் இங்கிலாந்து மண்ணிற் கிடந்தன. இவை யாவற்றையும் தேடி அழிக்கும் பணி ஐவர்ஸ் பிரபுவின் குழுவுக்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது இறுதியிற் பயங்கரக் குண்டு ஒன்றைச் செயலிழக்கச் செய்கையில் அக் குண்டு வெடித்து ஐவாஸ் வீர மரணம் அடைந்தார்.

இப்போது அமெரிக்காவின் கடற்படை குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் எந்திர சாதனமொன்றை வடிவமைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இச் சாதனம் கணனிக் கட்டுப்பாடு உள்ளடங்கிய மனித இயந்திர வகையைச் சேர்ந்தது. இதைத் தூர இருந்தவாறு இயக்க முடியும். இது ராங்கிகள் போன்று அகழிகளைக் கடக்கவும், மூலை முடுக்குகளில் 90 பாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் திருப்பவும், படிக்கட்டுக்களில் ஏறிச் செல்லவும் கூடிய பல்திறமை உடையது. எந்தவகைக் குண்டையும் இது மிகவும் பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்யும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு உதவும் பலவிதமான சிறிய கருவிகள் இச் சாதனத்திற் பொருத்தப்பட்டுள்ளன. பொருத்தமான ஆயுதத்தை அது தெரிவு செய்து தனது பணியைத் திறம்படச் செய்யும் என்று கடற்படை ஆய்வுகூட விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்குக் கொடுக்கப்படும் கட்டளைகள் வானொலிமூலம் கொடுக்கப்படுவதில்லை. ஏனென்றால் வானொலி சிலவகைக் குண்டுகளை வெடிக்கவைக்கலாம். நவீன கண்ணாடி இழைச் செய்திப்பரிமாற்ற அலகுகள் மூலம் கட்டளை இடப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

## ஏற்கனவே புதைக்கப்பட்ட குழாய்களைப் புண்படுத்தாமல் குழிதோண்டும் இயந்திரம்



நகரங்களில் திருத்த வேலை செய்வதற்காகவோ, புதிதாகக் குழாய்கள், வயர்கள் போன்றவை புதைப்பதற்காகவோ கிடங்கு வெட்டும் போது பல தீமைகள் விளைகின்றன. ஏற்கனவே புதைக்கப்பட்ட நீர் கொண்டு செல்லும் குழாய்கள், தந்திக் கம்பிகள், மின்சார இணைப்புக்கள், எரிவாயுக் குழாய்கள் போன்றவை வெட்டப்படும் வாய்ப்பு உண்டு. இக் காரணத்தினால் நகர்ப்புறங்களில் மின்சாரம் மற்றும் தந்தித் தொடர்பு தடையாவது மிகச் சாதாரணம். இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு காற்று அழுத்தத்தின் மூலம் கிடங்கு இழுக்கும் எந்திர சாதனம் அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒலியிலும் பல தடவை கூடிய வேகத்தில் (சுப்பர்சோனிக்) காற்றை நிலத்தில் மோதும் போது குழிகள் ஏற்படுகின்றன. குழியின் நீளம், அகலம், தாழ்வு போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் சாதனம் இந்த எந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. காற்றின் அழுத்தத்தால் கிளம்பும் மண்ணையும், கற்களையும் இந்த எந்திரத்தின் இன்னுமொரு பகுதி தன்பால் இழுத்து வைத்துக் கொள்ளும். இதனால் தூசி, துகள் போன்றவை வெளியேறாமல் தடுக்கப்படுகின்றன. மீண்டும் கிடங்கை மூடுவதற்கு இவை பயன்படும். இந்த எந்திரத்தின் வேகமான செயற்பாட்டைப் பின்வருமாறு கணிப்பீடு செய்யலாம். மிக ஆழமான கிடங்குகளை அது நிமிடத்திற்கு ஓர் அடி என்ற வீதத்தில் அமைக்கின்றது. இதன் பெயர் மென் கிடங்கு வெட்டி. தயாரிப்பு; பற்றேல் பொறியியல் நிறுவனம்.

## 1997-ம் ஆண்டுக்குரிய பென்ஸ் கார்

மேற்கு ஜேர்மனியின் உச்ச மதிப்புள்ள கார்கள் மூன்று. அவை பீ. எம். டபிள்யூ, பென்ஸ், போர்சே என்பனவாம். இவை ஜேர்மனிக்கு அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதில் முன்னணியில் நிற்கின்றன. இரண்டு கதவு, இரண்டு இருக்கை, அதிவேக எந்திரம், காற்று உதைப்புக் குறைந்த உருவம் ஆகியவற்றுடன் ஜேர்மன் மொழியில் எஸ். எல். கே. என்றழைக்கப்படும் பென்ஸ் பரீட்சார்த்தமாகத் தயாராகியுள்ளது. எஸ். எல். கே. குறியீட்டுக்குத் தமிழாக்கம் பின்வருமாறு: நீட்டிக் குறைந்த, வேகமுள்ள பாரங் குறைந்த வாகனம். இதை வாங்க இரண்டு வருடம் காத்திருக்கவேண்டும். 1997 இல் தான் இது சந்தைப் படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வீட்டில் வைத்துச் செய்யக்கூடிய றொக்கெற்-அதற்குரிய வழிமுறைகள்.
## "இதன் எரிபொருள் மண்ணெண்ணெய் தான்."




முதன்முதலாகப் பறக்கவிடப்பட்ட விமானம் வீட்டில் வைத்துச் செய்யப்பட்டதென்பதை இவ்விடத்தில் அறிவுறுத்துகிறோம். விண்கலம், செய்மதி, பறக்கும் றொக்கெற் போன்றவற்றையும் இந்த அடிப்படையில் உங்கள் வீட்டு ஆய்வு கூடத்தில் தயாரிக்கலாம், விண்வெளி விஞ்ஞானி டேவிற் பேர்க்கெற் விண்வெளிக்கு உங்களை ஏற்றிக் கொண்டு சென்று மீண்டும் தரைக்குத் திரும்பிவரக் கூடிய றொக்கெற் கலம் செய்யும் முறையை அறிமுகம் செய்கிறார். இந்தத் திட்டத்திற்கு டேவிற் கொடுத்த பெயர் ஸ்பேஸ் கப், அதாவது குட்டி விண்கலம்.

இவர் பிரசுரித்த வரைபடத்தரவுகள் பின் வருமாறு அமைகின்றன. இந்த வகை விண்கலம் 15 நிமிடங்கள் மாத்திரம் பறக்க வல்லது. தரையை விட்டுக்கிளம்பிய இரண்டாவது நிமிடத்தில் அது 12 மைல் உயரத்தை எட்டிவிடும். அப்போது அதன்வேகம் ஒலியிலும் கூடியதாக இருக்கும். பின்பு தானியங்கியாக அதனுடைய எந்திரங்கள் நான்கும் செயற்படாது நிறுத்திக் கொள்ளும். இச்சமயத்தில் உங்கள் வேகம் ஒலியிலும் 8 மடங்கு கூடியதாக இருக்கும். இந்த வேகத்தில் பூமியைச் சுற்றி முன்பு தீர்மானிக்கப்பட்ட ஓடுபாதையில் உங்கள் விண்கலம் செல்லும். பூமிக் கோளத்தின் உருண்டை வடிவத்தையும், துருவங்களின் பதிவையும், வெளியின் அமைப்பையும் சில நிமிட நேரம் நீங்கள் இருக்கையில் அமர்ந்தபடி அவதானிக்கலாம்.

மீண்டும் எந்திரங்கள் நான்கும் இயங்கத் தொடங்க, உங்கள் தரையை நோக்கிய பயணம் ஆரம்பிக்கும். எந்தச் சமதரையிலும் இந்தக் கலம் எளிதாக இறங்கும். வாற்பகுதி நிலத்திலும் முன்முனை மேலுக்குமாக நிறுத்தும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் 15 நிமிட விண்வெளிப்பயணம் இத்துடன் முடிவுறும். நீங்கள் 600 மைல் தொலைவைக் கடந்து திரும்பி விட்டீர்கள். நீங்கள் தயாரித்துப் பறந்த றொக்கெற் கலத்தின் பணச்செலவு 200,000 டொலர் மாத்திரமே.

இந்த றொக்கெற்றுக்குப் பொருத்த வேண்டிய நான்கு எந்திரங்களையும் நீங்கள் ருஷ்யாவிடம் வாங்கவேண்டும். அவற்றின் தொழிற் பெயர் ஆர்டீ 107 (RD 107). இந்த வகை எந்திரம் 1957 ஆம் ஆண்டு ருஷ்யர்கள் ஏவிய முதலாவது ஸ்புட்னிக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. மிகவும் நம்பகமான கோளாறு அற்ற எந்திரம் என்ற சிறப்பு இதற்கு உண்டு. ஒவ்வொரு எந்திரமும் பிரயாண ஆரம்பத்தில் 20.000 இறாத்தலுக்குச் சமனான தூக்கும் சக்தியைக் கொடுக்கும். மண்ணெண்ணெயும் திரவ உயிர் வாயுவும் கலந்த இதன் எரிபொருள் மிக மலிவானதென்று டேவிற் பேர்க்கெற் தெரிவிக்கிறார். எரிபொருளின் அமெரிக்கப் பெறுமதி 900 டொலர் மாத்திரமே.

இந்த விண்கலத்தின் மொத்த நிறை 15,650 இறாத்தல். இந்த நிறையில் ஒரு பயணியும், எரிபொருளும் அடங்கும். இந்த விண்கலத்தை நீங்கள் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. மிக முற்போக்கான கணனிகள் இதில் பொருத்தப்படும். அவை திட்டமிட்டபடி உங்களை விண்ணுக்குக் கூட்டிச்சென்று மீண்டும் பாதுகாப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிக் கொண்டுவந்து விடுமென நம்பலாம். எந்திரங்களை இயக்குவது, நிறுத்துவது, மீண்டும் இயக்குவது எல்லாம் கணனியின் வேலை. எந்திரங்களில் ஒன்று பழுதடைந்தாலும் விண்கலத்தைத் தரை சேர்க்கும் பணியைக் கணனி திறம்படச் செய்யும். பிரயாண ஆரம்பத்தின் சின்னமான இயக்கியை (Button) அழுத்த வேண்டியது தான் உங்கள் பங்களிப்பு.

ஏற்ற இறக்கத்தில் விண்கலங்கள் கடும் வெப்பத்தைத் தாங்க வேண்டியுள்ளது. இதற்காக கடும் வெப்பத்தைத் தாங்கும் சிலக்கன் கலவையில் தயாரிக்கப்பட்ட மேலோடு விண்கலத்தில் பொருத்தப்படுகின்றன. இந்த றொக்கெற் கலத்தில் அது அவசியம் இல்லைஎன்கிறார் போர்க்கெற். இந்த றொக்கெற் ரிற்றேனியம் (Titanium) என்ற உலோகத்தால் செய்யப்பட்டுள்ளதாலும், அது அதிகநேரம் விண்வெளியில் செலவிடாதபடியாலும் வெப்பம்குறைவு. அத்துடன் அதில் ஏற்றப்படும் எடையும் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவு. ஆகவே தாமதமின்றி வேலைகளைத் துரிதகதியில் தொடங்கும்படி கேட்கின்றோம்.

## சூழல் தூய்மை கெடாமல் புல், பூண்டு வேண்டப்படாத செடிகள் போன்றவற்றை நீராவி மூலம் அழிக்கும் முறை.

கிருமி நாசினிகள், களை நாசினிகள், செயற்கைப் பசளை போன்றவற்றிற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இவை மனிதரின் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் விளைவிப்பதாக அறிஞர்கள் இனங்கண்டுள்ளனர். கடும் மழை காலத்தில் இவை நிலத்தின் மேற்பரப்பில் இருந்து மெதுவாக இறங்கி நிலத்தடி நீரில் கலப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு 210 பாகை பரனைற் கொதிப்பேற்றப்பட்ட நீரை எந்திர சாதனம் மூலம் தெளிப்பதால் களை, புல்பூண்டை அழிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாதாரண உழவு எந்திரத்தில் இணைத்து இழுத்துச் செல்லக் கூடிய நீரைக் கொதிக்க வைக்கும் அலகு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கலனில் நீர் நிரப்பப்பட்டு அதிற் காணப்படும் அடுப்பு முடுக்கி விடப்படுகிறது. அடுப்பு டீசல் எரிபொருளில் இயங்குகிறது. உழவு எந்திரம் மணிக்கு நாலு மைல் வேகத்தில் மிக மெதுவாகச் செல்லும் போது கொதி நீர் வேண்டப்படாத தாவரங்கள் மீது பாய்ச்சப்படுகிறது. புல் முதலிய தாவரங்களில் வாழும் உயிரினங்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்க முடியாது. இது ஒரு பெருங்குறை. இந்த முறையில் புல் பூண்டைக் கட்டுப்படுத்த ஏக்கர் ஒன்றிற்கு 20 டொலர் செலவாகுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

## உருண்டை வடிவான பலூன் பிரயாணக் கப்பல்

கடலில் திரியும் கொள்கலன் கப்பல்களிலும் மலிவான பொதி சுமக்கும் வாயு நிரப்பப்பட்ட பலூன்கள் வடிவமைக்கப்படுகின்றன. இவை தூரங்களை வேகமாகக் கடக்குமென்றும், பாரங்களை மலிவாக எடுத்துச் செல்லுமென்றும் நம்பப்படுகிறது. இந்தவகை பலூன்கள் நீளமாகச் சுருட்டுப் போன்ற வடிவத்தில் இருக்கின்றன.

இப்போது கனேடிய நிறுவனமொன்று வட்ட வடிவமான 43 அடி குறுக்களவுள்ள பலூன் ஒன்றைத் தயாரித்துள்ளது. இது பத்துப் பிரயாணிகளையும், பொதிகளையும் சுமந்து செல்லும். செலுத்தும் எந்திரமும், ஓட்டியும் வட்டத்தின் அடிப்பாகத்திற் காணப்படுகின்றன. பிரயாணிகள் வெளியே பார்ப்பதற்கு வசதியாக வண்ணக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. திருப்புவதற்கும், ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் உதவும் சுக்கான் பலூனுக்கு வெளியே இருபுறமும் நீண்டு காணப்படுகின்றன. சுக்கானை ஓட்டித் தனது இருப்பிடத்திலிருந்து இயக்கலாம்.

ஓட்டியை விட இன்னும் இருவருடன் இந்தப் பலூனைத் தரையை விட்டுக் கிளம்பவும், இறக்கவும் முடியும். போக்குவரத்திற்குப் பாவிக்க முடியாவிட்டாலும் பலூனின் வெளிப்புறத்தில் பலவித விளம்பரங்களை ஒட்டியும், எழுதியும் முதலீட்டை மீளப் பெறலாம் என்று தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்தில் ஒரு கப்பல்

**“இசைவாக்கம் என்பது” ஓர் உயிரி குறிப்பிட்ட வாழ்விடத்தில் தொடர்ச்சியாக வாழ்வதற்குத் தன்னை மாற்றியமைக்கின்ற ஒரு சீராக்கல் செயல்முறையாகும்.— அல்ட்ஸ் ஹக்சிலி**

*தமிழில்:*
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

உலகிலுள்ள புல், பூண்டு முதல் மனிதன் வரை யாவற்றிலும் உயிர் உள்ளதென தத்துவஞானிகள் கருதுகின்றனர். தமது ஆராய்ச்சிகளின் முடிவாகச் சேர் ஜெகதீஸ் சந்திரபோஸ், தாவரங்கள் சுவாசிக்கின்றன, உணவை உருசிபார்க்கின்றன, உயிருடன் வாழ்கின்றன, ஒரு பாகத்திலிருந்து மற்றப்பாகங்களுக்கு உணர்ச்சியை அறிவிக்கின்றன என்று கூறியுள்ளார், விலங்குகள் மற்றும் மனிதர்களைப் போல் தாவரங்களுக்கு உணவு அவசியம், உருசி பார்ப்பதில் சில தாவரங்கள் மனிதர்களை மிஞ்சிவிடுகின்றன என்கிறார் போஸ்.

ஆரம்பகாலம் தொட்டு மனித வாழ்வு தாவரம், விலங்கினம் என்பனவற்றுடன் நெருக்கமாக இணைந்துள்ளது. சில விலங்குகள் மனிதரின் பகை என்றாலும் பெரும்பாலான மிருகங்கள் எமக்கு நேயமாகவும் எமது செல்வாதாரமாகவும் திகழ்கின்றன. விலங்குலகு மனித வாழ்வுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றது. விலங்கினம் பொருளாதாரப் பெறுமதிமிக்கது. இதற்காகவும் இயற்கை விஞ்ஞான நோக்கத்திற்காகவும், அழகியற் காரணிகளுக்காகவும் உலகின் விலங்கினங்களைப் பேணிப் பாதுகாப்பது மிக அவசியம்.

விலங்குகள் மதநோக்கங்களுக்காகவும் பாதுகாக்கப்படுகின்றன. புராதன எகிப்தில் கிட்டத்தட்ட 100 வகை விலங்குகள் தெய்வமாகக் கருதப்பட்டன. அறிவு வளர்ச்சியால் அவை நாளடைவில் செல்வாக்கு இழந்துள்ளன. நைல் நதியில் வெள்ளப்பெருக்கை முதலைகள் ஏற்படுத்துவதாக முதலில் நம்பப்பட்டது. பின்பு உண்மைக் காரணம் தெரியவர அவற்றை வணங்கும் வழக்கு நிறுத்தப்பட்டுள்ளது. கி.மு 525இல் எகிப்தைப் போரில் வென்ற பாரசீக மன்னன் கம்பீஸ் எருது வணக்கத்தை தடைசெய்தான். தானியங்களைக் கொறிக்கும் எலியைக் கொல்லும் பூனையையும் எகிப்தியர் நெடுங்காலம் வணங்கியுள்ளனர்.



ஒரு திமில் அராபியன் ஒட்டகம்

போக்குவரத்து வசதிகள் பெருகிய இக்காலகட்டத்திலும் மாடு, குதிரை, ஒட்டகம் போன்றவை இத்தேவைக்குப் பயன்படுகின்றன. மாடும் குதிரையும் வண்டில் இழுக்க உதவும். ஒட்டகம் பொதிகளையும் பயணிகளையும் தன்முதுகில் சுமக்கும். ஒட்டகம் பாலைவன வாழ்வுக்கு மிகப்பொருத்தமானது. அதன் உடலமைப்பு ஒவ்வொரு விதத்திலும் பாலைவனச் சூழலுக்கமைவாக உருவாகியுள்ளது.

ஒட்டகத்தில் இருவகை உள்ளன.

(1) ஒரு திமிலைக்கொண்ட அரேபியன் ஒட்டகம்.

(2) இரு திமிலைக்கொண்ட பக்ட்ரியன் ஒட்டகம் (Bactrian Camel).

ஒட்டகங்கள் நீண்ட கால்களையும், நீண்ட கழுத்தையும், கனத்த உரோமத்தையும், குஞ்சமுடைய வாலையும் பெற்றிருக்கும். பாதங்களில் கனத்ததோல்களில் இணைக்கப்பட்ட இரு குளம்புகள் இருக்கின்றன. குளம்புகளின் கீழ்ப்பாகம் கனத்து மெத்தென்றிருக்கும். உருவத்தில் பெரிய இரு குளம்புகளும் மணலில் நடக்கும்போது விரிந்து புதைவதைத் தடுக்கும். ஒரு திமில் ஒட்டகம் வட ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா – பாகிஸ்தான் வரையிலான மேற்கு ஆசிய நாடுகளில் காணப்படுகின்றது. ஆங்கிலேயர்கள் இதை அவுஸ்திரேலியாவின் மேற்குப்புற பாலைவனத்தில் புகுத்தியுள்ளனர். போக்குவரத்துப் பணிக்கு அவுஸ்திரேலிய மணல் வெளிகளில் அவை இன்று பயன்படாநிலையில் ஒட்டகக் கூட்டங்கள் எதேச்சமாக மனிதத் தொடர்பின்றி அங்கு உலாவுகின்றன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ரகம் மொங்கோலியா, வட - சீனப் பாலைநிலத்திலும், மத்திய ஆசியப் பெருவெளிகளிலும் உயிர்வாழ்கின்றது முதலாம் வகையிலும் இது உருவத்தில் பெரியது. குளிர்காலத்தில் உடல் முழுவதும் அடர்த்தியான உரோமத்தால் மூடப்பட்டிருக்கும். கோடைகாலம் தொடங்க உரோமம் படிப்படியாக உதிர்ந்துவிடும். இதனுடைய காற்குளம்பு கற்பாறைகளில் தாவி நடப்பதற்கும் பனி படர்ந்த பீடபூமியில் ஏறுவதற்கும் ஏற்றதாக அமைந்துள்ளது. கோபி பாலைவனத்திற்குரிய இப்பிராணி கடும் குளிரையும் தாங்கும் விதத்தில் உருவாகியுள்ளது. குளிர் வலயத்தின் செடிகளை இது உணவாக்கும். சில சமயம் உப்புநீரையும் இது அருந்தும். நீர் நிலைகளில் இது நீச்சலடிப்பதையும் ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர். வளர்ப்பு ஒட்டகங்களைவிட கட்டாக்காலியாகத் தேடுவார் அற்ற பக்ட்ரியன் ஒட்டகங்கள் யாவும் அழிந்துவிட்டதாக 1957 ஆம் ஆண்டிற்குமுன் நம்பப்பட்டது. மொங்கோலியப் பக்கமுள்ள அல்ராய் (Altai) மலைச் சாரலில் அந்த வருடம் தேடல் மேற்கொண்டபோது சிறு மந்தைகள் பார்வைக்குக் கிடைத்துள்ளன. பக்ட்ரியன் ஒட்டகத்தின் உரோமத்திலிருந்து விலைமதிப்பற்ற வெகு நேர்த்தியான போர்வைகளும் மேல் அங்கிகளும் மொங்கோலியாவில் செய்யப்படுகின்றன.

ஆய்வாளர்கள் ஒரு திமில் ஒட்டகத்தையும், இரு திமில் ஒட்டகத்தையும் இனக்கலப்புச் செய்து பார்த்துள்ளனர் பிறந்த குட்டிகள் யாவும் இரண்டு திமிலுடன் இருந்தன. ஒட்டகம் இரை மீட்கும் பிராணி. இக்காரணத்தால் மான், மரை. ஆடு. மாடு போன்றவற்றுடன் இணைத்துப்பேசப்படுகின்றது. எனினும் ஒட்டகம் ஒரு மூர்க்கத்தனமான, கோபம், அகங்காரம் மிக்க பிராணி. 4000 வருடங்களாக மனிதன் இதைப் பயன்படுத்தினாலும் இதுவரை அதை முற்றாகத் தன்வயப்படுத்த அவனால் முடியவில்லை, மனிதனுக்கும் ஒட்டகத்திற்கும் இடையில் நல்லுறவு இல்லை. மறுவளத்தில் மனிதனுக்கும் அவன் வளர்க்கும் குதிரை, ஆடு, மாடு போன்ற மிருகங்களுக்குமிடையில் அன்பும் புரிந்துணர்வும் ஒருவகை விசுவாசமும் நிலவுகின்றது.

ஒட்டகத்தின் மேற்புற மற்றும் உட்புற உடலமைப்பு பாலைவாழ்வுக்கு ஏற்றபடி அமைந்துள்ளன, இதன் கண்கள் கருமையாக இருப்பதால் சூரிய ஒளியின் பிரகாசத்தைத் தாங்கக் கூடிய கருப்புக்கண்ணாடி போல இருக்கின்றன. கண்களில் நீண்ட இமை அமைந்திருப்பதால் மண்புயல் வீசும்போது கண்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதன் மூக்குத்துவாரங்கள் தசைகளானபடியால் மண் உட்புகாமல் தடுப்பதற்குச் சிறிதளவோ அல்லது முழுவதுமோ மூடிக்கொள்ள வசதியாக உள்ளது. நீண்ட கழுத்தும், சிறிய தலையும், பெரிய கண்களும் கொண்டு இதன் உடல் கொள்ளளவை விட அதிகப் பரப்பளவுடன் இருப்பதால் உடல் வெப்ப இழப்பு குறைவாக உள்ளது.



இரண்டு திமில் பக்ட்ரியன் ஒட்டகம்

அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகத்தின் ஷிமிட் நீல்சன் என்ற விஞ்ஞானி அல்ஜீரியா நாட்டில் பலகாலம் தங்கி ஒட்டகம் சம்பந்தமான விரிவான ஆய்வுகளைச் செய்துள்ளார். இதுவரை காலமும் நிலவிய பல தவறான கணிப்பீடுகள் இதனால் நீங்கியுள்ளன, ஒட்டகம் தனது வயிற்றில் உள்ள பைகளில் குடிநீரைச் சேமிப்பதில்லை; கடும் வறட்சி காலத்தில் ஒட்டகத்தைக் கொன்று இந்தப் பைகளில் உள்ள நீரை அரேபியர்கள் குடிப்பதாகக் கூறும் கதைகள் ஆதாரமற்றவை. ஒட்டகம் குடிக்கும் நீர் அதன் உடற்றிசுக்களுக்குச் செல்கின்றது.

கோடைகாலத்தில் நீரில்லாமல் ஒட்டகம் பொதி சுமந்தபடி ஒரு வாரம் வரை பணியாற்றும். குளிர் காலத்தில் நீரில்லாமல் அதனால் இரண்டு வாரம் செயற்படமுடியும். ஒருமுறையில் 10 நிமிடங்களில் 12 கலன்நீரை அது குடிப்பதை நீல்சன் அவதானித்துள்ளார். ஒட்டகம் நீரில்லாமல் பிரயாணம் செய்யும்போது இழந்த உடல் நீரை ஈடுசெய்யும் அளவை மாத்திரம் குடிக்கும், மேலதிகமாக அது குடிப்பதில்லை என்கிறார் டாக்டர் நீல்சன். உடலில் உள்ள நீர் அதிகளவு வற்றியநிலையில் இருக்கும்போது தான் அது பெருமளவு நீரைக் குடிக்கும். அல்லாவிடின் அதன் நீர்த்தேவை மிகக் குறைவு நீர் வறண்ட நிலையில் மெலிந்தும் நீர் குடித்தபின் பருத்தும் காணப்படுவதில் காரணம் அது உட்கொள்ளும் நீர் திசுக்களுக்குச் சென்றடைவதால்தான்.

ஒட்டகத்தின் வயிற்றில் உள்ள உணவு தங்கும் அறை போன்ற பைகளில் துர்நாற்றமுடைய திரவம் உள்ளதை நீல்சன் கண்டுள்ளார். இது செரிக்கப்பட்ட திரவநிலை உணவு என்பது அவருடைய முடிவு. அரேபியன் ஒட்டகம் பாலைவனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் செடிகளை உண்ணும். அதை வளர்ப்போர் காய்ந்த பேரீஞ்சுப் பழத்தையும், தானியங்களையும் அதற்கு உணவாகக் கொடுப்பர். பசி வந்தால் ஒட்டகம், படுக்கும் பாய், சேலை, பழையதோல், ஏன் கூடாரத்தையே தின்றுவிடும், அதனோடு கூடி வாழ்வது கடினம்.

ஓர் ஒட்டகம் தனது உடலில் 25 வீதம் நீரை இழந்தாலும் கஷ்டப்படுவதில்லை. மனிதர் 12 வீத நீரை இழந்தால் பெரும் அவதியுறுவர். இதன் காரணம் மனிதனின் திசு, குருதி ஆகிய வற்றில் இருந்து நீரிழப்பு நேருகின்றது. இதனால் குருதியின் பாகு நிலை உயர்ந்து இதயத்தின் வேலை அதிகரிக்கின்றது. மேற்கூறியதுபோன்று ஒட்டகம் தனது திசுவிலிருந்து மாத்திரம் நீரை இழக்கிறது.

ஒட்டகத்தின் திமில் ஆற்றலின் சேமிப்பிடமாகும். அரேபியன் ஒட்டகத்தின் திமிலில் 100 இறாத்தல் கொழுப்புப் பொருள் இருக்கலாம். ஓர் இறாத்தல் கொழுப்பானது ஒரு கலன் நீருக்குச் சமம். ஒட்டகத்திற்குத் தேவையான போது இக் கொழுப்புப் பொருள் சிறிதளவு சிதைந்து சக்தியையும், நீரையும் கொடுக்கின்றது. பக்ட்ரியன் ஒட்டகத்தின் திமில்களும் இவ்வாறு அமைந்துள்ளன. அதன் உட்புறத்தில் எலும்புப் பாகம் கிடையாது. தோல் போர்த்த கொழுப்புப் பெட்டகமாகத் திமில் இடம்பெறுகின்றது.

கோடையில் ஒட்டகம் மிகக் குறைவான அளவு சிறு நீரைக் கழிக்கின்றது. அதன் வியர்வையும் மிகக் குறைவு. ஒட்டகத்தின் வெப்ப நிலை காலையில் 30 பாகை செல்சியசாக இருந்து சிறிது சிறிதாக ஏறி நடுப்பகலில் 40 பாகை செல்சியசாக உயரும். அதனுடைய தடித்த தோல் பகலில் வெப்பத்திலிருந்தும், இரவில் குளிரிலிருந்தும் அதைக் காக்கின்றது. ஒட்டகத்தின் தோலிலிருந்து பல்வேறு பொருள்கள் செய்யப்படுகின்றன. இறந்த பின் ஒட்டகத்தின் தோல் உரித்தெடுக்கப்படுகின்றது.

ஒட்டகம் வேலைக்குக் கள்ளன். வேலைக்குக் கிளம்பும் போது அது கடித்தும், உதைத்தும், பெரும் குரலெழுப்பியும் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும். அதை விரும்பி வளர்ப்போர் அரிது. எனினும் ஆசிய, ஆபிரிக்கப் பாலைவன வாழ்வுக்கு அதை விட்டால் வேறு கதியில்லை. அதற்கு அடிக்கடி கோபம் வரும். எமது மேலாண்மையைக் காட்டத் தவறின் அது எம்மை உதறிவிடும். அதன் கடி மிகவும் கொடியது. காரணம் அதன் பற்களின் அமைப்பேயாகும். பிறக்கும் போது அதன தாடை ஒவ்வொன்றிலும் 6 உளிப் பற்கள் உள்ளன. அத்துடன் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு கோரைப்பல்லும், பின் கடைவாய்ப் பற்களும் உள்ளன. ஒட்டகம் வளர வளர மேல் தாடையிலுள்ள 6 உளிப் பற்களைத் தவிர மற்றப்பற்கள் விழுந்துவிடும். இந்த ஆறும் கோரைப் பற்கள் போன்ற அமைப்பைப் பெற்றுவிடும். இதனால் ஒட்டகம் நாயைவிட இரு மடங்கு பயங்கரமாகக் கடிக்கின்றது.

அரேபியன் ஒட்டகம் இனக்கலப்புச் செய்த பதினொராவது மாதம் ஒரு குட்டியை ஈனும். பக்ட்ரியன் ஒட்டகம் சற்றுக் கூடுதலான காலம் எடுக்கும். பிறந்த அடுத்த நாளே தாயுடன் மேய்ச்சலுக்குச் செல்லும். மூர்க்கத்தனமான ஒட்டகப் பிராணிக்கு பிள்ளைப் பாசம் அதிகம். பொதிகள் சுமந்தபடி அது வரிசையாகச் செல்லும் போது தனது குட்டியைப் பார்த்தபடி இருத்தல் வேண்டும். ஆகையினால் முன்னுக்குச் செல்லும் ஒட்டகத்தின் வயிற்றுப் பகுதியில் பெட்டி ஒன்று கட்டி அதில் குட்டியைத் தங்க வைப்பர். அதன் மேல் கண் வைத்தபடி தாய் பின் தொடரும். தனது மூன்றாவது வயது தொடக்கம் குட்டி பொதி சுமக்கத் தயாராகிவிடும். 15 தொடக்கம் இருபதுவயது வரை அது 500 – 600 இறாத்தல் பாரத்தையும், ஒரு பிரயாணியையும் காவிச்செல்லும். இருபது வயது தொடங்கி 30 வயது வரை குறைந்த எடையைக் காவும். ஒட்டகத்தின் சராசரி வயது 50. பெருஞ் சுமையுடன் நாளொன்றுக்கு 25 மைல் கடக்கும் வலிமை ஒட்டகத்திற்கு உண்டு.

பல மில்லியன் வருடங்களுக்கு முன் ஒட்டகம், முயல் போன்ற சிறிய உருவுடன் வட ஆபிரிக்காவில் உற்பத்தி ஆனதாகப் புதைபடிவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. காலப் போக்கில் நீண்ட கால்களும், கழுத்தும் அதற்குத் தோன்றியதாக விலங்கியலாளர்கள் அறிவிக்கின்றனர். உருவ வளர்ச்சி பெற்ற ஒட்டகக் கூட்டத்தின் ஒரு பகுதி தென் அமெரிக்கா சென்றதாகவும், இன்னுமொரு பகுதி நிலப் பாலங்கள் மூலம் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களுக்குப் பரவியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. தென் அமெரிக்காவின் ஒட்டகங்கள் அழிந்து விட்டன. ஒட்டகக் குடும்பத்தைச் சேர்ந்த லாமா (Llama) விக்கியுனா (Vicuna) குவானக்கோ (Guanaco) அல்பகா (Alpaca) போன்ற நான்கு வகைப் பிராணிகள் தென் அமெரிக்காவில் இன்று காணப்படுகின்றன.

பாலைவனம் வாழ்வோர் ஒட்டகத்தின் பாலைக் குடிப்பர், இறைச்சியை உண்பர். அதனுடைய ரோமத்திலிருந்து ஆடை, கூடாரம், கயிறு, போர்வை, கம்பளம் போன்றவை செய்யப்படுகின்றன. அதனுடைய எரு காய்ந்த பின் எரிபொருளாகும். மத்திய கிழக்கில் ஒட்டகங்கள் ஒட்டப் பந்தயத்திற்காகப்பயிற்றப்படுகின்றன. ஒட்டகத்தின் நடை வித்தியாசப்பட்டது. ஒவ்வொரு பக்கமும் உள்ள முன்னங்காலும், பின்னங்காலும் ஒன்று சேர்ந்து முன்னோக்கிச் செல்வதால் அது தனித்துவமான தாவு நடையில் செலும். இதில் பிரயாணம் செய்து பழக்கப்படாதோர் வாந்தி, தலைச்சுற்று போன்றவற்றால் அவதியுறுவர். பாலைவனக் கப்பல் என்று ஒட்டகம் குறிப்பிடப்படுவதற்கு அதன் நடையும் ஒரு காரணம். ஒட்டகம் எழுப்பும் ஒலிகள் அரேபிய மொழியின் அடிப்படையாகும் என்ற கருத்தை ஷேபர் என்ற ஆய்வாளர் முன்வைத்துள்ளார். இதில் எவ்வளவு உண்மை என்று தெரியவில்லை. ஆனால் ஆதிகால ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க நெடுந்தூர வர்த்தகத்திற்கும், பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் ஒட்டகத்தின் பங்களிப்பு ஒன்றும் சிறிதல்ல.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான்

## காந்தியைக் குள்ளநரி என்று ஜின்னா பகிரங்கமாக இகழ்ந்தார்.

# பிரிவினையில் பிறந்த நாடு

'தமது தவறுகளை நியாயப்படுத்தப் பொருத்தமான நீதி உரைகள் இல்லாத நாடேயில்லை. -அமெரிக்க அதிபர் கெனடி இந்தியப் பிரதமர் நேருவுக்கு எழுதிய கடிதத்தில் ஒருவரி (1961).

*தமிழில் :*

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

இந்திய உபகண்ட வரலாற்றில் பிரித்தானியருக்கு நிலையான இடமுண்டு. மகாராஜாக்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், சமின்தார்கள் பரம்பரையாகத் தன்னாட்சி செய்த பெருநிலப் பரப்பை ஒருமைப்படுத்தி மைய அரசை நிறுவி இந்தியாவுக்கு இன்றைய உருவமைப்பைப் பிரித்தானியர் கொடுத்தனர். எல்லாவகையிலும் அவர்களின் வாரிசாகவே தற்கால இந்தியா அமைகின்றது. பல நூற்றாண்டாகக் கட்டிக் காத்த ஒருமைப்பாட்டைத் தாம் வெளியேறு முன் பிரித்தானியர் கைவிட்டனர். நிலத்தை மூன்றாகப் பிரித்து இரண்டு நாடுகளாக்கினர். இன்று மூன்று துண்டும் மூன்று தனி நாடுகளாகி விட்டன.

ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களில் தமது ஆட்சிக்குட்பட்ட நாடுகள் யாவற்றிலும் பல்லின மக்களை ஒன்றிணைத்து நிர்வகிப்பது பிரித்தானிய காலனித்துவக் கொள்கை. வெளியேறும்போது எண்ணிக்கையில் குறைந்த இனத்தைத் தொகை கூடிய இனத்தின் பிடியில் விட்டுச்செல்வதும் பிரித்தானியக் கொள்கை. இந்தியாவின் பெரும்பான்மை இந்துக்களின் வேண்டுதலை மீறி நாட்டைப் பிரிக்கவேண்டிய காரணம் என்ன?



*காலிழந்த நண்பனைச் சுமந்தபடி பாகிஸ்தான் வரும் காஷ்மீர் அகதி.*

வெகு சாதுரியமாக மட்டுப்படுத்தி அடக்கி வைத்திருந்தாலும் இந்து-முஸ்லிம் முரண்பாடுதான் பிரித்தானிய இந்தியாவின் தலையாய பிரச்சனை. 47 இல் இந்துக்களின் தொகை 300 மில்லியன், முஸ்லிம்களின் எண்ணிக்கை 100 மில்லியன். இந்து தனது இறைவனை எந்த உருவிலும் காண்பான்-மனிதன், மரம், கல், பாம்பு, யானை முடிவேயில்லை. முஸ்லிமின் ஆண்டவன் அல்லா ஒருவனே. உருவ வழிபாட்டைக் குர் ஆன் முற்றாகத் தடை செய்கின்றது. இரு மதங்களும் புரிந்துணர்வுக்கு வர இயலாது. அந்நிய மதம் என்ற பழிச்சொல்லும் இசுலாமுக்கு இருப்பது கண்கூடு. அத்துடன் இந்த மதத்தைத் தழுவிய இந்தியர்கள் பெருப்பாலும் சாகியத்தின் கடைநிலையில் இருந்து வந்தவர்கள். உயர் சாதி இந்துக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்கள். ஆகவே இந்தியா பிரிவதற்கு மதம் தான் முக்கிய காரணம்.

இந்திய உபகண்ட மண்ணில் முஸ்லிம்களுக்குத் தனி நாடு வேண்டும் என்று முதன் முறையாகப் பரப்புரை செய்தவன் றகமத் அலி (Rahamat Ali). பட்டதாரியாகிய இவன் தனது நாற்பதாவது வயதில் ஜனவரி 28, 1933 என்று திகதியிட்டுப் பாகிஸ்தானின் தேவையை உணர்த்தி அறிக்கை விடுத்தான். இந்த அறிக்கையின் முகவுரையில், 'இந்தியா ஒரு நாடு' என்பது வெறும் பொய் என்று கூறியுள்ளான். முஸ்லிம்கள் வாழும் பஞ்ஜாப், காஷ்மீர், சிந்த், பலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிஸ்தான், வடமேற்கு எல்லை மாகாணங்கள் யாவும் ஒன்றிணைந்த முஸ்லிம் நாடு காலத்தின் தேவை என்றும் கூறினான். இங்கிலாந்தில் வாழ்ந்து பணியாற்றி அங்கேயே மடிந்த றகமத் அலி தான், பாகிஸ்தான் என்ற பெயரை அதில் இணையும் மாகாணங்களின் முதலெழுத்துக்களை ஒன்று சேர்த்து உருவாக்கியவன்.

இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து கூட்டாக நன்மை பெறுவது பகற் கனவு என்று றகமத் அலியைத் தொடர்ந்து பல முஸ்லிம் தலைவர்கள் எண்ணினர். தேசபிதா காந்தி தனது பஜனையில் அல்லாவின் நாமத்தை இணைத்தாலும் அவருக்கு இராமர், இந்து, இந்தி, இந்தியா போன்றவையே தாரக மந்திரங்கள். காங்கிரஸ் உதட்டளவில் மதச்சார்பின்மை பேசினாலும் இந்துமதச் சார்புள்ள நிறுவனம் என்பதில் ஐயமில்லை. பிரித்தானியர் வெளியேறியபின் இந்து இந்தியாவில் தாம் காணாமற் போய்விடுவோம், தனித்துவத்தை இழந்துவிடுவோம் என்ற முஸ்லிம்களின் அச்சத்தில் பொறுத்த நியாயம் உள்ளது.

இந்த அச்சத்திற்கு எழுத்துருக் கொடுத்து அதற்குப் பரிகாரமும் முன் வைத்தவர் றகமத் அலி என்பது வரலாறு. இவருடைய அறிக்கையை முஸ்லிம்களின் குரலான முஸ்லிம் லீக் (Muslim League) தனது செயல்திட்டமாக ஏற்றதில் வியப்பில்லை. தனது அறிக்கையை முஸ்லிம் தலைவர்களுக்கு அறிமுகம் செய்வதற்காக இலண்டன் மாநகர் உல்லாச விடுதியில் றகமத் அலி விருந்துபசாரம் ஒன்றை ஒழுங்கு செய்தான். பெருமளவு மது அங்கு குடித்துத் தீர்க்கப்பட்டுள்ளது. பேருரைகள் நிகழ்த்தப்பட்டன. இங்கு பிரசன்னமாயிருந்த முகமது அலி ஜின்னா (Mohammed ali Jinnah) பாகிஸ்தான் நடைமுறை, சாத்தியமற்ற கானல்நீர் என்று இகழ்ந்து பேசினார்.

பிற்காலத்தில் பாகிஸ்தானின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் இந்த ஜின்னா. இந்தியாவின் புகழ்பூத்த வழக்குரைஞரும், அரசியல்வாதியுமான இவர் தனது அரசியல் வாழ்வை இந்து-முஸ்லிம் நட்புறவை முன்வைத்தே ஆரம்பித்தார். காந்தி பிறந்த கத்தியுவார் மாகாணத்தில் பிறந்த இவ



பெனாசிர் பூட்டோ

ரின் தந்தை வழிப்பாட்டனார் இந்துவாகப் பிறந்து மதம் மாறியவர். காந்தியைப் போல் இவரும் இலண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பியவர். காந்தியைப் போல் ஆண்டி வேடமிட மறுத்து இறுதிவரை ஆங்கிலேய ஆடை அணிந்தார். தனது வாழ்நாளில் பத்து வருடங்களுக்கு மேல காங்கிரஸ் அமைப்பில் உயர் உறுப்பினராக இடம்பெற்றார்.

ஜின்னா காங்கிரசை வெறுக்கக் காந்தியே காரணம். கால் நூற்றாண்டுக்கு மேலாக இந்த வெறுப்பு நீடித்தது. முடிவில் பாகிஸ்தானாக உருப்பெற்றது. 1937 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் அவர்களுடன் அதிகாரப் பங்கீடு செய்யக் காங்கிரஸ் மறுத்தது ஜின்னாவின் கண்ணைத் திறந்து தீவிர பாகிஸ்தான் வாதியாக்கியது இதுதான். ஜின்னாவைப்போல் மத ஆசாரங்களைக் கடைப்பிடிக்காத பிறிதொரு முஸ்லிம் தலைவரைக் காண்பது அரிது. பகிரங்கமாக மது அருந்துவார். நிறையச் சிகரட் பிடிப்பார், பன்றி இறைச்சி உண்பார். குர்ஆன் படித்ததே கிடையாது. மசூதிப்பக்கம் ஒரு போதும் சென்றதில்லை. கடவுள் நம்பிக்கையிலும் தன்னம்பிக்கையே அவரிடம் மேலாக இருந்தது. 1933 இல் பாகிஸ்தான் வேண்டாம் என்றவர் 1937 இல் தீவிர பாகிஸ்தான் வாதியாகி இறுதிவரை போராடி அவர் வென்றெடுத்த நாடே இன்றைய பாகிஸ்தான்.

ஆறடிக்குமேல் உயரமானவர், ஆனால் நிறையில் மிகக் குறைந்தவர் ஜின்னா. மிக முற்றிய காசநோய் அவரைப் பீடித்திருந்தது. அவருடைய அந்தரங்க வைத்தியரின் கூற்றுப்படி அவரை வாழவைத்தவை, 'விஸ்கி, சிகரெட், முரட்டுப்பிடிவாதம்'. நெடுங்காலம் ஜின்னா திருமணம் செய்யவில்லை. 41 வயதினராக இருக்கும்போது நெருங்கிய பார்சி இன நண்பரின் மகள் றத்தன்பாய் மீது பெருங் காதல் கொண்டார். 17 வயதுடைய றத்தி அவர் காதலை ஏற்றாள். கோடீஸ்வரரான தந்தை சொல்மீறி ஜின்னாவுடன் வெளியேறினார். அவர்களுடைய மண வாழ்வு 10 வருடம் நீடித்தது. பேரழகியான றத்தி கலகலப்பான பேர்வழி, உல்லாசி, நண்பர்கள் புடைசூழ மகிழ்ந்து வாழ்வதில் ஆர்வமுடையவள். ஜின்னாவால் ஈடுகொடுக்க முடியவில்லை. மன முறிவு ஏற்பட்டதாகவும், றத்தி தூக்கமாத்திரை அதிகளவில் எடுத்து இறந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு ஒரு மகள் இருக்கிறார். பாகிஸ்தான் செல்ல மறுத்துப் பம்பாயில் வாழ்கிறார். முஸ்லிம் தலைவர் ஜின்னாவின் மனைவி முஸ்லிம் அல்லாத பார்சி என்பது குறிப்பிடத்தக்கது.

ஜின்னா கல்நெஞ்சர், பாகிஸ்தான் என்ற வைராக்கியத்தில் ஊறியவர். ஆனால் மனைவியின் புதைகுழியில் மண்போட்டபின் மனமுடைந்து கதறியதாக வரலாற்று



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.



நூல்கள் தெரிவிக்கின்றன. மனைவி இறந்தபின் அவர் போக்கில் வித்தியாசம் காணப்பட்டதாக ஒத்துக் கொள்ளப்படுகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் இங்கிலாந்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றமே இந்தியா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளுக்கு விடுதலை கிடைக்கக் காரணம். தொழிற்கட்சி அரசின் தலைவர் கிளெமென்ற் அற்லி (Clement Atlee) மனித வரலாற்றில் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தைப் படிப்படியாகக் குறைக்கத் தீர்மானித்தார். இதன் காரணமாக முதற்கண் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதே குறியாக மவுன்பேற்றன் பிரபுவை (Lord Mount batten) அரச பிரதிநிதியாக அனுப்பி வைத்தார். ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மைத்துனரான இப்பிரபு அரசரின் ஒப்புதலையும் பெற்றுக்கொண்டார். சகல தரப்பினருடனும் பேசி ஆட்சி அதிகாரத்தை வழங்கிவிட்டுத் திரும்புமாறு அவருக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வந்து நிலைமையை அவதானித்தபோது பல தடங்கல்கள் காணப்பட்டன. காங்கிரஸ் தலைவர்கள் முஸ்லிம்களுக்குத் தனிநாடு என்ற கோரிக்கையை எதிர்த்தனர். ''எனது சவத்தின் மேலால் பாகிஸ்தானைக் கொடுங்கள்'' என்றார் காந்தி. பாகிஸ்தான் என்ற இலட்சியத்திற்காக உள்நாட்டு யுத்தம் ஒன்றை நடத்தத் தயங்கமாட்டோம் என்றார் ஜின்னா. ''இந்தியாவைப் பிரி அல்லது இந்தியாவை அழி'' என்று அவர் முழங்கினார். (Divide or Destroy) கவர்ச்சியான சாதுரியமான பேச்சுக்களால் ஜின்னாவை மாற்ற மவுன்பேற்றன் எத்தனித்தார், ஆனால் முடியவில்லை. காங்கிரசார் பிரிவினைக்கு ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஈற்றில் ஏற்பட்டது. மவுன்பேற்றன் பிரபுவுக்கு முன் அரச பிரதிநிதியாக இருந்த வேவல் பிரபு (Lord Wavell) சொன்னதை அவர் நினைவூட்டினார். நாம் திடீரென வெளியேறுவோம், முஸ்லிம்களும், இந்துக்களும் பட்டதுபாடு. இது காங்கிரசாருக்கு ஒத்துவரவில்லை. சட்டபூர்வமான கையளிப்பையே அவர்கள் விரும்பினர்.

இந்தியா விடுதலை பெறக் காந்தி காரணமாய் இருக்கலாம். ஆனால் உப கண்டம் இரண்டுபட ஜின்னாவே காரணம். இப்பிரிவிடுதலின் விளைவுகளால் மனித வரலாற்றில் பெரும் களங்கம் ஏற்பட்டுள்ளது. உபகண்டத்தின் உகாக்திலிருந்து மக்கள் தொகையில் இரண்டாம், ஐந்தாம் இட நாடுகள் தோன்றுவதற்கு எவ்வளவு குருதி கொட்டப்பட்டதென்று அளவிடமுடியவில்லை. நிலப்பங்கீடு செய்வதற்கு இங்கிலாந்திலிருந்து வந்த சேர் சிறில் றட்கிளிவ் (Sir Cyril Radcliffe) இந்தியச் சூழலை நன்கு அறியாதவர். அவர் ஓர் ரோணைவ வரைபடத்தில் சில கோடுகள் கீறினார். அவை மக்களின் தலைவிதியை மாற்றின. உயிரை வாங்கின. பஞ்சாபைப் பிரித்ததால் உலகின் மிகப்பெரிய திடீர் இடப்பெயர்வு நிகழ்ந்துள்ளது. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு புதிய நாட்டிற்கு ஓடினர். அதுமட்டுமா, ஹிற்லர் கொன்ற யூதர்களின் எண்ணிக்கைக்கு அடுத்தபடியான தொகையில் இந்து முஸ்லிம் கொலைகள் நடைபெற்றன. ஆசிய வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய படுகொலைகள் என்று நிச்சயம் வர்ணிக்கலாம். இடம்பெயர்ந்த மக்களின் தொகை 10 மில்லியன். உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,225,000.

பிரிவினையின் தாக்கங்கள் இன்றும் உணரப் படுகின்றன. இரு நாட்டு உறவுகள் 1947 தொட்டு பரஸ்பர விரோத நிலையில் இருக்கின்றன. ஒருவரையொருவர் அழிக்க அணுகுண்டுவரை தயாராகி விட்டன. பாகிஸ்தானின் இடது கையான கிழக்கு வங்காளம் இன்று இந்திய உதவியுடன் வங்காளதேசமாகி விட்டது. பாகிஸ்தான் உதவியுடன் காஷ்மீர், பஞ்ஜாப், வட-கிழக்கு எல்லைப் பிரதேசங்களில் குழப்பங்கள் நடைபெறுகின்றன. இந்தியாவிலிருந்து வெளியேறி சிந்து மாகாணத்தில் குடியேறிய முகாஜீர் இனத்தவரால் பாகிஸ்தான் துண்டாடப்படும் அபாயம் எழுந்துள்ளது. முகாஜீர்கள் முஸ்லிம்கள் என்றாலும் அவர்களை ஏற்க சிந்து மாகாணத்தவர் மறுத்துள்ளனர். வன்முறைக்குப் பதிலடி வன்முறை தான். முகாஜீர் இனத்தவர் எம். கியூ. எம் (M·Q M) என்ற முகாஜீர் தேசிய இயக்கத்தை ஆரம்பித்து பதில் தாக்குதல்களை நடத்துகின்றனர். பாகிஸ்தானின் மிகப் பெரிய துறைமுகம், பொருளாதார மையம், தொழிற்பேட்டை ஆகிய கராச்சி நகர் இதனால் ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளது.

எம். கியூ. எம். இயக்கத் தலைவர் அல்ராப் ஹூசேன் இலண்டன் மாநகரில் இருந்தபடி பதில் தாக்குதல்களை நடத்துகிறார். இந்தியாவின் கைக்கூலி, கொலைகாரன், கடத்தல்காரன் போன்ற வழமையான குற்றச் சாட்டுக்களை அரசு அவர்மீது சுமத்தியுள்ளது. கராச்சி நகரின் 12 மில்லியன் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் முகாஜீர் வந்தேறு குடிகள் என்பதை ஒத்துக் கொள்ளும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. அரசியல் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. ஆனால் வன்முறைகள் தொடருகின்றன. கராச்சியின் அவலம் நாட்டின் கேவல நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு. திடீர் வேலை நிறுத்தங்கள், இசுலாம் மதப் பிரிவுகள் நடத்தும் படுகொலைகள், தொழிற்சாலைகளின் கதவடைப்புக்கள் நாட்டை நாசம் பண்ணுகின்றன.

வங்காளதேசம் பிரிந்தபின் பாகிஸ்தானின் மக்கள்தொகை 130 மில்லியனாகச் சுருங்கி விட்டது. எனினும் பிரச்சனைகள் உச்சத்தில் இருக்கின்றன. போதைவஸ்து ஏற்றுமதியில் பாகிஸ்தான் மூன்றாம் இடம் வகிக்கின்றது. முதலாம், இரண்டாம் இடங்களைப் பர்மாவும், ஆப்கானிஸ்தானும் பிடித்துள்ளன. ஆப்கான் யுத்தத்தால் போராயுதங்கள் பாகிஸ்தானில் மலிந்துள்ளன. பல அந்நிய நாடுகளில் தேடப்பட்ட பயங்கரக் குற்றவாளிகள் பாகிஸ்தானில் பகிரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாகச் செயற்படுகின்றனர். உலக வங்கி அதிகாரிகள் கடனுதவிகளை நிறுத்தியுள்ளனர். 'அங்கு நடக்கும் பலாத்காரங்களும், தொழில் வீழ்ச்சியும்' இதற்கு முக்கிய காரணங்கள் என்கிறார் உலக வங்கி முகவர்.

அண்மையில் ஒரு நேர்காணலில் அல் ராப் ஹூசேனை இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது: நீங்கள் கேட்பதுதான் என்ன? நாங்கள் கராச்சியையும், அதன் சுற்றாடலையும் எமக்கொரு தனி நாடாகத் தரும்படி கேட்கவில்லை. சிந்து மாகாணத்தின் மக்கள் தொகையில் நாம் 50சதவீதத்தினராக இருக்கிறோம். எமது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. நிர்வாகசேவை, இராணுவம், மாகாண மற்றும் மத்திய அரசு, ஆகியவற்றில் எமது தொகைக்கும் பொருத்தமான வாய்ப்புக்கள் தரப்படவில்லை. சிந்து மாகாணத்தில் வசூலாகும் வரிகளில் 70 சத விதத்தை நாம் கொடுக்கிறோம். சிந்து மாகாணத்தின் பொருள்வளர்ச்சி எம்மில் தங்கியுள்ளது. ஆனால் தேசிய வருமானத்தில 5 சத வீதம் கூட எம மக்களுக்குச் செலவிடப்பட வில்லை. நாம் நடத்தும் போர் அரசுக்கு எதிரானதல்ல. எம்மைக் கொன்று குவிக்கும் ஆயுத படைகளையே நாம் தாக்குகிறோம். எமது இனம் அழிக்கப் படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

பாகிஸ்தானில் பிரச்சனைகளுக்குக் குறைச்சல் இல்லை. இவை யாவற்றிலும் பாகிஸ்தான் நிலைக்குமா என்பதே முக்கிய கேள்வி. இனங்களுக்கிடையில் பரஸ்பர சந்தேகம், மோதல், பிரிவினை வாதம் நன்றாகத் தலைதூக்கியுள்ளன. பாகிஸ்தானின் 48 வருட கால வரலாற்றில் இவ் வருடம் படுமோசமாகத் தெரிகின்றது.

அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ மலேசியா வந்தபோது பத்திரிகையாளர் கேட்ட முக்கிய கேள்வி: நாட்டின் நிலை கட்டுக்கு அடங்காமற் போவதாக அறிகிறோம். அரசு செயலிழந்து விட்டதா? நாட்டின் பிரச்சனைகள் நான் பதவியேறும் போது இருந்தவை. வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் சர்வதேசப் பயங்கரவாதிகளும், போதை வஸ்து, மற்றும் போராயுதங்கள் கடத்துவோரும் தலை தூக்கியுள்ளனர். பஞ்ஜாப் மாகாணத்தில் இன, மொழி அடிப்படையில் பிரிவினை வாதமும், சிந்து மாகாணத்தில் முகாஜிர்களின் வன்முறையும் இயல்பு நிலையைச் சீரழிக்கின்றன. பாகிஸ்தானைத் துண்டாடும் நோக்கில் நான் பிரதமராக வரவில்லை என்று பூட்டோ பதில் கூறினார்.

ஆனால் பெனாசீர் என்னதான் இறுமாப்பாகச் சொன்னாலும் பாகிஸ்தானின் இஸ்திரமின்மை வெளியில் தெரிகின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுகளில் ஒன்று மாத்திரம் 5 வருடம் நிலைத்துள்ளது. 47 தொடக்கம் இதுவரையில் 5 தடவை இராணுவம் அரசைக் கைப்பற்றியுள்ளது. ஐநா ஆய்வு செய்த 173 நாடுகளில் பாகிஸ்தான் வாழ்க்கைத்தர நிலையில் 132 ஆம் இடத்தில் இருக்கிறது. அதன் தேசிய வருமானத்தில் 35 சத வீதம் ஆயுதபடைகளுக்குச் செலவாகின்றன. இனக் குழப்பங்கள் காரணமாக 1981 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் தொகை கணிப்பீடுகள் செய்யப்படவில்லை. 1980 கணக்குகளின் படி நாட்டு மக்களில் 50 சத வீத பஞ்ஜாபிகளும், 13 சதவீத சிந்திகளும் ஆதிக்க நிலையில் இருக்கின்றனர். பலுச்சி, முகாஜிர் போன்ற சிறுபான்மையினர் நசுக்கப்படுகின்றனர். சுன்னி சியா மதப் பிரிவுகள் கடும்போர் நடத்துகின்றனர். ஈரான் ஆதரவு பெற்ற சியாக்களும், சவுதி அரேபியா உதவி பெறும் சுன்னிகளும் பலப் பரீட்சை நடத்துகின்றனர்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆதரவாளர்களை நசுக்குவதிலும், தனது அரசியற் பலத்தை உயர்த்துவதிலும் பெனாசீர் கருத்தாக இருக்கிறார். முன்பு இரண்டு வருடம் பிரதமராக இருந்து ஊழல் குற்றச்சாட்டில் தூக்கி எறியப்பட்டவர் பூட்டோ. இப்போது இரண்டாவது சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தினால் வரலாற்றில் தமது இடத்தையும், நாட்டின் ஒருமைப் பாட்டையும் அவர் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஆதாரம்: ஆசியாவீக் ஜூலை 28, 1995
பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ, ஓகஸ்ட் 10, 1995.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சீனக் கடற்படை வீரர்கள்

# தென் - சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கம்

## தென் - கிழக்காசிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் சீனாவின் பாதிப்பு.

'சீனா உறங்கட்டும், அது துயிலெழுந்த பின் உலகம் நடுங்கும்.' — நெப்போலியன் (1769 - 1821)

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

சீன மக்கள் நீண்ட வரலாற்றிற்கும், பாரம்பரியத்திற்கும் உரித்தாளர் ஆவர். ஷான்ங் (கி. மு 1523-1028), ஹான் (கி. மு 202-கி. பி 220), தான்ங் (கி. பி 618-906), மின்ங் (1368-1644) போன்ற அரச குடும்பத்தினர் ஆட்சிக் காலத்தில் சீன ஆதிக்கம் அதன் வழமையான எல்லைகளைக் கடந்து நாலாபக்கமும் பரவியுள்ளது. இவற்றுள் தான்ங் ஆட்சிக்காலம் மிக முக்கியமானது. முழு ஆசியக் கண்டமும் சீனாவுக்குத் திறை செலுத்தியும், வேறு விதங்களில் தலை சாய்த்தும் உள்ளது. சீன மக்கள் இன்றும் தான்ங் ஆட்சிக் காலத்தை நினைத்துப் பெருமைப் படுவதுண்டு. இதை ஒத்த வரலாற்று முககியத்துவம் மின்ங் காலத்திற்கும் உண்டு மின்ங் அரசர்கள் தமது நாட்டை ஆக்கிரமித்த மொங்கோலியர்களைச் சைபீரியா வரை துரத்தினர். மத்திய ஆசியா, வடஇந்தியா. தென்கிழக்கு ஆசியா போன்ற பெரும் நிலப்பரப்பு மின்ங் காலத்தில் சீனாவின் பலத்தை உணர்ந்தன. தெற்கு பசுபிக் கடல் வரை சீனக் கடற்படை தடையின்றிச் சஞ்சாரம் செய்தது. அத்துடன் இந்துமா கடலைக் கடந்து கிழக்கு ஆபிரிக்காவின் கரையோரம் வரை சென்று திரும்பியது. மின்ங் அரசர்கள் ஆட்சி 300 வருடங்கள் நிலைத்தன.

கம்யூனிசப் புரட்சிக்குப் பின் சீனா மீண்டுமோர் எழுச்சியைக் காண்பிக்கின்றது. கொரிய யுத்தத்திலும்,பின்பு பிரான்சு, அமெரிக்கா போன்றவற்றிற்கு எதிரான வியற்நாம் போரிலும் சீனாவின் தலையீடு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான எல்லைப் போரிலும் சீனா தனது மேலாதிக்கத்தை நிருபித்துள்ளது. சீன, ருஷ்ய எல்லையில் தான் விரும்பிய எல்லை மாற்றங்களைப் பெற்றுத் தனது பலத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இன்று சீனா தென்சீனக் கடலைத் தன் சொந்த நீர்ப்பரப்பாக்கும் திட்டத்தில் தீவிரமாக இயங்கியுள்ளது. உலகின் மிகப்பெரிய கடலாகவும், இந்திய - பசுபிக் சமுத்திரங்களை ஒன்றிணைக்கும் நீராகவும், அத்திலாந்திக்கை ஒத்த கடற்பாதையாகவும் தென்-சீனக் கடல் விளங்குகின்றது. இந்த நீர்ப் பரப்புக்கு ஏக உரித்துப் பாராட்டும் தனது செய்கைகளால் சீனா உலகின் பல நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது 80 சத வீதமான ஜப்பானின் ஏற்றுமதி தென்-சீனக் கடற்பாதை மூலம் நடைபெறுகின்றது. தென் கொரியாவும் அவ்வாறான நிலைமையில் உள்ளது. இரண்டு நாட்டுடனும் நெருங்கிய தொடர்பும், பாதுகாப்புப் பொறுப்பும் உடைய அமெரிக்கா அவசரமாகத் தனது பசுபிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளது. தென்-கிழக்கு ஆசிய நாடுகள் யாவும் ஏதோ ஒரு விதத்தில் சீனாவின் எழுச்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. தனித்துச் சீனாவின் இராணுவ பலத்தை எதிர்கொள்ள முடியாத இவை ஆசியன் என்னும் கூட்டமைப்பில் இணைந்துள்ளன. தீவிர கம்யூனிச நாடாக இருப்பினும் வியற்நாம் ஆசியன் அமைப்பில் இணையவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியான் அங்கத்துவ நாடுகளின் ஆயுதபலப் பரீட்சை.




கடலை ஆக்கிரமிக்கும் திட்டத்தோடு நிறுத்தாமல் சீனா அணு ஆயுதப் பரீட்சைகளையும், ஏவுகணைச் சோதனைகளையும் இக் கடற்பரப்பில் நடத்தி வருகின்றது. தாய்வான் தீவுகளுக்கு நெருங்கிய பகுதியில் அண்மையில் அணுக் குண்டுப் பரீட்சைகளை நடத்தியுள்ளது. தனது நாட்டின்மீது அணு குண்டு போடப்பட்ட 50 ஆவது வருடத்தை நினைவு கூரும் ஜப்பானுக்கு இது பெரும் துன்பம் கொடுத்துள்ளது. இவ்வருட ஆகஸ்ட் மாத இறுதி வாரங்கள் இரண்டிலும் தென்-சீனக் கடல் போக்குவரத்தைக் குறைக்குமாறு சீனா உலக நாடுகளைக் கேட்டுள்ளது. ஏவுகணைப் பரீட்சைகளைத் தான் நடத்தப்போவதால் இந்த எச்சரிக்கை விடப்படுவதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் தென்-சீனக் கடல் சம்பந்தமான நடவடிக்கைகள் எவ்வாறு தென்-கிழக்கு ஆசிய நாடுகளைக் குறிப்பாக வியற்நாமைப் பாதித்துள்ளன என்பதை இங்கு ஆராய்வோம். மிக அண்மையில் பிலிப்பைன்சிடமிருந்து ஒரு கரையோரத் தீவைச் சீனா பலாத்காரமாகப் பறித்தெடுத்துள்ளது.

கலாசார விழுமியங்களில் சிறந்து விளங்கிய வியற்நாம் கி. மு 39 தொடக்கம் கி. பி 939 வரை பத்து நூற்றாண்டுகளாகச் சீனாவால் ஆளப்பட்டுள்ளது. இதன்பின் 300 ஆண்டுகளாக இந்த நாடு தனது இறைமையைக் காப்பதில் வெற்றி கண்டுள்ளது. பின்பு 1858 தொடங்கி 1883 வரையும் பிரெஞ்சுக் கடற்படையும், ஸ்பெயின் நாட்டுப் போர் வீரர்களும் இணைந்து 25 வருடங்களாகப் போரிட்டு வியற்நாமை அடிமை நாடாக்கினர். 1954 வரை பிரான்சின் காலனியாகவே வியற்நாம் இடம்பெற்றது. பிரெஞ்சுக்காரர் விலகியபின் அமெரிக்கர்கள் வியற்நாம் மக்கள் மீதும், அரசு மீதும் தாக்குதல் தொடுத்தனர். இது 1974 வரை நடைபெற்றது. அதே வருடம் அமெரிக்கர்கள தோல்வியுற்று வெளியேறினர்.

ஐரோப்பா பற்றிய வரலாற்று ஆய்வு செய்வோர் இரண்டு உலக யுத்தங்களுக்கு முன்பும் ஜேர்மனி பலம் பெற்றவுடன் முதற்கண் பிரான்சு மீது பலப்பரீட்சைத் தாக்குதல் நடத்தியதாகக் கூறுவர். இதேபோன்ற காட்சி சீனா-வியற்நாம் சம்பந்தமாகத் தோன்றியுள்ளது. 1979 இல் பொல்பொட்டைப் பதவி கவிழ்ப்பதற்காக வியற்நாம் கம்போடியாவை ஆக்கிரமித்தபோது சீனப் படைகள் வியற்நாம் மீது தாக்குதல் தொடுத்தன. கம்போடியாவைத் தாக்கியதற்குத் தாம் கொடுத்த தண்டனை என்று சீனா விளக்கம் கூறியுள்ளது. 1954 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஆசியா மற்றும் தென்-கிழக்காசிய நாடுகளின் பாதுகாப்புச் செலவும், நிலையும் - 1995.

### 1. லாவோஸ்

வருடாந்த பாதுகாப்புச் செலவு— 114 மில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 8. 1 சத வீதம்
ஆயுதப் படையினர் தொகை — 37, 000
போர் விமானங்கள் — 31
தாங்கிகள் — 55
போர்க் கப்பல்கள் — 0

### 2. பர்மா

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 425 மில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 10. 8 சத வீதம்
ஆயுதப்படையினர் தொகை — 286, 000
போர் விமானங்கள் — 101
தாங்கிகள் — 111
போர்க் கப்பல்கள் — 56

### 3. தாய்லாந்து

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 3. 4 பில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 2. 7 சத வீதம்
ஆயுதப் படையினர் தொகை — 256, 000
போர் விமானங்கள் — 220
தாங்கிகள் — 160
போர்க் கப்பல்கள் — 10

### 4. கம்போடியா

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 61 மில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — எத்தனை சத வீதம் தெரியவில்லை
ஆயுதப்படையினர் தொகை — 88, 500
போர் விமானங்கள் — 21
தாங்கிகள் — 160
போர்க் கப்பல்கள் — 10

### 5. மலேசியா

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 2. 4 பில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 3. 6 சத வீதம்
ஆயுதப்படையிலர் தொகை — 114, 500
போர் விமானங்கள் — 104
தாங்கிகள் — 26
போர்க் கப்பல்கள் — 37

### 6. சிங்கப்பூர்

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 3. 1 பில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 5. 2 சத வீதம்
ஆயுதப் படையினர் தொகை — 54, 000
போர் விமானங்கள் — 175
தாங்கிகள் — 350
போர்க் கப்பல்கள் — 26

### 7. வியற்நாம்

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 860 மில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 4. 5 சத வீதம்
ஆயுதப்படையினர் தொகை — 572, 000
போர் விமானங்கள் — 223
தாங்கிகள் — 1. 900
போர்க் கப்பல்கள் — 55

### 8. சீனா

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 28.4 பில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 5. 4 சத வீதம்
ஆயுதப்படையினர் தொகை — 2, 930, 000
போர் விமானங்கள் — 5. 913
தாங்கிகள் — 10. 000
போர்க் கப்பல்கள் — 975
நீர்மூழ்கிக் கப்பல்கள் — 10
அணு ஆயுதம் பொருத்தப்பட்ட ஏவுகணைகள் கொண்ட நிலையங்கள் — 75

### 9. வடகொரியா

வருடாந்த பாதுகாப்புச்செலவு— 5 . 3 பில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 25. 5 சதவீதம்
ஆயுதப்படையினர் தொகை — 1, 128, 000
போர் விமானங்கள் — 820
தாங்கிகள் — 4, 200
போர்க் கப்பல்கள் — 415

### 10. புரூணை

வருடாந்த பாதுகாபபுச்செலவு— 239 மில்லியன் டொலர்
தேசிய வருமானத்தில் — 7 சத வீதம்
ஆயுதப்படையினர் தொகை — 4, 400
போர் விமானங்கள் — 8
தாங்கிகள் — 16
போர்க் கப்பல்கள் — 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. இந்தோனேசியா

| | |
|---|---|
| வருடாந்த பாதுகாப்புச்செலவு | — 2.3 பில்லியன் டொலர் |
| தேசிய வருமானத்தில் | — 1.6 சத வீதம் |
| ஆயுதப்படையினர் தொகை | — 276, 000 |
| போர் விமானங்கள் | — 126 |
| தாங்கிகள் | — 305 |
| போர்க் கப்பல்கள் | — 44 |

### 12. ஜப்பான்

| | |
|---|---|
| வருடாந்த பாதுகாப்புச்செலவு | — 45.8 பில்லியன் டொலர் |
| தேசிய வருமானத்தில் | — 1. 2 சத வீதம் |
| ஆயுதப் படையினர் தொகை | — 237, 700 |
| போர் விமானங்கள் | —650 |
| தாங்கிகள் | — 1, 650 |
| போர்க் கப்பல்கள் | — 85 |

### 13. தென்கொரியா

| | |
|---|---|
| வருடாந்த பாதுகாப்புச்செலவு | — 13.5 பில்லியன் டொலர் |
| தேசிய வருமானத்தில் | — 3. 9 சத வீதம் |
| ஆயுதப்படையினர் தொகை | — 633, 000 |
| போர் விமானங்கள் | — 509 |
| தாங்கிகள் | — 1, 900 |
| போர்க் கப்பல்கள் | — 164 |

### 14. அமெரிக்கா - கிழக்காசியாவில் நிலைகொண்ட படையணிகள்

| | |
|---|---|
| ஆயுதப்படையினர் தொகை | — 93, 350 |
| போர் விமானங்கள் | — 273 |
| தாங்கிகள் | — 240 |
| போர்க் கப்பல்கள் | — 12 |

### 15. தாய்வான்

| | |
|---|---|
| வருடாந்த பாதுகாப்புச்செலவு | — 11. 4 பில்லியன் டொலர் |
| தேசிய வருமானத்தில் | — 4. 9 சத வீதம் |
| ஆயுதப்படையினர் தொகை | — 425, 000 |
| போர் விமானங்கள் | — 513 |
| தாங்கிகள் | — 1, 414 |
| போர்க் கப்பல்கள் | — 134 |

### 16. பிலிப்பைன்ஸ்

| | |
|---|---|
| வருடாந்த பாதுகாப்புச்செலவு | — 1. 3 பில்லியன் டொலர் |
| தேசிய வருமானத்தில் | — 2. 3 சத வீதம் |
| ஆயுதப் படையினர் தொகை | — 106, 500 |
| போர் விமானங்கள் | — 155 |
| தாங்கிகள் | — 41 |
| போர்க் கப்பல்கள் | — 44 |

நடந்த டியன் பியன் பூ யுத்தத்திலும் 1974 இல் நிகழ்ந்த அமெரிக்கர்களுக்கு எதிரான போரிலும் சீனா வியற்நாமுக்குச் சிறந்த உதவி வழங்கியுள்ளது. ஆனால் இதுவோர் உள்நோக்குடன் வழங்கப்பட்டுள்ளது. தனது பிரதேசத்தில் மேற்குலகம் தலையிடக்கூடாது என்பதே அந்த நோக்கு.

1974 இல் வியற்நாம் அமெரிக்கர்களுக்கு எதிரான கடும் போரில் ஈடுபட்டிருந்தபோது வியற்நாமுக்குச் சொந்தமான பரசல் தீவுத்தொகுதியைச் சீனா தனக்குச் சொந்தமாக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து வியற்நாமின் ஆணைக்குட்பட்ட ஏழு ஸ்பிராட்லித் தீவுகளைச் சீனா 1988 இல் கைப்பற்றியுள்ளது. மூன்று வியற்நாமியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 72 மாலுமிகள் கொல்லப்பட்டுள்ளனர். 1991 இல் மேலும் எட்டு வியற்நாம் தீவுகள் சீனாவால் கைப்பற்றப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் ஒரு கப்பல் அழிக்கப்பட்டுள்ளது. 70 வியற்நாம் மாலுமிகள் உயிரிழந்தனர்.

தீவுகளின் தலைவிதி போன்ற கதி தனது நாட்டிற்கும் நேரலாம் என்று வியற்நாம் அஞ்சுவதில் நியாயமுண்டு. சீனாவின் பொருளாதார வளர்ச்சி முன்னெப்போதும் இல்லாதவாறு காணப்படுகின்றது. வியற்நாம் உட்படத் தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவற்றின் வளங்கள் சீனாவுக்குத் தேவைப்படுகின்றன. தனது தெற்கு எல்லையிலுள்ள இந்த நாடுகளை மிரட்டி வெகு சுலபமாக மூலப் பொருள்களைக் கைப்பற்றிவிடலாம். இது வெறும் கற்பனை அல்ல. சீனாவின் புவியியல் நிலை அவ்வாறு அமைந்துள்ளது. முன்னாள் கோமின்தாங் கட்சிகூடத் தென்கிழக்காசிய நாடுகளுக்கு உரிமை கோரியுள்ளது. ஸ்பிராட்லித் தீவுகளில் எரிபொருள் கூடுதலாகக் காணப்பட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவற்றையும் ஒட்டுமொத்தமாக நசுக்கச் சீனா தயங்கமாட்டாது.

இவையாவற்றையும் நன்கு உணர்ந்த வியற்நாம் அரசியல் ஆலோசகர்கள் இரண்டுவித நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். ஒன்று ஆசியன் அமைப்பில் அங்கத்துவம் பெறுவது. இரண்டு அமெரிக்காவுடனான அரசியல் உறவுகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராக்கிப் பலமாக்குவது. இரண்டிலும் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். இம்மாதம் (அல்லது 95) அமெரிக்கத் தூதுவராலயம் வியற்நாமில் திறக்கப்பட்டுள்ளது. ஆசியன் அங்கத்துவமும் கிடைத்துள்ளது முன்பு அமெரிக்கா கட்டியெழுப்பிய இராணுவத் துறைமுகம் 74 இன் பின் ருஷ்யர்களின் பாவனைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது மீண்டும் அமெரிக்கர்களுக்கு வரும் வாய்ப்பு உண்டு.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, புருணை, தாய்லாந்து, வியற்நாம் ஆகிய ஏழு நாடுகளும் சீனாவை எதிர்காலத்தில் முரண்பாட்டுக்கு வரக்கூடிய நாடாகக் கருதுகின்றன. இவை யாவும் ஆசியனை (Asean) ஓர் இராணுவக் கூட்டமைப்பாக மாற்றும் நோக்கில் தான் இயங்கி வருகின்றன. ஆசியன் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் பெருஞ் செலவில் இராணுவ விரிவாக்கம் செய்கின்றன. இதற்குரிய பட்டியலும், மேலதிக விபரங்களும் இதன்கீழ் தரப்பட்டுள்ளன. அமெரிக்காவை நம்பி இராமல் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்துவதே இந்த அமைப்பின் குறிக்கோள் ஆகும். சீனப் பிரசைகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிங்கப்பூர் மாத்திரம் 'ஆசியன் ஒரு சீன எதிர்ப்பு இயக்கம் அல்ல' என்று கொள்கை விளக்கம் செய்துள்ளது.

நியூஸ்வீக் ஜூலை 17, 1995

❋

## நேபாளம்:

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டது
# மீண்டும் மன்னராட்சி

ஏழு மாதங்கள் மாத்திரம் நிலைத்த பிரதமர் மன்மோகன் அதிகாரியின் ஆட்சி இவ்வருடம் ஜூன் 8ஆம் நாளுடன் முடிவுக்கு வந்துள்ளது. சி. பி. என். எனப்படும் நேபாள கம்யூனிஸ்ற் கட்சியின் தலைமையில் நிறுவப்பட்ட கூட்டாட்சி உட்கட்சிப் பூசலால் சிதைந்துள்ளது. இதேபோன்ற காரணத்திற்காகப் பதினொரு மாதங்களுக்கு முன்பாக, பழுத்த காங்கிரஸ் அரசியல்வாதி கிரிஜா பிரசாத் கொயிராலாவின் கூட்டரசும் தோல்வி கண்டுள்ளது. எண்ணிக்கையில்கூடிய அரசியல் கட்சிகளும், ஒன்றாவது அறுதிப்பெரும்பான்மை பெறும் நிலையில் இல்லாமையும் நேபாள அரசியலின் பின்னடைவுகள் எனலாம். பொது நன்மையை முன்வைக்காமல் சுயலாபம் தேடும் கட்சிகள் தயங்காமல் அரசுகளைத் தட்டி வீழ்த்துகின்றன.

மன்னராட்சியும், குடும்ப ஆதிக்கமும் பன்னெடுங்காலமாக நேபாளத்தில் நிலவி வருகின்றன. பாராளுமன்ற ஆட்சிமுறை இறக்குமதி செய்யப்பட்டு ஒருசில தசாப்தங்கள் ஆகின்றன. இந்தச் சில வருடங்களில் கட்சி அரசியல் நேபாளத்திற்குப் பொருத்தமற்றதென்ற முடிவுக்கு அவதானிகள் வந்துள்ளனர். ஒவ்வொரு பாராளுமன்றமும் கலைக்கப்படும்போது மன்னரின் ஆட்சிப்பலம் கூடுவதையே காணமுடிகின்றது. தனக்குச் சாதகமான நாடளாவிய குழுக்களைக் கட்டியெழுப்புவதில் மன்னர் பிரேந்திரா அக்கறை காட்டுவதாகக் கருத இடமுண்டு. கட்சி அரசியலின் தோல்விக்கு மன்னரைக் குறைகூறமுடியாது. ஆனால் கட்சி அரசியலின் தோல்வியைத் தமது ஆட்சி அதிகாரங்களை விரிவுபடுத்த மன்னர் பயன்படுத்துகின்றார் என்று கூறஇடமுண்டு.

நிலப்பரப்பு, சனத்தொகை ஆகியவற்றால் ஆசியாவில் முதலாம், இரண்டாம் இடம் வகிக்கும் சீனாவும், இந்தியாவும் நேபாள அரசியலில் நடத்தும் பலப்பரீட்சை அந்த நாட்டைப் பாதிக்கின்றது. இந்தியா இன்றுவரை பெற்றுவரும் வர்த்தகச் சலுகைகளை நிறுத்தப்போவதாகக் கூறிய மன்மோகன் அதிகாரியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தாசரான் கிரிஜா பிரசாத் கொயிராலா சென்ற வருடம் துரத்தப்பட்டார். இவை வெளியார் தலையீட்டை உணர்த்துகின்றன. ஒருநாடு பதவியில் இருத்த இன்னுமொரு நாடு பதவி இறக்க நேபாளம் அவலப்படுவது கண்கூடு. எரியும் வீட்டில் பிடுங்கியது அறுதி என்பதுபோல் ஜனநாயக வீழ்ச்சியைச் சாதகமாக்கி மன்னராட்சியைப் பலப்படுத்தும் அரசரை சனநாயகத்தின் பாதுகாவலன் என்று இந்தியா போற்றுவதுதான் வியப்பான செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மன்னர் ஆட்சி வருமா?

## இரகசிய முயற்சிகள் கிளப்பும் சந்தேகம்

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

பல நூற்றாண்டுகளாக நிலவிய ஆப்கான் மன்னர் பரம்பரையினரின் ஆட்சி 1973ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்துள்ளது. அவ்வருடம் அரண்மனைப்புரட்சி மூலம் பதவி இறக்கப்பட்ட மன்னர் சாகீர் ஷா, வயது 80 இப்போது இத்தாலியில் வாழ்கின்றார். அவருடைய பதவியைப் பறித்து ஆப்கானிஸ்தானில் குடியரசை நிறுவியவர் மன்னரின் மைத்துனர் தாவூத் கான். 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த சோவியத் ருஷ்யச் சார்பு கொமியூனிஸ்ற் புரட்சியில் தாவூத் கான் கொல்லப்பட்டார். புரட்சியின் வெற்றியோடு ருஷ்ய இராணுவத் தலையீடும், பெரும் உள்நாட்டுப் போரும் அதன் காரணமாக நாட்டின் சீரழிவும் ஆரம்பமாகின. அன்று பிடித்த சனி இன்னும் நீங்கவேயில்லை.

கடந்த 15 வருடங்களாக மன்னர் சாகீர் ஷா தனது நாட்டிற்கு இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்காக இத்தாலியில் இருந்தவாறு பல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். அமெரிக்க உதவியுடன் சோவியத் துருப்புக்கள் வெளியேற்றப்பட்டபின் தனது நாட்டில் நடக்கும் துன்பகர நிகழ்ச்சிகளை நிறுத்தி மீண்டும் நாட்டை ஒருமைப்படுத்த அவர் பல இரகசிய முயற்சிகள் எடுத்துள்ளார். மேற்குலக நாடுகள் யாவற்றுடனும் அவர் நல்லுறவை வளர்த்துள்ளார். இப்போது ருஷ்யாவும் அமெரிக்காவும் இணக்க நிலைக்கு வந்துள்ளதால் அவருடைய முயற்சிகளுக்கு ருஷ்ய எதிர்ப்பு மறைந்துவிட்டது ஐநாவில் அவருக்குச் சாதகமான நிலை இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

ஒற்றுமையின் சின்னமாகவும், நல்லாட்சியின் உத்தரவாதமாகவும் நிலவிய மன்னராட்சி மீண்டும் வருவதற்கு, கணிசமான எதிர்ப்பு உள்நாட்டில் உண்டு. இதற்கு விளக்கமாக



ஆப்கானிஸ்தான் இனக்குழு நிலவரத்தை ஆராயவேண்டும் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஆப்கானிஸ்தான் பெரும்பாலும் அந்நியர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. கி. மு. நாலாம் நூற்றாண்டில் மகா அலெக்சாந்தரும், பின்பு கி பி. 13 ஆம் நூற்றாண்டில் மொங்கோலிய அரசன் ஜென்கிஸ்கானும், 14 ஆம் நூற்றாண்டில் தமர்லேனும், 16ஆம் நூற்றாண்டில் பாபரும் ஆப்கானிஸ்தானை ஆண்டுள்ளனர் புஷ்ருன் இனத்தவர்களின் பெருமுயற்சியால் 1747 இல் வெளியார் ஆட்சி முடிவுக்கு வந்து தன்னாட்சி ஆரம்பமாகியுள்ளது, இரண்டு உலக யுத்தங்களிலும் யாதொரு பக்கமும் சாராது ஆப்கானிஸ்தான் நடுநிலை வகித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் பரம்பரை மன்னவர்கள் புஷ்ருன் இனத்தைச் சேர்ந்தவர்கள்,

இன்று நாடு துண்டாடப்படும் நிலைக்கு வந்துள்ளது. புஷ்ருன் இனத்தவரின் தலைமைக்குச் சவாலாக தஜிக் மற்றும் உஸ்பெக் இனத்தவர் கிளம்பியுள்ளனர். பாகிஸ்தான் தரப்பிலும் எதிர்ப்பு உண்டு. பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் வாழும் புஷ்ருன் இனத்தவர் ஆப்கானிஸ்தானுடன் இணைய விரும்புவதால் நெடுநாளாக இது தொட்டுக் கசப்புணர்வு நிலவுகின்றது புஷ்ருன் தலைமையில் தமது நாட்டின் ஒரு பகுதி பிரியலாம் என்று பாகிஸ்தான் ஆட்சியாளர் சந்தேகிக்கின்றனர் இப்போது காபுல் தலைநகரில் சனாதிபதியாகப் பதவி வகிக்கும் புர்கானுடீன் றபானி, தஜிக் இனத்தவர். புஷ்ருன் இன மன்னராட்சி நாடு திரும்புவதை அவர் கடுமையாக எதிர்க்கின்றார். மன்னரின் தூதுவருடன் பேசுவதற்கே மறுத்துள்ளார். மறுவளத்தில் தலிபான் படைகளாலும் அரச படைகளாலும் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் குல்புடீன் ஹெக்மத்தியார் மன்னராட்சியை வரவேற்றுள்ளார். காரணம், ஹெக்மத்தியார் புஷ்ருன் இனத்தவர் ஆவர்.

வட ஆப்கானிஸ்தான் கரையோரங்களைத் தனது பிடியில் வைத்திருக்கும் உஸ்பெக் படைகளின் தளபதி ஜெனரல் றசித் டொஸ்தம் மன்னராட்சி மீண்டும் வருவதை வரவேற்றுள்ளார். புஷ்ருன் - உஸ்பெக் நெருக்கத்தை வளர்த்து தஜிக் இனத்தவரை ஓரங்கட்டுவதே அவரின் நோக்கம். இதைத் தடுப்பதற்காகத் தஜிக் இனத்தலைவர் றபானி உஸ்பெக் இனத்தவருக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார், ஆனால் அவர்கள் இதற்கு உடன்படவில்லை, தெற்கு ஆப்கானிஸ்தானில் பெரும் சக்தியாக விளங்கும் தலிபான் இன்னும் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளியிடவில்லை. அண்மையில் அவர்கள் மேற்குக்கரை ஹெராத் வரை தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பியுள்ளனர். நாட்டில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகட்ட மன்னரால் முடியுமா என்பதே பெரும் கேள்வி. அவருக்கு வயது ஏறிவிட்டது. நாட்டில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மன்னருக்கு முன்பு கிடைத்த மதிப்பும் மரியாதையும் மீண்டும் கிடைக்குமா? சந்தேகமே. ஆப்கானிஸ்தான் பிரச்சனை சாவதேச மயப்படுத்தப்பட்டுவிட்டது. முடியாட்சிக்கு மறுபிறப்புக் கொடுப்பதால் கடந்த கால் நூற்றாண்டாக நடந்தவற்றை இல்லாதொழிக்க முடியுமா? இல்லையென்று துணிந்து கூறலாம்.

ஃபார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ ஜூலை 20, 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு கரையினிலே யாசிர் அரபாத்



## வெற்றிக்கனி எட்டியபின் அவர் சோர்வுறக் காரணம் என்ன? பூரணம் பூச்சியமாகி விட்டது.

தமிழில் :
கலாநிதி : க. சோமாஸ்கந்தன்.

30 வருடம் தளராது போராடிய பி. எல். ஓ இயக்கத் தலைவர் அரபாத் தனது இலக்கை ஓரளவுக்கு அடைந்தபின் மனங்கலங்குவதாகச் செய்திகள் வந்துள்ளன. போராட்ட காலத்தில் உற்சாகம் குறையாது காணப்பட்டவர் இப்போது தளம்பல் அடைந்துள்ளார் என்றும் அச் செய்திகள் கூறுகின்றன. 1993 இல் அவர் காசா மற்றும் மேற்குக் கரை நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற போது அவரும், அவருடைய மக்களும் எதிர்பார்த்தது ஒன்று, இப்போது நடப்பது இன்னுமொன்று. பி. எல். ஓ வின் நிர்வாகம் மக்கள் ஆதரவை இழந்து வருகிறது. நிர்வாகம் சீராகவும், ஒழுங்காகவும், குற்றமற்றதாகவும் அமையத் தவறி விட்டது. அரபாத் இதை நன்கு உணர்ந்துள்ளார். இவ்வாறான சீர்கேட்டிற்கு அவருமொரு காரணமாவார். தன்னைத் திருத்த முடியாத தலைவனாக அரபாத் தனது மக்கள் முன் நிற்கிறார்.

செயலிழக்கும் அளவுக்கு நிர்வாகம் சீர்கெட்டுள்ளது. தலைவருக்கு நெருக்கமானவர்களின் அதிகாரத் துஷ்பிரயோகம் தணியாது பெருகி வருகின்றது. அரபாத்தில் தொடங்கி உயர்மட்ட ஆட்சியாளர்கள் யாபேரும் மக்கள் விருப்பு, வெறுப்பை மதியாத சர்வாதிகாரிகளாக உருப்பெற்றுள்ளனர். அரபாத்தின் தலைமைத்துவம் பொறுமை அற்றதாகவும், ஆலோசகர்களை மதியாததாகவும் வளர்ந்துள்ளது. அமைச்சர்கள், உயர் நிர்வாக அதிகாரிகளுடன் அதிகாரப் பங்கீடு செய்ய அரபாத் மறுத்து வருகின்றார். தன்னை அறியாமல் யாதொன்றும் நடக்கக் கூடாது என்ற மனப்பான்மை அவருடையது. நாளாந்திர நிர்வாகத் தீர்மானங்களுக்கும் அரபாத்தின் சம்மதம் தேவை என்றால், பெரும் பின்னடைவு ஏற்பட்டே தீரும். 18 அமைச்சர்கள், 22,000 சிவில் நிர்வாகிகள், 18,500 பேர் நிரம்பிய பாதுகாப்புப் படை இருந்தும் அரபாத்தின் குணத்தவறால் திருப்தியான சேவையைக் கொடுக்க முடியவில்லை.

நீதி அமைச்சர் அபூ மிட்டேயின் இதை நன்கு சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார். 'பெருந்தெருவை துரித கதியில் திருத்தி அமைக்கத் தவறிய எம்மை மக்கள் மதிப்பார்களா? அழுக்கு நீர் அகற்றும் குழாய்கள் வந்து விட்டன. ஆனால் அதைப் பொருத்த நாம் எடுக்கும் காலதாமதத்தை மக்கள் பொறுப்பார்களா?' தனது உச்ச அதிகாரத்தை நிலைநாட்ட பிறிதொரு தந்திரத்தை அரபாத் கையாளுகின்றார். ஒரு பணிக்கு இருவரை நியமித்து மோதல் நிலையை உருவாக்குவது அவருடைய பாணி. இருவரும் தன்னிடம் வரவேண்டும், தான் மத்தியட்சம் பிடிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அமைச்சர்களுக்கிடையில் காரணமின்றி மோதல்களை உருவாக்குவதிலும் அரபாத் சமர்த்தர். திட்டமிடல் அமைச்சர் நபில் சாத்தி, தொழில் வள அமைச்சர் அகம்மது கிரேயி என்ற இருவரும் தமது பரஸ்பர விரோதத்தின் பின்னணியில் யார் என்று அறியாமல் பலாத்காரம் வரை சென்றுள்ளனர்.

உயர்நிலை நிர்வாக அதிகாரிகள் அரபாத் விசுவாசம், நட்பு, குடும்ப உறவு என்ற காரணங்களுக்காக நியமிக்கப்படுகின்றனர். ஒருவருடைய தகுதி பார்க்கப்படுவது இரண்டாம் பட்சம். அண்மையில் அரபாத் திருமணம் செய்துள்ளார். புது மனைவியின் உறவினர் நல்ல வாய்ப்புப் பெறுகின்றனர். உயர்கல்வி ஆலோசனைக் குழுவில் அவருடைய மனைவியின் தம்பி இடம் பிடித்துள்ளார். அரபாத்தின் உடன் பிறப்பு ஃபாத்தி பலஸ்தீன செம்பிறைத் தலைவர். இதன் காரணமாக அவர் சுகாதார அமைச்சு விவகாரங்களில் தலையிட அரபாத் அனுமதி வழங்கியுள்ளார். அதனால் பல சிக்கல்களும், முரண்பாடுகளும் எழுந்துள்ளன. முன்னரெப்போதும் இல்லாதவாறு தபால் சேவை படுமோசமாகத் தரம் கெட்டுள்ளது. புதிய கட்டடங்கள சம்பந்தமான விதிமுறைகள் பேணப்படுவதில்லை. கட்டடப் பரிசோதகர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு ஊழல் செய்வதாகப் பலவாறான புகார்கள் எழுந்துள்ளன.

மக்களை மிகவும் கொதிப்படையச் செய்வது அரபாத் மீது அமெ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கா – இஸ்ரேல் பிரயோகிக்கும் அழுத்தங்களே. அரபாத் அவர்களே இதன் காரணமாக மிகவும் சலிப்பு அடைந்துள்ளார். ஹமாஸ் மற்றும் ஜிகாத் இயக்கங்கள் தொடர்ச்சியாக நடத்திய தற்கொலைத் தாக்குதல்களால் அரபாத் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த இயக்கங்கள் விவகாரத்தில் தொடக்கத்தில் ஒரு மென்போக்கை கடைப்பிடித்த அரபாத் இப்போது அவர்களை நசுக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளார். மாற்றான் நன்மைக்காகத் தனது இனத்தின் மீது கொடூரமாக நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. அண்மையில் அமெரிக்காவில் வைத்து இரு பலஸ்தீனியப் பொறியியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்ற வருடம் ரெல் அவிவ், இஸ்ரேலிய தலைநகர் குண்டுவெடிப்பில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக அமெரிக்க – இஸ்ரேலிய உளவுத்துறை குற்றம் சுமத்துகின்றது. குண்டு தயாரிப்பதற்கும், அதைத் தற்கொலைப் போராளியின் உடலில் பொருத்துவதற்கும் இவர்களே பொறுப்பு என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் 22 இஸ்ரேலியர் கொல்லப்பட்டது தெரிந்ததே. இருவரையும் இஸ்ரேலில் கொண்டு வந்து நீதி விசாரணை செய்யும் முயற்சிகள் இப்போது நடைபெறுகின்றன.

பாலஸ்தீனத்திற்கு உண்மையான வெளியார் தலையீடு இல்லாத தன்னாட்சி வரப் பல வருடங்கள் செல்லும் அரபாத் அதைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை குறைந்து வருகின்றது. அரபாத்தின் மனச்சுமையும் இதன் காரணமாக எழுந்திருக்கலாம். தற்போது கிடைத்த அதிகாரங்களை சரிவரப் பிரயோகித்து மக்கள் வாழ்வை சுபீட்சமடையச் செய்வது அவருடைய முக்கிய கடமையாகும். இதில் தவறுவாராயின் அவருடைய எதிர்காலம் பூச்சியம் என்பது வெளிப்படை.

டைம் ஜூலை 31, 1995.
நியூஸ்வீக் ஓகஸ்ற் 07, 1995.

# தீவிரவாதிகளின் உலகளாவிய புலனாய்வுத்திறன்

இஸ்ரேலிய இராணுவத்தினரும் மொசாட் கொலைக்குழுவினரும் தாங்களே உலகில் அதிசிறந்த மிகநுட்பமான புலனாய்வுப் பிரிவினைக் கொண்டிருப்பதாகப் பெருமைப்படுகின்றனர். இப்போழ்து இஸ்லாமிய தீவிரவாதிகளும் இதேயளவு திறமை கொண்டவர்களாக மாறிவிட்டுள்ளனர். இஸ்லாமிய கரந்தடிப் படையினரை இஸ்ரேலியர் லெபனானில் வைத்துக் கைதுசெய்தால் அன்றிக் கொலை செய்தால் இஸ்லாமிய கரந்தடிப் படையினர் புவனஸயர்சிலோ அன்றி இலண்டனிலோ இஸ்ரேலிய, யூத நிலைகள் மீது பதில்தாக்குதல் நடத்துகின்றனர். கைரோ நகரிலுள்ள மேலைநாட்டுத் தூதுவர் இவர்களின் புலனாய்வுத் திறனை ஏற்றுக்கொண்டுள்ள அதேவேளை இவர்களுக்குத் தலைமைப்பீடம் ஒன்றிருக்கிறதா என்பதிற் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளனர்.

இஸ்லாமிய அடிப்படை நாடுகளான ஈரான், சூடான் ஆகியவற்றின் ஊக்குவிப்புடன் பல தனிப்பட்டவர்களும், குழுக்களும் ஒன்றிணைந்து உலகளாவிய முறையில் இயங்குகின்றன. இவ்வமைப்பின் தலைபோல ஈரான் இருப்பதாகச் சிலர் நம்புகின்றனர். அடிப்படைவாதிகளுக்கு உலகின் பலபாகங்களிலும் கிடைக்கும் ஆதரவையிட்டு எகிப்தும் இஸ்ரேலும் மிகுந்த கவலை அடைந்துள்ளன. எகிப்திய தீவிரவாதிகளுள் முக்கியபுள்ளியாக விளங்கியவனுக்கு டென்மார்க் அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளது. அன்வர் சதாத்தின் படுகொலையுடன் தொடர்புடைய ஒருவன் ஜெனிவாவில் வசிக்கிறான், கைரோவிலுள்ள சுவிஸ் தூதரகம் அவனுடைய சுவட்டைக் கூடக் காணமுடியவில்லை என்று கூறுகின்றது. பலஸ்தீனிய தீவிரவாதிகளிற் சிலர் அமெரிக்காவில் பயிற்சி பெறுவதாக இஸ்ரேல் கருதுகிறது. கமாஸ் இயக்கத் தலைவர்களுள் ஒருவன் 10 ஆண்டுகள் அமெரிக்காவில் வாழ்ந்துள்ளான்.

சிக்காகோ நகரில் பலஸ்தீனிய பயிற்சிப் பாசறை ஒன்று இயங்கியதாகவும் அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் முடித்த லிபிய நாட்டு விரிவுரையாளர் ஒருவர் அங்கு வெடிகுண்டு வைப்பதற்கான வழிமுறைபற்றிப் போதனை நடத்தியதாகவும் பலஸ்தீனியர் ஒருவர் கூறியுள்ளார். இஸ்லாமிய தீவிரவாதிகளின் கை ஓங்கினால் உலகநாடுகள் பலவற்றின் சுதந்திரம் கேள்விக்குறி ஆகிவிடக்கூடும்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்.



# நெருங்கிவரும் அமெரிக்கா-வியற்நாம் உறவுகள்:

# 19 வருட விரோதம் முடிவுக்கு வருகிறது.

## 'வியற்நாம் போரில் இறந்த தமது வீரர்களின் எலும்புகளைத் தேடும் பணியில் அமெரிக்க அதிகாரிகள்.'

தமிழில்: கலாநிதி க. சோமாஸ்கந்தன்



காணாமற் போன சில அமெரிக்கப் போர் வீரர்களின் எலும்புகள் இராணுவ மரியாதையுடன் விமானங்களில் ஏற்றப்பட்டு அமெரிக்கா செல்கின்றன.

உலக வரலாற்றில் மிகவும் துன்பப்பட்ட நாடு வியற்நாம். ஒரு நூற்றாண்டுக்கு மேல் நிலை பிறழாமல் இறுதி வரை போராடி விடுதலை பெற்ற நாடு வியற்நாம். பிரான்சு, ஜப்பான், பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவப் பலத்தை வீழ்ச்சியுறச் செய்த பெருமை அதைச்சாரும். 1865 ஆம் ஆண்டிலிருந்து 1941 ஆம் ஆண்டு வரை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தையும், 1941 தொடங்கி 1945 வரை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களையும், 1946 முதல் மீண்டும் பிரெஞ்சு, பிரித்தானியா, அமெரிக்கா ஆகியவற்றையும் எதிர்த்துப் போராடியுள்ளனர். போராட்டம் என்பதே வாழ்க்கை முறையாகக் கொண்டு 1965 இல் பரிபூரண வெற்றி கண்டவர்கள் வியற்நாமியர்கள்.

வியற்நாம் விடுதலை என்பது 1945 இல் முதன் முறையாகக் கிடைத்துள்ளது. ஜப்பானிய பொம்மை அரசின் அதிபரான மன்னர் பாலோ தாய் என்பவரைத் துரத்திவிட்டுப்பெற்ற விடுதலையை இது குறிக்கும். 1945 ஆம் ஆண்டின் பின் நடந்த 20 வருடப் போர் மேற்குலக ஆக்கிரமிப்பாளரை எதிர்கொண்ட போராகும். 1945 செப்ரெம்பர் 02 ஆம் நாள் ஹனோய் நகரின் பா-டின் சதுக்கத்தில் கூடிய 10 இலட்சம் மக்கள் முன்தோன்றிய வியற்நாமியத் தலைவர் ஹோ-சீ-மின் வியற்நாம் சுதந்திரம் பெற்றுவிட்டதாக உலகிற்கு அறிவித்தார். மனித வரலாற்றில் தலை சிறந்த தளபதிகளில் ஒருவரான ஜெனரல் வோ நிகுயன் சியாப் தனது தலைவர் ஹோவின் அபார திறமை, பொறுமை, கூரிய அறிவுத்திறன் குறித்து இவ்வாறு கூறினார்:

'ஹோ மாமாவுக்குப் புரட்சிகர உண்மை என்பது தான் திட்டவட்டமானது. எதிரியின் சிந்தனைப் போக்கையும், உணர்வையும் முன்கூட்டியே உணர்ந்து கொள்வதில் திறமை வாய்ந்தவர். ஒவ்வொரு தனிப்பட்ட பிரச்சனைக்கும் திட்டவட்டமான அணுகு முறை வைத்திருப்பார்.'

1945-க்குப்பின் மீண்டும் வியற்நாமில் காலடி வைத்த பிரெஞ்சுக்காரர்களுக்கு மரண அடி கொடுத்த இறுதிப் போர் 1954 மார்ச்சு மாதம் 13 ஆம் திகதி தொடங்கியது. பெரும் விமானத் தளத்தை உள்ளடக்கிய டியன் பியன் பூ என்ற மாபெரும் காப்பரணை நொருக்கிய இப்போர் உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. 55 நாள்கள் நடந்த அகோரத் தாக்குதலின் பின் மே 07 ஆம் திகதி பிரெஞ்சுப் படைகள் சரணடைந்தன. வரலாற்றில் முதன் முறையாக விடுதலை வேண்டி நின்ற சிறிய நாடு வல்லமை மிக்க காலனி ஆதிக்க நாட்டைப் போரில் தோற்கடித்துள்ளது. 20,000 வீரர்கள் மாத்திரம் கொண்ட வியற்நாம் படை ஆட்பலம், ஆயுத பலம் ஆகியவற்றில் பன்மடங்கு மிஞ்சிய பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. டியன் பியன் பூ கோட்டையில் இலட்சம் வீரர்கள் இருந்தனர். அவர்களிடம் 1,000 பீரங்கிகளும், 100 போர் விமானங்களும் இருந்தன. விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் பிரெஞ்சு ஜெனரல் ஹென்றி நவார் என்பாரை மண் கௌவ வைத்த சாதனை கியாப்பைச் சாரும்.

1954 இல் ஏற்பட்ட ஜெனிவா உடன்படிக்கையைத் தொடர்ந்து பிரெஞ்சுப் படைகள் வியற்நாமில் இருந்து வெளியேறின. இந்த வாய்ப்புக்காகக் காத்திருந்த அமெரிக்கா தனது இராணுவத்தையும், சி. ஐ. ஏ உளவுத்துறையையும் தென்வியற்நாமுக்குள் அனுப்பியது. ஜெனிவா ஒப்பந்தத்தில் ஹோசிமின் ஆட்சியின் கீழ் வட வியற்நாமும், மன்னர் பாலோதாயின் ஆட்சியில் தென்வியற்நாமும் என்று இரு பிரிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அமெரிக்கா ஜெனிவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துள்ளது. தென்வியற்நாமைத் தனது காலனியாக மாற்றத் திட்டமிட்ட அமெரிக்கா ஒரு போலிக் கருத்துக் கணிப்பை நடத்தி மன்னரை அகற்றிவிட்டுத் தனது கையாள் நிகோ தின் தியம் என்ற இராணுவ அதிகாரியை ஜனாதிபதி ஆக்கியது. இப்பொம்மை அரசை அமெரிக்கா, பிரான்சு, பிரித்தானியா ஆகிய மூன்றும் உடனடியாக அங்கீகரித்தன.

1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் நாள் ஐம்பதிற்கும் மேற்பட்ட அமெரிக்க விமானங்கள் வடவியற்நாம் தலைநகர் ஹனோய்மீது குண்டுமாரி பொழிந்தன. தென் வியற்நாம் பாதுகாப்பிற்காகப் பெருந்தொகை அமெரிக்கப் படையினர் வந்து சேர்ந்தனர். அமெரிக்காவின் நேரடித் தலையீடு இவ்வாறு ஆரம்பித்தது. 54தொடக்கம் வட-வியற்நாம் தலைவர் ஹோ தனது நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், இராணுவ எண்ணிக்கையைப் பெருக்குவதிலும் கவனம் செலுத்தினார். காலப்போக்கில் ஒரே வியற்நாம் குடியரசை நிறுவும் குறியை அவர் மறக்கவில்லை. 1969 இல் ஹோ சிமின் இறந்தார். தலைமைப் பதவி ஏற்ற டான்தக் தாங், ஹோவின் கொள்கைகளைப் பின்பற்றினார்.

யாவற்றையும் நன்குணர்ந்த அமெரிக்கா 1965 ஆம் ஆண்டு தொட்டுத் தனது படைபலத்தைப் பெருக்கி வந்துள்ளது. 1970 இல் 5 இலட்சம் அமெரிக்கப் படையினர் தென்-வியற்நாமில் இருந்தனர். இவ்வளவு பெரிய இராணுவத்தை வெளிநாட்டில் வைத்திருப்பதற்கு அமெரிக்காவில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அந்த நேரம் பார்த்து வட வியற்நாம் போரைத் தொடங்கியது.

1954–70 வரை வட வியற்நாம் தெற்கு வியற்நாமை விடுவிக்கும் போரில் நேரிடையாக இறங்கவில்லை. எனினும் இந்தப் 16 ஆண்டு காலத்தில் தெற்கு வியற்நாமில் அமைதி நிலவவில்லை. வட-வியற்நாம் ஆதரவு பெற்ற மக்கள் தமது விடுதலைப் போரை நடத்தினர். ஆதிக்க அரசின் படையினரையும், அவர்களின் அமெரிக்க சகாக்களையும் தாக்கினர். இவ்வாறு சிறுகச் சிறுக 90,000 படையினரை ஒழித்தனர். இவர்களில் 3000 பேர் அமெரிக்கர்கள்.

1970 ஏப்ரலில் வட வியற்நாமிய விடுதலை முன்னணிப்படை தென் வியற்நாம் மீது தாக்குதல் தொடுத்தது. ஒரே மாதத்தில் 20,000 அமெரிக்க வீரர்கள் இறந்தனர். ஒரு வருடத்தில் ஓர் இலட்சம் அமெரிக்கர்கள் இறந்தனர்.

இரண்டாம் உலகப் போரில் இறந்த அமெரிக்க வீரர்களிலும் வியற்நாமில் இறந்த அமெரிக்கர்களின் எண்ணிக்கை கூடுதல். இதை அமெரிக்க மக்களும், அவர்கள் படிக்கும் பத்திரிகைகளும் கண்டித்தன. அதனால் அமெரிக்கப் பிரஜைகளின் கண்டனத்தையும், உலக மக்களின் சுடு சொல்லையும் தாங்க முடியாத அமெரிக்கா 1972 இல் வியற்நாம் போரை நிறுத்திவிட்டு வெளியேறியுள்ளது. சில மாதங்களில் தென் வியற்நாம் அரசும் வீழ்ச்சியுற வடக்கும், தெற்கும் ஒன்றிணைந்து வியற்நாம் நாடு தோன்றியது.

உலகின் வளங்கள் நிறைந்த பாகம் என்றால் அது தென் கிழக்கு ஆசியா தான். இப் பகுதியின் ஒவ்வொரு நாடும் அந்நிய முதலீட்டை வரவேற்கின்றன. கம்யூனிச நாடான வியற்நாம், ருஷ்யா, சீனா போன்ற நாடுகளிடமிருந்து பெறக்கூடிய உதவி மிகக் குறைவு. வியற்நாம் தோல்வியில் வெதும்பிய அமெரிக்கா கடந்த 19 வருடங்களாக வியற்நாம் மீது பொருளாதாரத் தடைகளைச் சுமத்தியுள்ளது. அத்துடன் இரு பகுதிக்கும் இடையில் பரஸ்பர அங்கீகாரமும், இராசரீக உறவுகளும் கிடையா. அமெரிக்கத் தனியார்துறை நிறுவனங்கள் வியற்நாமுக்கு வந்து நிலைகொண்டுள்ளன. ஆனால், அரச மட்டத் தொடர்பு ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றன. அமெரிக்காவும், வியற்நாமும் நெருங்கி வருவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. பணத்தை முதலீடு செய்து தொகையைப் பெருக்குவதற்கு, மலிவான தொழிலாளர் படையும், எளிதிற் கிடைக்கும் மூலப் பொருள்களும் தேவைப்படுகின்றன. வளங்களை வைத்துக் கொண்டு வயிறு வளர்க்க முடியாது. முதலீட்டாளர்களின் வரவு அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் இளை நூலகம்.

வடக்கு எல்லை நாடான சீனாவின் அழுத்தங்களைச் சமன் செய்ய அமெரிக்க நட்பு வியற்நாமுக்குத் தேவை. அதேபோன்று அமெரிக்காவுக்கும் வியற்நாமை. சீனாவைக் கண்காணிக்கும் தளமாகப் பயன்படுத்த விருப்பு உண்டு.

இரு நாடுகளும் தூதுவரகங்களைத் திறந்து உயர் மட்டத்தில் தொடர்பு ஏற்படுத்துவதை எம். ஐ. ஏ. என்ற பிரச்சனை தடுக்கின்றது. எம். ஐ. ஏ. என்ற நெடிய ஆங்கிலச் சொற்றொடருக்கு (Missing in Action) போரிற் காணாமற் போனவர்கள் என்ற அர்த்தம் பொருந்தும். வியற்நாமியர் கொன்ற அமெரிக்கப் போர் வீரர்கள் பலரின் உடல்கள் அல்லது எலும்புகள் இன்னும் மீட்கப்படவில்லை. சில எரிந்து சாம்பராகிவிட்டன. பல மண்ணின் கீழ் சென்றுவிட்டன. எனினும் அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடம் தேடுதலை நிறுத்தத் தயாராக இல்லை. வியற்நாமியர்கள் தம்மால் இயன்றளவு உதவுகின்றனர். இன்னும் உயிருடன் இருக்கும் ஜெனரல் கியாப் நன்கு ஒத்துழைப்பு வழங்குகிறார். தேசிய வீரர்கள் விதைப்பிடத்தில் தேடுதல் நடத்த அமெரிக்கர்களுக்கு வியற்நாம் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் கணக்கிற் சோர்வு காணப்படுகிறது. காணாமற் போனோரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கின்றது. எம். ஐ.ஏ. தேடுதலிற் சில எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டு அமெரிக்கா சென்றுள்ளன. வெகு விரைவில் தேடுதல் நிறுத்தப்பட்டு இரு நாடுகளும் உயர்மட்டப் பிரதி நிதிகளை மாற்றிக்கொள்வர் என நம்பலாம்.

நியூஸ்வீக், ஜூன் 26, 1995.

ஆசியா

## நீரும் உயிரே, நிலனும் உயிரே

# நீரில்லா நிலம் பாழ்

தமிழில் :
கலாநிதி க. சோமாஸ்கந்தன்.

மத்திய கிழக்கில் எண்ணெய் வளம் தாராளமாக இருப்பினும் நீரின் பற்றாக்குறை நெடுங்காலமாக இருக்கின்றது. மண்ணின் கொதியை நீர் தடுக்கின்றது. வட–ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளின் கடும் வெப்பத்திற்கு இப்பற்றாக்குறையும் ஒரு காரணமாகும். இனிவரும் காலத்தில் மழையாலும், ஆற்று வெள்ளத்தாலும் நிறைகின்ற நீர் நிலைகள் யுத்தத்திற்கு முக்கிய காரணியாக அமையலாம். இந்தப் பிரதேச நாடுகளில் சனப்பெருக்க விகிதாசாரம் கூடிவருகின்றது. உயிர்வாழத் தேவைப்படும் குடிநீருக்காக மக்கள் போரிடுவர் என்று அரசியல் அவதானிகள் ஆருடம் கூறுகின்றனர்.

நீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கச் சவுதி அரேபியா பெருஞ் செலவில் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் பாரிய எந்திர சாதனங்களைத் தனது நாட்டின் கரையோரத்தில் பொருத்தியுள்ளது. உப்புநீரைக் காய்ச்சி வடிகட்டிக் குடிநீராக்குதல் பழைய முறை. இது செலவு மிக்கது. இப்போது படிக முறை வழக்கில் இருக்கின்றது உப்பு நீரைப் பனிக் கட்டிகளாக்கிச் சூடேற்றி நன்னீர் தயாரிக்கிறார்கள நீரைவிட கடலடிப் பொருள்களிலிருந்து வண்ணச் சாயங்கள், உரவகைகள், ஒட்டும் பொருள்கள் ஆகியவற்றை இணைத்து உற்பத்தி செய்கிறார்கள். ஓர் இலட்சம் மக்களுககுத் தேவைப்படும் நன்னீரை இந்தவிதத்தில் தயாரிக்க ஒரு ஜெற் போர் விமானத்தின் கொள்விலைப் பணம் செலவாகுமென நச்மான் என்ற பொருளியலாளர் மதிப்பீடு செய்துள்ளார். ஆகவே பல போர் விமானங்களை ஈடுபடுத்தி நீருக்காகப் போரிடுவோர் இதைக் கருத்தில் எடுப்பது நலம்.

இன்று எகிப்தும் சூடான் நாடும் மோதல் நிலைக்கு வந்துள்ளன. இரு நாட்டு எல்லையில் போர் விரர்கள் தயார் நிலையில் நிற்கின்றனர். எகிப்தின் உயிர்நாடியான நைல் நதி பல நாடுகளைக் கடந்து அங்கு வருகின்றது; எகிப்து மண்ணை அடையுமுன் நைல் சூடான் நாட்டின் ஊடாகப் பாய்கின்றது. நீர் ஓட்டத்தைத் தடுக்கக் கூடிய அல்லது குறைக்கக் கூடிய நிலையில் சூடான் நாட்டவர் இருக்கின்றனர். இதேபோன்று துருக்கியின் மலைகளில் உற்பத்தியாகும் யூபிரட்டிஸ் நதி ஈராக், சிரியா ஆகிய இரு நாடுகளை வளமாக்குகின்றது. துருக்கியும் வறண்ட நாடுதான். அதன் சனத்தொகை வருடமொன்றுக்கு ஒரு மில்லியன் என்ற வீதத்தில் உயர்கின்றது. அவர்கள் தமது நீர்த்தேவைக்காக எதுவும் செய்யலாம்.

மத்திய கிழக்கில் மணல் மூடிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. இங்கு நதிகள் திடீரென மணலில் மறையும் அதிசயத்தைக் காணலாம், மிகவும் வெப்பமான மணற் காட்டில் நதிகள் மணலிற் புதைந்துவிடும். அல்லது முற்றாக நீராவியாக மாறிவிடும். மத்திய கிழக்கு நாடுகளிலும், வட - ஆபிரிக்க நாடுகளிலும் இதை அவதானிக்கலாம். உதாரணத்திற்கு அல்ஜீரியா, லிபியா, இஸ்ரேல், சவுதி அரேபியா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இவை பாலைவனத்திற் பாயும் நதிகளுக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். அரேபிய மொழியில இவ்வாறு நதி மறையும இடத்தை வாடி (Wadi) என்பர். கனடா அமெரிக்கா போன்ற நாடுகளின் பாலைவனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் இத்தகைய மறையும் நதிகள் உண்டு. ஒருபோதும் வற்றாமல் பாலைவனத்தை ஊடறுத்துப் பாயும் நதிகளும் உண்டு. நைல் நதி இதற்குச் சிறந்த உதாரணம்.

எகிப்துடன் செய்யப்பட்ட காம்ப் டேவிற் ஒப்பந்தத்தின்பின் இஸ்ரேல் அயல் நாடுகளுடன் உறவைச் சீராக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. பலஸ்தீனிய அரபுக்களுடன் தனக்குச் சாதகமான ஓர் உடன்பாட்டைச் செய்ததோடு ஜோர்தான் நாட்டையும் இஸ்ரேல் வசப்படுத்தியுள்ளது. இப்போது அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் இஸ்ரேல் – சிரியா பேச்சுகள் நடைபெறுகின்றன. சமரசம் ஏற்படுவதற்குத் தடையாக கோலான் குன்று (Golan Heights) எழுந்துள்ளது. சிரியாவிடமிருந்து இஸ்ரேல் இப் பகுதியைப் போரில் கைப்பற்றியுள்ளது. போர் நடந்த 1967 ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கு இஸ்ரேலைப் போகும்படி சிரியா நிபந்தனை விதித்துள்ளது. இதற்கு இணங்குவதால் இஸ்ரேல் இரண்டுவித அபாயங்களை எதிர்கொள்ளும். ஒன்று பாதுகாப்பு, மற்றையது நன்னீர்ப் பஞ்சம்.

பாதுகாப்புப் பிரச்சனையை ஒருவிதமாகச் சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் சமாளித்தாலும் நதிநீர்ப் பிரச்சனை சமாதானத்திற்குத் தடையாக இருக்கின்றது. இஸ்ரேல் நாட்டின் மிகப்பெரிய நன்னீர் ஏரி கலிலிக் கடலாகும் (Sea of Galilee). இஸ்ரேலிய மக்களின் மூன்றிலொரு வித நீர்த்தேவையைக் கலிலி பூர்த்தி செய்கின்றது. கோலான் குன்றிலிருந்து இஸ்ரேல் பின்வாங்கினால் சிரியா கலிலியின் வட-கிழக்கு எல்லைக்கு வந்துவிடும் நீரைப் பங்குபோடவும் சிரியா ஆரம்பித்துவிடும் அத்துடன் கலிலிக்கு வரும் நீரின் பெரும்பகுதி கோலான் குன்றில் உற்பத்தி ஆகின்றது அதையும் சிரியா தடுத்துவிடும் ஆகவே குன்றுப் பகுதியைத் திருப்பிக் கொடுப்பதால் இரண்டுவித நஷ்டம் இஸ்ரேலுக்கு ஏற்படும்.







பலஸ்தீனியர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் இஸ்ரேல் ஓரவஞ்சகமாய் நடந்துள்ளது. மேற்குக் கரையில் மிகப்பெரிய ஆழத்திலிருந்து குடிநீர் வெளிக்கொணரப் படுகின்றது. நிலத்தில் துளையிட்டுப் பாரிய எந்திரங்கள் மூலம் நீர் வெளியேற்றப்படுகிறது. இந்த மையம் இஸ்ரேல் நாட்டுப் பொறியியலாளர் கையில் இன்றுவரை இருக்கின்றது. பலஸ்தீனியர்களுக்கு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. யூதக் குடியேற்ற வாசிகளுக்குக் கூடுதல் நீர் கொடுக்கப்படுவதாகவும், பலஸ்தீனியர்களுக்குக் குறைத்துத் தரப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நீர் ஏற்றும் மையத்தை இஸ்ரேல் ஒப்படைக்குமா என்ற வினாவுக்கு சந்தேகம் என்பது விடை. ஏனென்றால்-யார் கையில் இதன் பொறுப்பு இருக்கிறதோ அவர் தான் மேற்குக் கரையின் அதிபதி. மத்திய கிழக்கு நாடுகள் யாவற்றின் மக்கள் தொகை வளர்ச்சியை நோக்குங்கால் இன்னும் கால்நூற்றாண்டில் ஒவ்வொரு நாடும் இருமடங்கு ஆகிவிடும். ஆனால் நீர்வசதி மாறாதிருக்கும். இதன் காரணமாகப் பெரும் குழப்பம் நிலவ வாய்ப்புண்டு. உலக நாடுகள் அமைத்துக் கொண்ட இயற்கை எல்லைகளில் நதிகளும் இடம்பெறுகின்றன. மேற்கு ஐரோப்பாவின் றைன் (Rhine) நதி பொருத்தமான உதாரணம். மறுவளத்தில் தென்-கிழக்கு ஆசியாவின் மீக்கொங் (Mekong) நதி திபெத்தில் தொடங்கி இடைப்பட்ட நாடுகள் யாவற்றையும் கடந்து தென்சீனக் கடலிற் பாய்கின்றது. எல்லையாகக் கொள்வதில் நம்பிக்கையற்றதாய் இருப்பினும் நதிகள் மனிதவாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இன்றைய உலகில் பல புதிய நாடுகள் தோன்றும் தறுவாயில் இருக்கின்றன. பிரிந்து செல்லும் நாட்டவரைத் தடுக்கும் நோக்கில் நதிகளைத் திசைதிருப்பும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன் நதியோர மக்கள் விகிதாசாரத்தை மாற்றும் குடியேற்ற நடப்புக்களும் செய்யப்படுகின்றன. நதிகள் அல்லது போதிய நீர் வசதி அற்ற பிரதேசமக்கள் தாம் பிரிந்து செல்லுமுன் நீர் சம்பந்தமான முடிவுகளை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

நியூஸ்வீக் ஜூலை 10, 1995

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொஸ்னியா:

# மோதல்கள் தொடர்கின்றன

*தமிழில் :*
திரு. த. கந்தசாமி—பாலன்

**முஸ்லிம் படைகள் காட்டும் எதிர்ப்பின் குறிக்கோள், சரஜீவோவைக் கைப்பற்றுவது என்பதல்ல. அது தோற்றுப் போனால் இராஜதந்திர முயற்சிகள் மூலம் இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கு நிர்ப்பந்திப்பதேயாகும்.**

பொஸ்னியா இப்போது துப்பாக்கிகள் கதை பேசும் ஒரு நாடாக மாறி வெகுகாலமாகி விட்டது. இப்போது பொஸ்னிய முஸ்லிம்கள் ஒரு யுத்தத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். சேர்பியர்களோ அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்குக் குரோசியர்களின் ஆதரவும் இப்போது கிட்டியுள்ளது. அத்துடன் பொஸ்னியாவுக்கான ஆயுத விநியோகக் கட்டுப்பாட்டைத் தளர்த்தவும் கிளின்ரன் நிர்வாகம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. மொத்தத்தில் போர்க்களத்தில் இப்போது புதிய காட்சிகள் அரங்கேறுகின்றன. இவற்றின் விளைவாக இந்தக் கோடைக்காலம் பொஸ்னியத் தலைநகரான சரஜீவோவிற்கு ஒரு நரகம் போல இருக்கக்கூடும். இவ்வாறு நேட்டோ எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்தின் அதிகாரி ஒருவர் எதிர்வு கூறுகிறார்.

இதேவேளை சரஜீவோ நகர மக்கள் எல்லா நம்பிக்கைகளையும் இழந்தவர்கள் போலக் காணப்படுகின்றனர். நசுங்கிப்போன நம்பிக்கைகளோடு இடிந்துபோய் இருக்கிறார்கள். எறிகணை வீச்சு ஒன்றில் காயம்பட்டுவிட்ட பொலுரக் என்ற பெண்மணி கூறியுள்ள வார்த்தைகள் இதற்கு ஓர் உதாரணம்: 'எமது இராணுவம் எம்மை விடுவித்துவிடும் என்று நான் நம்பவில்லை; சரஜீவோவை விடுவிக்க மாற்றுவழி எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை' என்பது அப்பெண்மணியின் வார்த்தைகளாகும்.

இந்த நிலைமைக்கு மத்தியிலும் பொஸ்னியாவில் தற்போது ஏற்பட்டுவரும் புதிய மோதல்கள் காரணமாக மேற்குலக நாடுகளிலிருந்து வந்த அமைதிப் படையினைச் சேர்ந்த துருப்புக்கள் தத்தம் நிலைகளிலிருந்து வெளியேறிவிடும் சாத்தியப்பாடும் அதிகமாகி வருகிறது. ஜி-7 எனப்படும் வளர்ந்த கைத்தொழில் நாடுகள் பொஸ்னியாவின் விடயத்தில் குறைந்தளவிலேயே ஆர்வங் காட்டியிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த துருப்புக்கள் ஐநாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதற்குப் பண உதவியைச் செய்ய ஜி-7 நாடுகள் இணங்கியுள்ளது உண்மைதான். எனினும் வளைகுடா போன்ற பகுதிகளிலுள்ள பணக்கார நாடுகளையும் இதில் பங்குகொள்ள வைக்க அவை முயல்கின்றன.

இத்தகைய சிக்கல்களுக்கு மத்தியில் தான் பொஸ்னியா இப்போது சிக்கிப்போயுள்ளது. இந்த நிலைமைகளைச் சாதாரண மக்களின் நலன் நோக்கிலிருந்து சீர்தூக்கிப் பார்த்துப் பொருத்தமான தீர்வுகளை அமுல்படுத்த முடியாத இக்கட்டுக்குள் ஐக்கிய நாடுகள் சபை உள்ளது என்பதற்குப் பொஸ்னியா பொருத்தமான எடுத்துக் காட்டாக மாறியுள்ளது.

## துப்பாக்கிகள் பேசும் கதைகள்

சரஜீவோ நகரைக் கைப்பற்றிக் கொள்வதற்காகப் பொஸ்னிய அரசுப் படைகள் சில தடவைகளில் முயற்சிகள் மேற்கொண்டன. சரஜீவோவைக் கைப்பற்றும்படி சுமார் 15,000 பேரைக் கொண்ட படையினருக்கு அரசு உத்தரவு வழங்கியபோது சிலர் எதிர்பாராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பங்கள் ஏற்படலாம் என்றே கருதியிருந்தனர். ஜூன் மாத நடுப்பகுதியில் பொஸ்னிய முஸ்லிம்களின் துப்பாக்கிகள் வெடிக்கத்தொடங்கின. இயந்திரத் துப்பாக்கிகளும், கனரக ஆட்டிலறிப் பீரங்கிகளும் சேர்பியர்களது நிலைகளை நோக்கி முழங்கின. சரஜீவோவின் வடக்குப் பகுதியில் ஆரம்பித்த இப்போர் 16 முதல் 19 கிலோ மீற்றர் வரை மேற்கு மற்றும் தென்மேற்குப் பகுதிவரை பரவியது. நகர மத்தியிலுங்கூட அரச தரப்புப் படைகள் எறிகணைகளை வீசிக்கொண்டிருக்க மோட்டார்களும், கவச வாகனங்களும் வளைய வளைய வந்துகொண்டிருந்தன. சரஜீவோவினுள் பொஸ்னியர்களின் குழுவொன்று ஆயுதங்கள் சகிதம் புகுந்துவிட்டிருந்தது. இந்தச் சண்டைக்கு வெளியே இருந்து அதனை அவதானித்துக்கொண்டிருந்த 66 வயதான ஓய்வுபெற்றவரான நியாஸ் முட்டிவேலிக் என்பவர் குறிப்பிடுகையில், பொஸ்னியர்கள் வெற்றி பெறாவிட்டாலும் அவர்கள் முயற்சி செய்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

வெடிச்சத்தங்களைக் கேட்டவுடன் சரஜீவோவில் வசித்த மக்கள் என்ன செய்வது என்பது தெரியாமல் ஒரு கணம் தடுமாறினார்கள். சரஜீவோவில் அரச தரப்புப் படைகள் முன்னேறுவதாக அறிந்து சந்தோஷப்பட்டனர். வானொலிக் கருவிகளைச் சாளரங்களுக்கு அருகில் வைத்துத் தெருவெல்லாம் சங்கீதமும், செய்திகளும் முழங்கச் செய்தனர். விருந்துபசாரங்களுக்காக மதுபானப் போத்தல்கள் வாங்கப்பட்டன. 43 வயதான செனாதாக் கோலி என்ற பெண்மணி தனது கண்களிலிருந்து வடிந்த நீரைத் துடைத்தபடி 'அன்பான கடவுளே, நாங்கள் வென்றுவிட்டோம். இது உண்மையாகவே இருக்கட்டும்' என்று வாய்விட்டுக் கூறினாள்.

ஆனால் அது அப்படியாக நீடித்துவிடவில்லை. சில தினங்களுக்கு உள்ளாகவே தங்கள் ஆசைகளை நிறைவேற்றி, தங்கள் தோல்விகளை ஈடுசெய்ய நினைத்த அவர்களது எதிர்பார்ப்புப் பூர்த்தியாகாமற் போயிற்று. இதனால் தங்கள் உணர்ச்சிகளை இழந்து மனம் உடைந்தவர்களாக ஒரு தனிப்போரினால் மட்டும் தங்கள் நகரத்தைச் சேர்பியர்களிடமிருந்து மீட்கமுடியாது என்பதை உணர்ந்தவர்களானார்கள். சரஜீவோவின் நிலைப்பாடு ஒரு மிகக்கடூரமான கொடுமைக்கு முன்னும் பின்னுமாக வளைந்து கொடுத்து ஈடாடிக்கொண்டிருந்தது.

கொடூரமானநிலை இதற்குமுன்னர் காணப்பட்டதில்லை. நகரத்திலிருந்த பல வீதிகளும் அடைக்கப்பட்டுவிட்டன. நகரின் அரைப் பங்குக்கு மேற்பட்ட மக்கள் பட்டினி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது. சமையல் வாயு, மற்றும் எரிபொருள்கள் கிடைக்கவில்லை. நீர்விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டது மொத்தத்தில் சரஜீவோவில் சிவில் அரசாங்க நடவடிக்கைகள் முற்றாக ஒழிந்துவிட்டன. சிற்றுண்டிக் கடைகள்,

**ஜூன் மாத நடுப்பகுதியில் சரஜீவோ நகர வாசிகள் கிட்டத்தட்ட எல்லா நம்பிக்கைகளையும் இழந்து விட்டார்கள். தமது இரத்த ஓட்டத்தையும் உண்மைகளை அறியும் தன்மைகளையும்கூட அவர்கள் பறிகொடுத்து விட்டார்கள்.**




கடந்த நாலு மாதங்களாக நிலவிய சமாதான நிலை சேர்பியர்களின் எறிகணை வீச்சுக்களால் சீர்குலைந்தது. அதனையடுத்துப் பொஸ்னியர்களும் பதில் தாக்குதல்களைத் தொடர்ந்தனர். சரஜீவோ நகரம் சொல்ல முடியாத அளவுக்குத் துன்பங்களைச் சந்தித்தது. 1992 இல் போர் மூண்டது முதல் இத்தகைய

சாப்பாட்டுக் கடைகள்கூடப் பூட்டப்பட்டன. ஐ நா ஸ்தாபனம் வழங்கிய நிவாரணப் பொதிகளில் தான் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. தினசரி வாழ்க்கை மிகவும் மோசமாகிவிட்டது. கொள்கலன்களுக்குள்ளே தண்ணீர் நிரப்பிக்கொள்ள நீண்ட பல மணித்தியாலங்கள் செலவிடவேண்டியதாயிற்று. சாளரங்க


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளவை நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு ஊடாகத் தானும் வெளியே பார்க்கமுடியாதபடி உடைந்த கண்ணாடிகளுக்குப் பதிலான ஒளி ஊடுருவ முடியாத பிளாஸ்ரிக் தகடுகளால் நிரப்பப்பட்டுவிட்டது. முதலில் வந்த வெற்றிச் செய்திகள் நிலைக்காமை காரணமாக ஏற்பட்ட மனக்கஷ்டம் சொல்லுந்தரமன்று. சேர்பியர்கள் தான் குண்டுகள் வீசுவதற்குச் சுதந்திரம் உடையவர்கள் போல தொழிற்பட்டார்கள். இதனால் விடுதலைக்குரிய வாய்ப்புக்கள் வெறும் பொய்த் தோற்றம் போல ஆகிவிட்டன சரஜீவோ பிரஜைகள் தங்களது பொறுமையையும், சகிக்கும் தன்மையையும் இழந்து விட்டார்கள். தம்மிடம் இருக்கும் நம்பிக்கைகளை மட்டுமே ஒழுங்காகப் பேணவேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. எனினும் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து விட்ட அந்த நகர மக்களிடமிருந்து 'எங்களுடைய வீரர்கள் சரஜீவோவை மீட்டெடுக்கத் தைரியம் இல்லாதவர்கள். எமக்குச் சுதந்திரம் கிடைப்பது கடினம்' என்ற முனகல்கூடச் சில சமயங்களில் மேலோங்குகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் சரஜீவோ நகரவாசி ஒருவர் எழுப்பிய கேள்வி மிகவும் இலகுவானது. இத்தகைய வாழ்க்கையைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா? போராடுவது இதைவிட நல்லது அல்லவா? இந்தக் கேள்விக்கு அவரது மனைவியும், மற்றும் அயலவர்களும் அளிக்கும் விடை அரசியல் எங்களைப் பிரித்துவிடக் கூடாது என்பதாகத்தான் இருந்தது. இதை அவர் விளக்குகையில் நான் ஒரு குரோசியன், எனது மனைவி நாடா ஒரு சேர்பியப் பெண், நியாசும், செனடாவும் முஸ்லிம்கள். இதுதான் சரஜீவோ எனக் குறிப்பிட்டார்.

மூன்று வருடங்களுக்கும் மேலாக நடைபெறும் போரிற் கடந்த ஜூனில் இடம்பெற்ற சண்டை மிக மோசமானது. சனாதிபதி அலியா இசெற்பசோவிச் நகரத்திற்கு மேலதிக தொந்தரவுகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பணித்து இருந்தார். சரஜீவோ மீதான சேர்பியர்களின் பிடி தளர்வடையத் தொடங்கியிருந்தது. 3 வாரத்திற்கும் மேலாக மின்வெட்டு, எரிவாயு, எரிபொருள் என்பன முற்றாக இல்லாத நிலை, கைப்பம்பிகள் இயக்கித்தான் தண்ணீர் பெற வேண்டிய நிலை. அத்தியாவசியப் பொருள்களுக்குக்கூடச் சேர்பியப் படைகள் தடைவிதித்துவிட்ட நிலைமை. விமானத்தின் மூலமும் பொருள்களைக் கொண்டு வருவதற்குச் சாதகமான சூழல் இல்லாமை. அப்படிப்பட்ட நிலைமைக்கு மத்தியிலுங்கூட சாதாரணமான ஆயுதங்களுடன் பொஸ்னியர்கள், சேர்பியருடைய பாசறைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி இருக்கின்றனர். பொஸ்னியப்படைகள் நடத்திய இத் தாக்குதலின் நோக்கம் சரஜீவோவைக் கைப்பற்றுவது என்பதல்ல. சரஜீவோவைக் கைப்பற்றுவது சாத்தியமற்றுப் போனாலும் இராசதந்திர முயற்சிகளின்மூலம் இணக்கப்பாடு எட்டுவதற்கு நிர்ப்பந்தங்கள் ஏற்படும் என்பதனாலாகும்.

யுத்தப் பாதிப்பு:

சேர்பிய எதிரணியினரின் அகோரமான ஷெல் வீச்சின் மத்தியில் பொஸ்னிய தலைநகர்.



## வெளியேற ஆசைப்படும் மேற்குலகத் துருப்புக்கள்

பொஸ்னியாவில் தற்போது ஏற்பட்டுவரும் புதிய மோதல்கள் காரணமாக மேற்குலக நாடுகளிலிருந்து வந்துள்ள ஐ நா படையணிகள் அங்கிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்பதிலேயே ஆர்வங் காட்டுகின்றன. நோவா ஸ்கொசியாவின் ஹலிபாக்ஸ் நகரிற் பிரதான கைத்தொழில் நாடுகளான ஜி-7 நாடுகளின் தலைவர்கள் அண்மையிற் கூட்டமொன்றை நடத்திய போது, பொஸ்னியா விவகாரத்தை விடவும், மெக்சிக்கோவில் இடம்பெற்றது போன்ற பொருளாதாரச் சிக்கல்களிலேயே அதிகம் ஆர்வங் காட்டியுள்ளனர். பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் டச்சுத் துருப்புக்களைஉள்ளடக்கிய 10,000 பேரைக்கொண்ட ஓர் அணி ஐ நாவிற்கு ஆதரவாகச் செயற்படுவதற்கான பண உதவியை வழங்க இந்தக் குழு இணக்கந் தெரிவித்துள்ளது. எனினும் வளைகுடாவிலுள்ள பணக்கார நாடுகளை இதற்குள் இழுத்துவிடுவதில் அவை ஆர்வங் காட்டுகின்றன. குரோசியர்கள் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் சண்டையில் இணைந்துள்ள நிலையில் துரித அதிரடிப்படைகளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய ஐ நா படைகளை விலக்கிக் கொள்வது நேட்டோவின் அபிப்பிராயமாக உள்ளது. இது எந்த வேளையிலும் நடைபெறக் கூடும், குரோசியர்கள் முஸ்லிம்களுக்கு ஆதரவானவர்கள் என்ற எண்ணம் மேற்குலக நாடுகளிடம் இருப்பதும் இதற்கு ஒரு காரணம்.

போரில் முஸ்லிம் படைகளுக்கு உதவும் வகையில் முதற் நடவையாக முற்றுகையிடப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகர் சரஜீவோவைச் சுற்றி நடைபெறும் சண்டையில் குரோசியப் படையினர் கனரகப் பிரங்கித் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். சேர்பியர்களுடன், 3 வருடங்களாக நடக்கும் போரில் சரஜீவோவைச் சுற்றியுள்ள சில இடங்கள் மீட்கப்படுவதற்கு இத் தாக்குதல்கள் உதவியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**பொஸ்னியாவில் ஏற்பட்டுவரும் புதிய மோதல்கள் காரணமாக மேற்குலகப் படையினர் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படலாம்.**

இதேவேளை கனரக ஆயுதங்கள் பின்தள்ளப்பட்ட நிலையில் ஐ நா படையினர் கடத்தப்படும் சம்பவங்களும் நடைபெறத் தொடங்கியுள்ளன. நாங்கள் யுத்தத்தை நோக்கியே செல்கிறோம் என்பது சேர்பியர்களின் கருத்தாக உள்ளது. குரோசியர்களது உதவிகள் கிடைக்கும் வரையில் பொஸ்னியர்களின் நிலைப்பாட்டில் மாற்றங் காண்பது கடினம் என்றும் கருதப்படுகிறது. “ இந்த நிலையில் தான் இந்தக் கோடைகாலம் ஒரு நரகம் போல இருக்கலாம் ” என்று நேட்டோ அதிகாரி ஒருவர் எதிர்வு கூறுகிறார். அது உண்மையானால் அந்தச் சூட்டைத் தாங்கிக் கொள்ள மேற்குலகம் நீண்டகாலம் காத்திருக்கத் தேவையில்லை.

## அமெரிக்காவின் யுத்த வியூகம்

பொஸ்னியாவின் இப்போதைய நிலவரங்கள் கேள்விக்கு இடமில்லாதபடி ஏற்றுக்கொள்ள முடியாதவை. பொஸ்னியாவிலுள்ள ஐ நா படைகளினால் பாதுகாப்பான இடங்கள் என்று ஒதுக்கப்பட்ட பகுதிகளைக் கூடக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இது ஐ நா, நேட்டோ மற்றும் பொதுவான மேற்கு நாடுகள் யாவற்றையும் கேலி செய்வது போல அமைந்துவிட்டது. எனவேதான் தொடர்ந்து செயற்படுவதா? அப்படியாயின் எந்த வழியிலே அது இருக்க வேண்டும்? என்பது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் பொஸ்னியா நிலைகுறித்து எழுதிய அறிக்கையொன்றிற் குறிப்பிட்டு இருக்கிறார்.

அதில் அவர் அமெரிக்காவின் யுத்த வியூகம் பற்றி மேலும் குறிப்பிடுகையில் நேட்டோவும், அமெரிக்காவும் இணைந்து தரைப்படை மூலம் மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்து சண்டைக்குக் காரணிகளாக இருக்கிற பகுதிகளைக் கைப்பற்ற வேண்டும் அல்லது பொஸ்னியாவுக்கான ஆயுத இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்திப் பொஸ்னியர்களே தங்களுக்காகப் போரிடும் நிலையை உருவாக்க வேண்டும். இரண்டாவது வழி சக்தி மிக்கது போலக் கவர்ச்சிகரமாக இருக்கலாம். ஆனால் அது இலகுவானதல்ல என்பதுடன் அமெரிக்க நலன்களுக்கும் உகந்ததாக இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

பொஸ்னியாவுக்கான ஐ நாவின் முயற்சி ( Unprofor ) உண்மையான சமாதான சக்தி இயக்குனராக மாறிவர வேண்டும். பிரித்தானியாவும், பிரான்சும் இதற்கு ஒத்துழைத்து சரஜீவோவுக்கான தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்க வேண்டும். மேலும் ஐ நாவின் முயற்சிக்கான தைரியம் ஆதரிக்கப்பட வேண்டும். சமாதான வழிகளுக்கு ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். அமெரிக்க காங்கிரஸ் ஒருதலைப்பட்சமாக ஆயுதக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றி முடிவு காணவேண்டிய இத் தருணத்தில் சில சமயம் முட்டுக்கட்டை போடவும் நேரிடலாம். இது எமது நேச நாடுகளுக்கு அவை பொஸ்னியாவிலே சிநேக பூர்வமாக இருந்து பொறுப்புடன் பாடுபடுவதற்கு ஏற்றதாக இருக்கும். இதுதான் அமெரிக்காவின் யுத்த வியூகம் என்று குறிப்பிடலாம்.

இதே வேளை கடந்த ஓகஸ்ற் மாத முற்பகுதியில் அமெரிக்க செனட்சபை 69: 29 என்ற விகிதப்படி பொஸ்னியாவுக்கான ஆயுத விற்பனைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியுள்ளது. இது செலட்ஜிசிக்கில் உள்ள மக்களுக்குப் பேரானந்தம் தரும் செய்தியாகும். மேற்கத்தைய நாடுகளின் தலைநகரங்களிற் கிட்டத்தட்ட ஒரு யாசகர் போல அலைந்து திரிந்து தமது நாட்டிற்கான ஆயுத விற்பனைத் தடையை நீக்கும்படி கோரிவந்த பொஸ்னியப் பிரதமர் இதனைத் தமது வெற்றி என்று இறும்பூது எய்துகிறார். இது ஒரு திருப்புமையம் தான்.

இது ஒருபுறமிருக்க அமெரிக்க செனட் சபையின் முடிவினால் அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே கசப்புணர்வுகள் தோன்றியிருக்கின்றன. காங்கிரசுக்கும், வெள்ளைமாளிகைக்கும் இடையிற்கூடக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. செனட் சபையின் ஆயுதத் தடைத் தளர்வுக்கு எதிராக வெள்ளைமாளிகை தனது ரத்து அதிகாரத்தைப் (Veto Power) பயன்படுத்தலாம் எனவுங் கூட எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அமெரிக்காவின் இந்த ஒரு தலைப்பட்சமான முடிவுகள் மேற்குலக நாடுகளின் கொள்கைகளுக்கு இடைஞ்சலாகவிருந்து தோல்வியையே பிரதிபலிக்கின்றன. ஒரு வகையிற் பொஸ்னியர்களுக்கு உதவுவது போலவும் இருக்கிறது. மறு பக்கத்தில் சேர்பியாவுக்கு எதிராக நேட்டோவின் ஆகாயத் தாக்குதல்களுக்கு எதிரான குறுக்கீடுகள் செய்வது போலவும் இருக்கிறது. மொத்தத்தில் பொஸ்னிய விவகாரத்தில் இருக்கும் பிரச்சனைகளுக்கான இறுதித்தீர்வு என்ன என்பது இன்னமும் தெளிவாக இல்லை.

ஆனால், கிளின்ரன் யுத்தத்தை உண்மையாகவே அமெரிக்கமயமாக்கவே விரும்புகிறார் எனவும் கூறப்படுகிறது. ஏனெனில் பொஸ்னியத் தலைவர்கள் பெரும்பாலும் ருஷ்யத் தயாரிப்பான கனரக ஆயுதங்களையும், ராங்கிகளையும் உபயோகிக்கவே விரும்புகின்றனர். அத்தகைய ஆயுதங்களிற் கடந்த காலங்களிற் பயின்றும், பழகியும் அவர்களுக்கு அனுபவம் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். எனவே யுத்தத்தை விரைவாக முடுக்கி நடத்துவதற்கு இதுஉதவும் என்பது அவர்களது எண்ணம்.

டைம் ஜூன் 03, 26, 1995
டைம் ஜூலை 17, 31, 1995
நியூஸ்வீக ஜூன் 26, 1995
ஆகஸ்ட் 7, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமைமிக்க இராணுவத்தின் நகைப்புக்கு இடமான போர்.

# செச்னியாவில் ருஷ்ய இராணுவம்.

அகில உலகத்துக்கும் தலைவராக வர ஆசைப்படுகிறார் ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சின். ஆனால் நாட்டுக்குள்ளே நடக்கும் விடயங்களில் கட்டுப்பாடுகளை அவர் இழந்து வருவதாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் சந்தேகிக்கிறார். துருப்புக்களின் நம்பிக்கையை எப்போதோ இழந்துவிட்ட பாவெல் கிரச்சோவ்வின் தலைமையிலான இராணுவம் செச்னியாவில் எடுத்த நடவடிக்கைகள் சிரிப்புக்கிடமானவையாகி விட்டன. கிரெம்ளின் மாளிகையில் இருந்து பிரதமர் எடுத்த நடவடிக்கையால் பணயக் கைதிகள் பாதுகாப்பாகத் திரும்ப வழி ஏற்பட்டது.

தமிழில் :
திரு. கந்தசாமி — பாலன்

ஜூன் மாதம் 21 ஆம் தேதி சேறு பூசியபடி நான்கு பஸ்வண்டிகள் புட்டியன் ளோவ்ஸிக் நகர மத்திய சதுக்கத்திற்கு வந்துசேர்ந்தன. குடிமக்கள் மிக்க ஆர்வத்துடன் அந்த பஸ் வண்டிகளுக்கு மிகச் சமீபமாக நெருக்கியடித்தார்கள். அறிமுகமானவர்கள் எவராவது இருக்கின்றனரா என்பதை அறிவதே பார்வையிட முன்வந்தவர்களின் நோக்கமாக இருந்தது.

இது நிகழ்வதற்குச் சுமார் ஒரு வாரத்திற்கு முன்புதான் செச்னியப் படையினரால் ஆயிரத்துக்குமேற்பட்ட ருஷ்பர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பணயக்கைதிகள் மீட்பு நடவடிக்கையானது சுமார் 120 உயிர்களைப் பலி கொண்டதுடன் ருஷ்ய அரசியலரங்கில் பலவித சர்ச்சைகளையும் உருவாக்கியதாக மாறிவிட்டது. இந்தப் பணயக்கைதிகளின் விடுதலையென்பது ருஷ்யப் பிரதமர் விக்ரர் சேர்னோமைடின் மற்றும் செச்னிய கிளர்ச்சிக்காரர்களின் தலைவரான ஷாமில் பசயேவ் ஆகியோருக்குமிடையிலான உடன்பாட்டின் மூலம் சாத்தியமாகியுள்ளது. கட்டங் கட்டமாக இடம்பெற்ற இப் பணயக்கைதிகள் விடுவிப்பில் இறுதிக் கட்டமாக 123 பேர்களும் நாலு பஸ்வண்டிகளில் ஜூன் 21 ஆம் தேதியன்று கொண்டு வரப்பட்டார்கள்.



நாங்கள் கொள்ளைக்கோஷ்டியல்ல: *புட்யோனொவ்ஸ்கில் செச்னிய தலைவர் பசயேவ்.*

மாஸ்கோவில் ஒரு மகிழ்ச்சிகரமான உணர்வலைகளை இந்தச் சம்பவம் ஏற்படுத்தி விட்டது என்றே கூறலாம். சனநாயகவாதிகள் முதல் தீவிர தேசியவாதிகள் வரை அரசியற் கருத்து வேறுபாடுகள் கடந்து ஏறத்தாழ அனைவரும் ருஷ்யாவின் கிரெம்ளின் மாளிகையில் நடந்த இந்த மகிழ்ச்சிகரமான சம்பவத்தில் ஒன்றுபட்டு ஆரவாரித்தார்கள். ஆனால் இதற்கு முன்பாக நடந்தவைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியவைகள்.

ஆத்திரம் கொண்டிருந்த ருஷ்யப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிபர் பொறிஸ் யெல்ற்சினுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்மொழிந்தார்கள். பாதுகாப்பு மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்கள் பதவி நீக்கப்பட வேண்டுமெனக் கோரினார்கள். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பாராளுமன்றத்துக்கும் அதிபருக்கும் இடையே இடம்பெற்றுவரும் அதிகாரப்போட்டி நாடகத்தின் மற்றுமோர் அங்கம் என்று கூறிக்கொள்ளக்கூடிய அளவுக்கு சம்பவங்கள் இடம்பெற்றன.

பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்ட நிகழ்ச்சிகூட அதிபர் பொறிஸ் யெல்ற்சின் அரசாங்கத்தைத் தமது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாரா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. ஜூன் 16 ஆம் தேதியன்று - அதா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது செச்னியாவில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரான இரு தினங்களில், சக தலைவர்களான ஏழு கைத்தொழில் நாடுகளின் தலைவர்களைச் சந்திப்பதற்காக ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சின் புறப்பட்டுவிட்டிருந்தார். அவர் அங்கிருக்கும் போது பணயக்கைதிகளின் விடுவிப்பிற்காக ருஷ்ய இராணுவம் இரண்டு தடவைகளில் பாரிய முயற்சிகளை மேற்கொண்டது. பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த புட்டியன் ளோவ்ஸிக் வைத்தியசாலையின் மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மோசமான விளைவுகளை இத்தாக்குதல் ஏற்படுத்திய போதும் பணயக்கைதிகள் விடுவிக்கப்படவில்லை. மாஸ்கோவை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக இராணுவ நடவடிக்கைக்கான உத்தரவுகளைப்பிறப்பித்ததாகஅங்குயெல்ற்சின் தெரிவித்திருந்தார். ஆனால் இராணுவத்தினர் தன்னிச்சையாக செயற்பட்டதாகவே ஏனைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 'செச்னியா' தான் உலகப் பயங்கரவாத இயக்கத்தின் மையப்புள்ளியென்று யெல்ற்சின் அங்கு தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகின. ஆனால் யெல்ற்சின் தமது கட்டுப்பாடுகளை இழந்துவிட்டார் எனவும், தமது சொந்த நாட்டில் நடைபெறும் விடயங்கள் பற்றித் தெரியாதவராக இருக்கிறார் எனவும் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு எண்ணம் ஏற்பட்டிருந்தது.

ருஷ்யப் பிரதமர் விக்ரர் செர்னோமைடின் அதிபர் அலுவலகமான கிரெம்ளின் மாளிகையிலிருந்து செச்னிய கிளர்ச்சித் தலைவர் பசயேவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். இது அனைவரையும் ஆச்சரியத்திலாழ்த்தியது. தொலைக்காட்சிக் கமெராக்கள் தமது தொலைபேசித் தொடர்புகளைப் பதிவு செய்துகொள்வதற்கும் பிரதமர் செர்னோமைடின் இணக்கந் தெரிவித்திருந்தார். செச்னியர்கள் பாதுகாப்பாக வீடு திரும்புதற்கும், போர்நிறுத்தம் ஏற்படுவதற்கும், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கும் உடன்பாடு காட்டியதன் மூலம் பணயக் கைதிகளின் விடுவிப்பு இலகுவாகியது. நெருக்கடிக்கு இராணுவத் தீர்வு காண விரும்பிய படை மற்றும் பாதுகாப்பு அமைப்புக்களுக்கிடையே அதிபர் யெல்ற்சினின் ஒப்புதல் இல்லாமலேயே தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் பிரதமர் செர்னோமைடின் வெற்றி கண்டிருந்தார் என்பதை இது காட்டியது. இந்தப் பேச்சுக்களின் போது ருஷ்யப்படையினர் திரும்பி அழைக்கப்படுவதற்கும், செச்னியர் நிராயுதபாணிகளாக்கப்படுவதற்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அதாவது ஒட்டுமொத்தமான சமாதான உடன்படிக்கையொன்று பற்றிப்பேசப்பட்டது. எனினும் அரசியல் பிரச்சனைகள் அப்படியேதான் நீடித்தன.

## சனாதிபதியின் தளபதி

இதேவேளை செச்னியாவின் நகரங்களையும், பட்டினங்களையும் கைப்பற்ற ருஷ்யப் படையினர் மேற்கொண்ட முயற்சிகள் மிகவும் சிரிப்புக்கு இடமானவையாகி விட்டன. 1991 இல் நடந்த சதிப் புரட்சிக்குப் பின்னர் மாஸ்கோ தனது நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கான ஒரு தளமாகச் செச்னியா இப்போது மாறிவிட்டது. ருஷ்யத் துருப்புக்கள் தொடர்ந்தும் செச்னியாவில் நிலை கொண்டிருக்க வேண்டுமென ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சின் ஜூலை முதல் வாரத்திலேயே உத்தரவு பிறப்பித்திருந்தார். இது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முற்பட்டவர்களுக்கு ஒரு மிரட்டல் போல அமைந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாதுகாப்பு அமைச்சர் பாபெல் கிரச்சோவ், 'இத்தகைய முயற்சிகள் செச்னியர் மீண்டும் ஒருங்கிணையவும், படையினர் மீதான தாக்குதலுக்குத் தயார்ப்படுத்தவும் வாய்ப்பளித்து விடும்' எனக் குறிப்பிட்டார். இதனிடையே கிரெம்ளின் மாளிகையின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்றதொரு கேள்வி எழுந்ததையடுத்து கிரெச்சோவ் பாராளுமன்றத்தில் சர்ச்சைகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. கிரச்சோவின் தந்திரங்களும், விரிவாக்கல்களும் முன்னர் ஒருபோதும் இல்லாத அளவுக்கு. தரங் குறைந்தவையென்று நியாயமான அவதானிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது பிளவுபட்டுள்ள செச்னியாவிலிருந்து ருஷ்யப் படையினரை இரு மணி நேரத்தினுள் வெளியேற்ற முடியுமென இவர் ஆருடம் தெரிவித்திருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஆனால் பாதுகாப்பு அமைச்சரான பாவெல் கிரச்சோவின் பணிப்புரைகளை உயர்மட்ட அதிகாரிகள் அனைவரும் மதிப்பதாகக் கூறுவதற்கில்லை. இப்படியிருக்கும் போதும் யெல்ற்சினுக்கும், கிரச்சோவுக்கும் இடையிலான உடன்பாடு மேலும் பலமடைகிறதேயல்லாமல் குறைபாடு காணக்கூடியதாகக் கருதப்பட முடியவில்லை. இதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள செச்னிய யுத்தம் நிறையவே துணை செய்கிறது. அமைச்சரவை உறுப்பினர்கள் தத்தம் பதவி துறப்புக் கடிதங்களைச் சமர்ப்பிக்கும்படி அதிபர் யெல்ற்சின் கோரிய போதுங் கூட, கிரச்சோவ் அதற்காக வளைந்து கொடுக்கவில்லை. ஆனாலும் கூட யெல்ற்சின் கிரச்சோவின் மீது கொண்டுள்ள நம்பிக்கை எந்த வகையிலும் தளர்ந்து போய்விட்டதாகக் கூறுவதற்கில்லை. செச்னிய யுத்தம் தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே கிரச்சோவ் யெல்ற்சினின் நம்பிக்கையை வென்று விட்டார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. 1993 ஒக்ரோபரில் எதிராளிகள் யெல்ற்சினைத் தூக்கியெறிய முற்பட்டபோது எந்தத் தயக்கமும் இல்லாமல் இராணுவத்தை வரவழைத்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தவர் கிரச்சோவ். தித்ரி ட்ரெனின் என்ற இராணுவ ஆய்வாளர்கூறுகையில்: ''கிரச்சோவ் போர் வீரர்களின் தளபதியாக இல்லாமல், சனாதிபதியின் தளபதியாகச் செயற்படுகிறார்'' எனவர்ணித்தார்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

# ஐரோப்பா

தனது துருப்புக்களின் நம்பிக்கையைக் கிரச்சோவ் இழந்து பல காலமாகி விட்டது. இவ்வாறு பல அதிகாரிகளும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக மால்டோவாவிலுள்ள ருஷ்ய இராணுவத் தளபதியான ஜெனரல் அலெக்சாண்டர் லெப்பெட், கிரச்சோவின் தலைமைத்துவத்தை எதிர்ப்பதாகத் தெரிவித்தார். ஆனால் அவரது பதவி பறிக்கப்பட்டுவிட்டது. யெல்ற்சினுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் ஜெனரல் அலெக்சான்டர் லெப்பெட் அடுத்த வருட சனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடக்கூடும்.

கிரச்சோவின் இத்தகைய நிலைப்பாடுகளுக்கு மத்தியில் செச்னியாவிற் போரிடும் படையினரின் நிலை கவலைக்குரியதாகவுள்ளது. இராணுவத்தினர் மத்தியிற் கட்டுப்பாடு மிகக் குறைவாக இருப்பதுடன் போராட்டத்தில் ஏற்படும் இழப்புக்களைவிட அதிகமாகத் தவறான ஆயுதப்பாவனைகளால் ஏற்படுகிறது. மது போதையின் காரணமாகக் கடமை தவறுதல் உயிரிழப்புகளுக்கு வழி கோலுகிறது. படை வீரர்களின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. பெரும்பாலும் ஏமாற்றப்பட்டு விட்டவர்கள் போன்றதொரு மனநிலையே படையினர் மத்தியிற் காணப்படுகிறது. குறைவான சம்பளம், நோய் தரக்கூடிய வசதியற்ற இருப்பிடங்கள் என்பன பொதுவானவையாகவுள்ளது. ஆனால் ஒப்பந்த அடிப்படையில் அலுவலகங்களிற் கடமை புரியும் இராணுவ அதிகாரிகள் உயர்ந்த சம்பளம் பெற்றுச் சந்தோசமாகவுள்ளனர். அதாவது படைவீரன் என்ற நிலையில் தொழில் செய்யும் ஒருவர் பெறும் வசதிகள் குறித்து திருப்திப்படவே முடியாது என்கிறார் ஜெனரல் மக்கேயில் கொலசிகோவ். அத்துடன் தொழில்முறை இராணுவம் இப்போது ஆடம்பரமானதாகி விட்டது. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று அவர் மேலும் கூறுகிறார்.

பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையான மோவில் கிரச்சோவ் மீது பல விதமான கண்டனங்கள் கூறப்படுகிறது. இராணுவ அமைப்பைச் சீர்திருத்தும் எண்ணம் எதுவும் அவருக்கு இல்லை என்பதும் இவற்றில் ஒன்றாகும். அவரது பெயர் குறிப்பிடப்படாதபோதும் கள்ளத்தனமான புன்முறுவல் காட்டாமல் கோபத்துடனான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது பாதுகாப்புக் குழுவின் லிபரல் தலைவரான சேர்ஜி யுசெக்கோவ் கூறுகையில், ''படைப்பலத்தைப் பயன்படுத்தும்படி கிரச்சோவ் சிபார்சு செய்வதைப் பார்க்கும்போது அளவுக்கு அதிகமான இரத்தவெறி பிடித்தவர் என்றே எண்ணத் தோன்றுகிறது'' என்கிறார். ''முன்னைய சோவியத்தின் இராணுவ இயந்திரத்தை விற்றுவிட்ட ஒரு படையமைப்புக்கு கிரச்சோவ் தலைமை தாங்குவதாக'' பாதுகாப்புக் குழுவின் கம்யூனிஸ்ற் உறுப்பினர் விக்ரர் இலுக்கிக் குறிப்பிடுகிறார். எந்தவிதமான முணுமுணுப்பும் இல்லாமல் தளபதிகள் கடமையாற்றுவது அவர்கள் அனைவரும் ஊழல்களுடன் தொடர்புபட்டிருப்பதனால் ஆகும் என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.

மனத்தளர்ச்சியடைந்துள்ள இராணுவத் தளபதிகள் அரசியலில் ஈடுபடலாம் எனவும், குறிப்பாகத் தமது அரசியல் விருப்பங்கள் குறித்து எதுவும் பேசாத பாதுகாப்பு அமைச்சர் தலைமை வகிக்கும்போது இதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது எனவும் விக்ரர் இலுக்கின் உட்பட மற்றும் பலர் எச்சரிக்கின்றனர். கிரெம்ளின் மாளிகையிலும் இது எதிரொலிக்கிறது. எந்தவொரு நாட்டிலும் அரசியற் கொள்கை விவகாரங்களைத் தீர்மானிப்பதில் இராணுவம் பங்கு வகிப்பது ஆபத்தானது. ருஷ்யாவுக்கும் அது பொருந்தும் என்கிறார் கிரெம்ளின் மாளிகையின் உயர் அதிகாரி ஒருவர்.

இவ்வாறாக எல்லாத் திசைகளில் இருந்தும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வரும் சூழலிலும் பழைய பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் கிரச்சோவுடன் நெருக்கமாகி ஆயுதப் பாவனை விடயத்தில் தலையிடுகின்றனர். '' 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளிலும் சரித்திரமான சம்பவங்கள் இடம்பெற்ற ஒவ்வொரு காலத்திலும் ருஷ்ய இராணுவத்தின் ஒழுக்கச் சீர்கேடுகள் பெரும் சர்ச்சைக்குரியனவாக இருந்துள்ளன'' என்பதை நினைவுபடுத்தும் ஜோர்ஜியா, ஆர்மீனிய முன்னாள் பிரதிப் பாதுகாப்புத் தளபதியான வசிலி பெல்செவ்கோ மேலும் கூறுகையில், 'இராணுவத்திடம் ஒரு கைமுஷ்டியின் பலம் எப்போதும் எத்தருணத்திலும் இருக்கும். ஆனால் அது எத்தகைய தாக்கத்தைக் கொடுக்கும் என்பது ஐயத்திற்குரியது. எனினும் இதனை யார் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தான் கேள்வி'' என்கிறார்.

நியூஸ்வீக் ஜூன் 26, 1995
டைம் ஜூலை 3, 1995
நியூஸ்வீக் ஜூலை 17, 1995.

## புல்வெட்டும் இயந்திரம்

மின்கலங்களால் இயக்கப்படும் சாதாரண புல் வெட்டும் இயந்திரங்களில் இருந்து வேறுபட்டதாகப் பிளாக் அன்ட் டெக்கர் சி எம். எம். 650 வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் வெட்டப்படும் புற்களைப் பக்கத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் உறைக்குள் அடைத்துவிடுகிறது. 12 வோல்ற் மின்கலத்தின் மூலம் கடுமையான புல் நிலம் ஒன்றில் 75 நிமிடத்தில் இது தனது வேலையை முடித்துவிடுகிறது. 399 அமெரிக்க டொலர்களுக்கு இது பெறக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலப் பேரிடி

## மொஸ்கோவின் கட்டுப்பாடு தளர்ந்து விட்ட நிலையில் அணுக் குண்டு செய்வதற்கான மூலப் பொருள்கள் - ருஷ்யாவிலிருந்து வெளியேறிப் பயங்கரவாதிகளின் கைக்கு வந்து சேருமா?

தமிழில் : திரு. த. கந்தசாமி

நியூயோர்க் நகரில் பயங்கரவாதிகள் இருவர் நடத்திய குண்டுத்தாககுதலில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப் பட்டனர். இந்தப்பயங்கரவாதிகளின் கைக்கு எப்படி இக்குண்டைத் தயாரிப்பதற்கான அணுப்பொருள்கள் வந்து சேர்ந்தன என்பது பெரிய மர்மமாகவே உள்ளது. இதற்குத் தேவையான புளுற்றோனியத்தை உற்பத்தி செய்வதோ அன்றி யுரேனியத்தைச் சுத்திகரிப்பதோ இலகுவானதன்று. எனவே இம்மூலப்பொருள்கள் சில நாடுகளில் இருந்து திருடப்படுகின்றன என்றே நம்ப வேண்டியுள்ளது. அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட விரும்பும் சிறிய நாடுகளுக்கு இம் மூலப்பொருள்கள் சென்றடைவதையும், ஏற்ற தொழில்நுட்ப அறிவு சென்றடை வதையும் தடுப்பதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது. அணு ஆயுதப் பரம்பலைத் தடுப்பதில் இந்நாடு மிகவும் அக்கறையாக உள்ளது.

அமெரிக்காவுக்கும் முன்னைய சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான அணு ஆயுதப்போட்டி தவிர்க்கப்பட்டு, இரு பகுதியினரும் தங்கள் வசம் இருந்த அணு ஆயுதங்களைக் குறைத்துள்ளனர். சிலவற்றை அழித்துள்ளனர். இவ்வகையில் அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் ஓர் ஒப்பந்தத்தில் 170 நாடுகள் ஒப்பம் இட்டுள்ளன. இன்று அணு ஆயுத உற்பத்தி நாடுகளாக அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரித்தானியா,



பிரான்ஸ், சீனா ஆகியவை விளங்குகின்றன. மேலும் இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இரகசியமான முறையில் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. வேறு சில நாடுகள் இம்முயற்சியை முற்றாகக் கைவிட்டுள்ளன. இதனிடையே ஈராக், லிபியா, ஈரான் ஆகிய இசுலாமிய நாடுகள் இவ்வகை ஆயுத உற்பத்தியில் ஆர்வங் காட்டி வருகின்றன. இத்தகு ஆயுத உற்பத்திக்கான தொழில் நுட்பத்திறமையும், இதற்கான மூலப்பொருள்களும் இந்நாடுகளிடம் இல்லை என்பது உண்மை. இவற்றை நோக்கும் போது அணு ஆயுதத்தால் உலகுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளதென்று கூறமுடியும்.

ஆனால் பயங்கரவாதிகள் கைக்கு இந்த மூலப்பொருள்கள் சென்றடையக்கூடிய வாய்ப்பு முன்னரைவிட இப்போது கூடுதலாக உள்ளது. 1991 ம், 1993-ம் ஆண்டுகளில் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் தங்கள் அணு ஆயுதங்களையும், ஆயுத உற்பத்தியையும் பெருமளவிற் குறைத்துக் கொண்டன. ஆயினும் புளுற்ரோனியம், யுரேனியம் ஆகிய மூலப்பொருள்களைப் பாதுகாப்பதில் பெருஞ் சிரமம் ஏற்பட்டுள்ளது. ருஷ்யாவின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள 3,000 நிலைகளில் இருந்து இப்பொருள்கள் அரசாங்க அமைப்புகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் இவற்றின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவை பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள ஒழுங்குகள் பற்றி அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. ருஷ்யாவின் கடற்படைத் தளமொன்றுள் நுழைந்த திருடன் சக்திவாய்ந்த 10 இறாத்தல் எடையுள்ள யுரேனியத்தைத் திருடிச் சென்றுள்ளான். பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆயுத உற்பத்திச்சாலையின் பணிப்பாளர் ஒருவர் அங்கு சென்ற ஆயுதவடிவமைப்பாளர் ஒருவரை அணுகி, பணம் இரந்து கேட்டதாகவும் கூறப்படுகிறது. இது பணத்திற்காக இவை பறிபோகும் நிலையைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலேயே 31 திருட்டுச் சம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அணு உற்பத்தியில் ஈடுபடும் நாடுகள்

### ஐக்கிய அமெரிக்கா :

பனிப்போரிலிருந்து யுத்தமுனைப்பாளர்கள் 18,000 ஆக உயர்ந்துள்ளனர். தற்போது 8,500 பேர் உஷார் நிலையிலுள்ளனர். 'ஸ்ராற், II'' உடன்படிக்கை அனுமதிக்கப்பட்டால் இத் தொகை 3,500 ஆகக் குறையும்.

### பிரித்தானியா :

'NPT' இன் மூலக் கட்சியான இந் நாடு ஏறக்குறைய 234 யுத்தமுனைப்பாளர்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

### பிரான்ஸ் :

தெற்குப் பசுபிக்கில் நிலத்தினடியில் 8 அணுப் பரிசோதனையை நடத்துவதான திட்டம் சமீபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### லிபியா :

கேணல் கடாபியின் அரசாங்கம் அணுப் பொருள்களை வாங்கப் பல தடவைகள் முயற்சித்துள்ளது.

### பிறேசில் :

1990 ஆம் ஆண்டுத் திட்டத்தை நிறுத்த முடிவு செய்துள்ளது.

### ஆர்ஜென்ரீனா :

ஆரம்ப கட்டத்திலுள்ள அணுத் திட்டத்தை நிறுத்தி, பெப்ரவரியில் 'NPT' இல் சேர்ந்துள்ளது.

### பெலாறஸ், உக்ரெயின், கசக்கஸ்தான் ;

எல்லோரும் அணு இருப்பை ருஷ்யாவுக்கு மாற்றிவிட்டு 'NPT' இல் அணு சாராத நாடுகளாகச் சேர்ந்துள்ளன.

### இஸ்ரேல் :

நூற்றுக்கு மேற்பட்ட அணு ஆயுதங்களை உள்ளடக்கியதும், 'NPT' இல் சேராத நாடுமாகும்.

### ஈராக் :

வளைகுடாப் போரின்போது அமெரிக்கப் படையினரின் குண்டு வீச்சினாலும் அதனைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் கண் காணிப்பினாலும் அணுத் திட்டம் நிறுத்தப் பட்டது.

**ஈரான் :**

ஈரான் இரகசிய அணுத் திட்டத்தை நடத்தி வருவதாகவும், அது அணுக்குண்டு தயாரிக்கும் நிலையை எட்டுவதற்கு எட்டு வருடங்களுக்கப்பால் உள்ளதாகவும் அமெரிக்கா நம்புகிறது.

**ருஷ்யா :**

அணு ஆயுத உற்பத்தியில் ருஷ்யா, சோவியத் ஒன்றியத்தின் தனிப்பெரும் இராசாவாக விளங்குகிறது. அது 10,100 யுத்தமுனைப்பாளர்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது. இத் தொகை 'ஸ்ராற் II' இன் கீழ் 3,500 ஆக இறங்கும்.

**வடகொரியா :**

இரண்டு, அல்லது மூன்று அணுக்குண்டுகள் தயாரிக்கப் போதுமான பொருள்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. சமீபத்தில் அதன் திட்டத்தை நிறுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.

**சீனா :**

பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் அணுவாயுதத் திட்டத்திற்கு உதவி புரிவதாக அமெரிக்க அதிகாரிகள் நம்புகின்றனர்.

**இந்தியா :**

80 அணுக்குண்டுகள் தயாரிக்கக்கூடிய புளூற்றோனியம் கையிருப்பில் இருப்பதாக நம்பப்படுகிறது.

**பாகிஸ்தான் :**

25 அணுக்குண்டுகள் (ஒரு சில மணித்தியாலங்களுள்) தயாரிக்கக்கூடிய பொருள்களும், உபகரணங்களும் இருப்பதாக நம்பப்படுகிறது.

**கையெழுத்திடாத நாடுகள் :**

NPT (Non Proliferation Treaty) உற்பத்தியைக் குறைக்கும் ஒப்பந்தத்தில் பின்வரும் நாடுகள் கையெழுத்திடவில்லை.

| | |
|---|---|
| அண்டோறா | கொமொறொஸ் |
| அங்கோலா | கியூபா |
| பிறேசில் | ட்ஜிபெளரி |
| இந்தியா | பாகிஸ்தான் |
| இஸ்ரேல் | ஐக்கிய அரபு இராச்சியங்கள் |
| ஓமான் | வனோறு |

பவங்கள் நடந்துள்ளதாக அமெரிக்க உளவு ஸ்தாபனம் கூறுகின்றது. இதேவேளை ருஷ்யாவின் பலபகுதிகளில் இருந்தும் அணு ஆயுத உற்பத்திப் பொருள்களை முழுமையாக அகற்றிவிடவேண்டும் என்ற அமெரிக்காவின் தூண்டுதலால் இப்பொருள்களுக்கு ஒரு சந்தையே ஏற்பட்டுள்ளதாக ருஷ்யா குற்றஞ்சாட்டுகிறது. பிறேக் நகரில் ஒரு மோட்டார்க்காரின் பின் ஆசனத்தில் 6 இறாத்தல் மிக உயர்ந்த யுரேனியம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாகனத்தில் செச் நாட்டு அணு விஞ்ஞானி ஒருவரும் பெலாறஸ், உக்கிரெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வேறு இருவரும் காணப்பட்டனர். ஓர் அணு குண்டு தயாரிப்புக்கான மூலப் பொருள்கள் வெளியேறின் உலக மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாவர்.

அதிபர் யெல்ற்சினும், அவரது அதிகாரிகளும் இதையிட்டுக் கூடிய கவனஞ் செலுத்தி வருகின்றனர். இவை சேகரிக்கப்பட்டுள்ள நிலையங்களுள் ஒன்பது நிலையங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதென ருஷ்யா முடிவு செய்துள்ளது. 700 தொன் ஆயுத உற்பத்திப் பொருள்கள் சேமிக்கப்பட்டுள்ள 90 நிலையங்களின் பாதுகாப்புப் பலமானதாக இல்லை என அமெரிக்க நிபுணர்கள் கூறுகின்றனர். அமெரிக்காவின் உதவியுடன் இந் நிலையங்களில் ஐந்திற்கான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள ருஷ்யா இணங்கியுள்ளது. இவ்வகையான புதிய பாதுகாப்பு ஒழுங்குகளைச் செயற்படுத்த 45 கோடி அமெரிக்கன் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகு செலவினத்தை எப்படி ஈடு செய்வது என்று அமெரிக்கா நேட்டோ நாடுகளுடன் ஆலோசித்து வருகிறது. புதிய பாதுகாப்பை நடைமுறைப்படுத்த ருஷ்யாவுக்கு 1700 கோடி டொலர் செலவாகும் இந்நிலையில் எல்லா அணு ஆலைகளையும் மூடிவிட ருஷ்யா எண்ணுகின்றது. இப்படிச் செய்தால் ஆலைகளின் நிலைமையைப் பரிசோதனை செய்பவர்கள் கூட அங்கு செல்ல முடியாத நிலை ஏற்படும். செச்னியப் போராளிகள் இவ்வாலைகளுக்குள் நுழையாதவாறு பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகைத் திருட்டுக்கள் நடைபெற வண்ணம் ருஷ்யாவை ஊக்கப்படுத்துவதே பெரும் பிரச்சனையாக உள்ளது.

இத்திருட்டுக்களில் ஈடுபடும் நாடுகளையோ அன்றிப் பயங்கரவாதக் குழுக்களையோ கண்டறிவதற்கென அமெரிக்கா 10 கோடி டொலர்களை இந்த ஆண்டு செலவிட்டுள்ளது. ஜப்பான் போன்ற நேச நாடுகளுக்கு அணு ஆயுத அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பளிக்க அமெரிக்கா உத்தரவாதம் அளித்துள்ளது. இந்நிலையில் பொங்கிவரும் செலவை அமெரிக்கா எப்படித் தாங்கப் போகின்றதென்பதையிட்டு அந்நாடு மிகுந்த கவலை கொண்டுள்ளது. நாளை என்பது அதிகதூரத்தில் இல்லை அணு ஆயுத உற்பத்திப் பொருள்களும், உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பமும் சிறிய நாடுகளுக்கோ அன்றிப் பயங்கரவாதிகளுக்கோ எட்டாத வகையில் விழிப்பாய் இருக்க வேண்டியது வல்லரசுகளின் கடமையாகும்.

நியூஸ்வீக் யூலை 24, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீவி பறக்கத் தொடங்கியுள்ளது

## உலகின் பொருண்மிய நிபுணர்கள் பலரை வியப்பில் ஆழ்த்திய நியூசிலாந்தின் வளர்ச்சி.

தமிழில் : திரு. த. கந்தசாமி

உலகின் வளர்ச்சி அடைந்த எந்த நாடுகளுக்கும் மேலாக முன்னேறக்கூடிய வளம் நியூசிலாந்தில் உண்டு என்று அந்நாட்டின் முன்னைநாள் நிதிமந்திரி 'சேர்' றொஜர் டக்ளஸ்கூறியுள்ளார். ACT நியூசிலாந்து என்ற பெயரில் புதிய அரசியற் கட்சியொன்றினைத் தாபித்துத் தேர்தலில் பங்குபற்ற முயற்சி செய்து வருகிறார். ''போலந்து நாட்டுக் கப்பற்றளம்'' என இழித்துரைக்கப்பட்ட நியூசிலாந்தின் பொருளாதாரத்தை வியக்கத்தக்க வகையில் இவர் கட்டியெழுப்பி உள்ளார். ஒரு தசாப்தத்துக்கு முன் நிதி மந்திரியாக இருந்து இவர் ஏற்படுத்திய பொருளாதார வளர்ச்சியைக் கண்டு பொருளாதார நிபுணர்கள் பலர் பெரும் வியப்படைந்துள்ளனர். இந்நாட்டின் பிரதான விவசாய உற்பத்திப்பொருள்களைப் பெருமளவு இறக்குமதி செய்த பிரித்தானியா, 1973 இல் ஐரோப்பிய பொதுச் சந்தையில் இணைந்ததும் இதன் வளர்ச்சி பாதிப்படைந்தது. ஏனைய கைத்தொழில் நிலையங்கள் அரசுடைமையா இருந்தமையால் அவை நட்டத்திலேயே இயங்கின, உலகிலேயே வாழ்க்கைத்தரத்தில் முன்னணியில் நின்ற தென் பசுபிக் நாடுகள் இன்று 27 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன.

நியூசிலாந்து மக்கள் அந்நாட்டுப் பறவையினம் ஒன்றின் பெயரால் 'கீவி' என அழைககப்படுகின்றனர். சிறகிருந்தும் பறக்க முடியாத பறவை. கடந்த பத்து ஆண்டுகளில் இந்நாடு பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இரட்டை இலக்கத்தை எட்டியிருந்த பணவீக்கம் இன்று 1.6ஆக வீழ்ந்துள்ளது. உள்ளூர் உற்பத்தி 5



விழுக்காட்டினால் அதிகரித்துள்ளது. இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் செலவுக்கு மேலான வரவாக 3,6 விழுக்காடு நிதி ஒதுக்கப்படலாம் என்றும் 1997 - 98 இல் இது 7.7 விழுக்காடாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சாதனை ஏனைய நாட்டுப்பொருளாதார நிபுணர்களளப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந்த நாட்டு மக்களே இச்சாதனையை இட்டுப் பெரிதும் வியப்படைந்துள்ளனர். அரசியல் துணிவே இதற்கான முதன்மைக் காரணியாகும். நிதிமந்திரியாக இருந்த காலத்தில் றொஜர் டக்ளஸ் தனியார் மயப்படுத்தலில் மிகத் தீவிரமாக இருந்தார். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீதான வரியை விலக்கினார். இதனால் பலர் வேலை இழந்தனர். கைத்தொழில் நிலையங்கள் சில மூடப்பட்டன. 1988 இல் பிரதம மந்திரியாக இருந்த லாங்கே உடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இவர் பதவி விலகினார். ஓராண்டின் பின் லாங்கேயும். தனது பதவியை இராஜிநாமாச் செய்தார். ஆனால் இவர்கள் ஏற்படுத்திய பொருளாதாரச் சீர் திருத்தங்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. 1991 இல் வேலை இல்லாப் பிரச்சனை 11 விழுக்காடாகவும், உள்ளூர்க் கடன்பளு 51 விழுக்காடாகவும் இருந்தன. இன்று வேலையற்றோர் தொகை 6.6 விழுக்காடாகவும், கடன்பளு 34 விழுக்காடாகவும் குறைந்துள்ளன.

இந்நாட்டவர்கள் எட்டாம் இலக்க மனப்பாங்கு என்பதில் நம்பிக்கை கொண்டு இயங்குகின்றனர். அமெரிக்காவின் உயர்தொழில் நுட்பத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் இவர்கள் உருவாக்கிய படகுகள் அமெரிக்க படகுப் பந்தயக் கிண்ணப்போட்டியில் வெற்றியீட்டியுள்ளன. இப்படகுகள் மிகவும் குறைந்த செலவில் நிறைந்த தொழில் நுட்ப முறையில் அமைக்கப்பட்டவையாகும். பொருண்மிய வளர்ச்சியுடன், பண்பாட்டு வளர்ச்சியும் உயர்வு கண்டுள்ளது. 1940-க்கும், 70-க்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று விவரணப்படங்களை வெளியிட்ட நிலையில் இன்று ஆண்டுக்கு ஆறு திரைப் படங்களை வெளியிடக்கூடிய நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது. இவற்றுள் ஒன்று சர்வதேச மட்டத்தில் பலவிருதுகளைப் பெற்றதுடன் பல இலட்சம் டொலர்களை வருமானமாகவும் பெற்றுள்ளது. இதே வேளை இந்நாட்டில் வாழும் 12 விழுக்காடு தொகையினரான 'மாவோறி' இன மக்கள் இன்னும் வறுமை நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

1993 இல் நடந்த பொதுத்தேர்தலில் பிரித்தானிய முறையிலான ஆட்சியை மாற்றி ஜேர்மனிய முறையிலான ஆட்சி முறையை நடைமுறைப்படுத்த மக்கள் வாக்களித்துள்ளனர். பொருளாதாரம் அதிஉன்னத நிலையில் உள்ளது. நேரடி வரிவிதிப்பின்றி நியூசிலாந்தில் ஆட்சி அமைக்க முடியும் என்று றொஜர் டக்ளஸ் கூறுகின்றார். மேலும் வேறு எந்த நாடும் இதைச் செய்ய முடியாது எனவும் கூறுகிறார்.

நியூஸ்வீக் யூலை, 10, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை முயற்சி

## முபாரக் மயிரிழையில் உயிர் பிழைத்தார்.

### அயல் நாட்டு அடிப்படை வாதிகள் கொலை முயற்சியை மேற்கொண்டனரா?

தமிழில் : திரு. கந்தசாமி



நான் எவ்வேளையிலும் பதற்றமின்றி இருந்தேன் — குஸ்னி முபாரக்.

எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா விமான நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் அராபியரைப் போன்ற தோற்றங் கொண்ட ஆறு இளைஞர்கள் வீடொன்றை வாடகைக்கு எடுத்து அங்கு குடியேறுகின்றனர். ஒரு நாள் காலை 8.15 அளவில் எகிப்திய சனாதிபதி குஸ்னி முபாரக் அந்த விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். ஆபிரிக்க இசுலாமிய ஒற்றுமை மகா நாட்டில் கலந்துகொள்ள வந்திறங்கிய எகிப்திய சனாதிபதியை எதியோப்பிய சனாதிபதி கைலாகு கொடுத்து வரவேற்றார். சிறிது நேரத்தில் நான்கு மோட்டார் ரதப்பவனியில் முபாரக் தலைநகர் அடிஸ் அபாபா நோக்கிப் புறப்பட்டார். இவற்றையெல்லாம் மிக நுட்பமாக அவதானித்த இளைஞர்களுள் ஒருவன் வானொலிச் சமிக்ஞை கொடுத்தான்.

ஏற்கனவே மோட்டார்க் கார்களுடன் மறைந்திருந்த கொலைஞர்களின் வாகனங்கள் மெதுவாக நகர்ந்து பவனியின் குறுக்கே சென்று வீதியைத் தடை செய்தன. திடீரென்று தோன்றிய இருவர் தங்கள் ஏ. கே. 47 துப்பாக்கிகளில் இருந்து முபாரக்கின் வாகனத்தை நோக்கி அடுத்தடுத்து குண்டுமாரி பொழிந்தனர். குண்டு துளைக்க முடியாத வாகனம் ஆதலால் முபாரக்கிற்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. கொலைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனையோர் வாகனங்களைக் கைவிட்டு ஓடி மறைந்து விட்டனர். இறந்த இரு கொலைகாரரும் அரேபியர் என்றும், இவர்களுக்குச் சூடானில் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் முபாரக் கூறினார். தமது ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சூடான் சதி முயற்சியில் ஈடுபடுவதாகவும் இவர் கருதுகின்றார். சூடானில் ஆயுதப் பயிற்சிப் பண்ணைகள் இருப்பதாக எகிப்திய அதிகாரிகள் கருதுகின்றனர். ஆனால் அங்கு விவசாயப் பண்ணைகளே இருப்பதாகச் சூடான் கூறுகிறது. கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகளிற் சிலர் தாங்கள் மேற்படி விவசாயப் பண்ணைகளிலேயே பயிற்சி பெற்றதாகக் கூறியுள்ளனர். சூடானுக்கும், எதியோப்பியாவுக்கும் இடையிலான எல்லையில் ஆயுதங்களையும், ஆட்களையும் கடத்திச் செல்வது மிகச் சாதாரணமாகவே நடைபெறுகிறது.

சூடானுக்கும், எகிப்துக்கும் எல்லையாகச் செங்கடல் ஓரமாக 'கலெய்ப்' என்ற ஒரு பிரதேசம் இரு நாடுகளுக்கும் தொல்லை தரும் பிரதேசமாக அமைந்துள்ளது. இசுலாமிய அடிப்படை வாதிகள் எகிப்தின் மதச்சார்பற்ற ஆட்சியை நீண்டகாலமாக எதிர்த்து வந்துள்ளனர். இசுலாம் மட்டுமே சிறந்த ஆட்சிக்கு வழி என அவர்கள் கருதுகின்றனர். 67 வயதான முபாரக் 1981 இல் அப்போதைய சனாதிபதி அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டபின் ஆட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப் பொறுப்பை ஏற்றார். மக்களின் நல்லாசியைப் பெறத் தவறிவிட்டாலும் இவரைவிட வேறெவரும் முன்னணியில் இல்லாததால் இவர் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்கின்றார். இவர் அமெரிக்காவுடன் உறவாடுவதும், இஸ்ரேலியருக்கும், அரேபியருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த முன்னின்று உழைப்பதும் இசுலாமிய தீவிரவாதிகளுக்கு இவர் மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. 1993 இல் எகிப்திய பிரதம மந்திரியையும், உள்நாட்டலுவல்கள் அமைச்சரையும் படுகொலை செய்ய எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. சென்ற மாதம் நடந்த படுகொலை முயற்சியில் முபாரக் மயிரிழையில் தப்பினார் என்றே கூறலாம்.

இக் கொலை முயற்சியில் இருந்து தப்பிக்கொண்ட சனாதிபதி கைறோவுக்குத் திரும்பியதும் பல பொது நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டார் 'நான் எதுவித பரபரப்புமின்றி மிகக் குதூகலமாகவே இருந்தேன்' என்று தனது அனுபவத்தைப் பற்றி இவர் கூறினார். இக்கொலை முயற்சியின் சூத்திரதாரிகள் யார் என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அடிஸ் அபாபாவில் இருந்து வெளிவரும் செய்திகளின்படி கொலைகாரர் சூடானியர், யெமன் நாட்டவர் அல்லது எகிப்தியர் எனக் கருதக் கூடியதாக உள்ளது. எகிப்திய தீவிரவாதிகளின் ஆதரவு இதற்கு உண்டென வாசிங்ரன் அதிகாரிகள் கருதுகின்றனர். இப்படியான சந்தர்ப்பங்களில் வெளி நாட்டவரை ஈடுபடுத்த முயற்சிப்பது எகிப்தியரின் நடைமுறைப் பழக்கமாகும் எனக் கைறோவிலுள்ள அமெரிக்க தூதுவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நியூஸ்வீக், ரைம்: யூலை 10, 1995.

★

## மேரிலாந்து பல்கலைக்கழக மாணவனின் முன்மாதிரி

அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள் புதிய ஆடை அணிகலன்கள், கார் போன்ற வாகனங்கள் வாங்கிய பின் தமது தனித்துவத்தையும், மாற்றியமைக்குந் திறனையும் அவற்றின் மீது காண்பிக்கின்றனர். சில மாற்றங்களைச் செய்வதால் அப்பொருள் கடையில் வாங்கியது போல் இல்லாமல் மாணவரின் தனிருசியைப் பிரதிபலிக்கின்றது. அவ்வகை மாற்றங்கள் சிலநாடு பூராவாகப் பெரும் புகழ் பெறுவதும் உண்டு. மேரிலாந்து பல்கலைக்கழக மாணவன் ஒருவன் தான் புதிதாக வாங்கிய காரில் உள்ள எந்திரத்தை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஒரு மிகச் சிறிய பெற்றோல் எண்ணெயில் இயங்கும் கார் எந்திரத்தையும், மின்கல மின்சாரத்தில் இயங்கும் மோட்டாரையும் பொருத்தியுள்ளான்' இந்த இணைப்பு அமெரிக்க நாட்டில் பெருவரவேற்புப் பெற்றுள்ளது. சாதாரண ஓட்டத்திற்கு பெற்றோல் எந்திரம் போதுமானதாக இருக்கிறது. வேகம் தேவையென்றால் மின்சார மோட்டாரும் துணையாக இயக்கப்படுகிறது, மின்கலனுக்கு பெற்றோல் எந்திரம் புத்துயிர் அளித்தபடி இருக்கும் விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கார் தயாரிக்கும் நிறுவனங்கள் விழித்துக் கொண்டுள்ளன.

என்ன சொன்னாலும் மண்ணெண்ணெயில் கார் ஓடுவது எங்கட நாட்டில் மட்டும் தான்.

## மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகள்

பெருஞ்செல்வந்தர்களின் சிறுபிள்ளைகள் கூட அமெரிக்காவில், பேருந்தில்தான் பள்ளிக்குச் செல்கின்றார்கள். பள்ளிச் சேவைக்கெனப் பிரத்தியேகப் பேருந்துகள் காலை, மாலை இரண்டு நேரத்திலும் பிள்ளைகளின் வசதியைக் கவனிக்கின்றன. இவ்வகை வண்டிகள் ஸ்தலஸ்தாபன அமைப்புக்களாலும், தனியாராலும் நடத்தப்படுகின்றன. சில பள்ளிகள் தமக்குச் சொந்தமாக வண்டிகளை வைத்திருககின்றன சுற்றுச் சூழல் சேதாரத்தை தடுக்கும் நோக்கில் எண்ணெயை விலக்கி மின்சாரம் பாவிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. பள்ளிச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகள் அனேகமாக மின்கல மின்சாரத்தில் இயங்கும் வகையில் மறு அமைப்புச் செய்யப்பட்டுள்ளன. சில வாகனங்கள் புதிதாக மின்சார இயககத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு பஸ் வண்டி 66 சிறுவர்களை ஏற்றியவாறு 50 மைல் வரையிலான தூரத்தை நாளொன்றுக்குக் கடக்கும். ஒரு முறை சக்தியூட்டப்பட்ட பின் மின்கலம் 110 மணித்தியாலங்கள் தாக்குப் பிடிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் உள்ளே

"என்னுடைய மனதைத் தொட்டுச் சொல்லுகின்றேன்"... 'அப்பாடா இப்பொழுதுதான் எனது மனம் நிம்மதியடைந்தது.'' என்று கூறும் நர்மவர் நெஞ்சைத் தொட்டு அதை மனதின் இருப்பிடமாகக் கொண்டு பேசுவதைச் சாதாரணமாக நாம் பார்க்கின்றோம். மனம் நெஞ்சிலா இருக்கின்றது? அப்படித்தான் நெஞ்சில் இருக்கின்றது என்று கூறினால் அவர்களுடன் கிரேக்க நாட்டு பெரும் தத்துவமேதை அரிஸ்டோட்டில் சேர்ந்து நிற்கின்றார். ஆனால் அவருடைய குருவான பெரும் தத்துவஞானி பிளேட்டோ, மனம் தலைக்குள்ளே இருக்கின்றது என்கிறார். தமிழ் வேதம் என்னும் சித்தாந்தக் கருத்துக்களை முதற் கூறியதாகக் கருதப்படும் திருமூலர், இறைவனை உள்ளத்தின் மூலமாக "உள்ளத்தில் உள்ள ஒருவனை, உள்ளூறு சோதியை'' என்றும், "உள்ளம் பெருங்கோயில்'' என்றும் காட்டுகின்றார்.

இவ்வாறாகக் கருதப்படும் உள்ளம், அல்லது மனம் என்பது என்ன?. அதன் செயற்பாடு எவ்வாறு அமைகின்றது? என்பன போன்ற கேள்விகளுக்கு மருத்துவ விஞ்ஞானம் விடை கூற முனைந்து நிற்கின்றது. எனினும் இது இப்போதைக்கு விடை கூற, ஏன் என்றைக்குமே விடை கூற முடியுமா? என்னும் கேள்விக்குறியுடனேயே இருக்கின்றது.

*தமிழில் :*
டாக்டர் நச்சினார்க்கினியன்

கடந்த ஓரிரு தசாப்தங்களாக மருத்துவ விஞ்ஞானம், அதி நுட்பமான செயற்றிறன் கொண்ட தொழில் நுட்ப உபகரணங்களைக் கொண்டு மூளையை, அதன் செயற்பாடுகளைக் காண விழைந்திருக்கின்றது. 1990 ஆம் ஆண்டுகளை, "மூளையின் தசாப்தம்'' என்று பெயர் சூட்டிப் பதவியிலிருந்த போது ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மூளை, மனம் பற்றிய ஆய்வுகளுக்கு அமெரிக்க அரசின் பச்சைக் கொடியைக் காட்டினார். இதன் பலனாக (Cat Scan, Pet Scan, Mri, Squid, Speci. Eeg) முதலிய உபகரணங்களைக் கொண்டு மூளையில் நோய் இல்லாதவர்கள், மூளையில் புற்று நோய், முதலிய நோய் உள்ளவர்கள், சத்திர சிகிச்சை மூலம் பல்வேறு காரணங்களுக்காக மூளையின் பல பகுதிகள் வெட்டி எடுக்கப்பட்டவர்கள், உள நெருக்கீடு, மனநோய் உள்ளவர்கள் முத்திய பல தரப்பட்டவர்களின் மூளைகளை விஞ்ஞானிகள் ஆய்வுகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

ஏறத்தாழ 3 இறாத்தல் ($1\frac{1}{2}$ கிலோவுக்கும் சிறிது குறைவு) எடை கொண்ட இந்த மனித மூளை உலகில் இன்று இயங்கும் மிகச் சிறந்த, அதிசக்தி வாய்ந்த கொம்பியூற்றர்-கணனியை விடச் சிறப்பாக இயங்குவது என்று விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். பார்வைக்கு, கேட்பதற்கு, பேசுவதற்கு, உணர்வதற்கு, நுகர்வதற்கு, தசைகளை அசைப்பதற்கு என்று பல தரப்பட்ட செயற்பாடுகளுக்கும், சுவாசிப்பதற்கு, இருதயத் துடிப்பிற்கு என்று இன்னோரன்ன எமக்குத் தெரிந்த, தெரியாத செயல்களுக்கும் மூளையிற் குறிப்பிட்ட சில பகுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றை ஊசி முனையில் இருந்து, பெருவிரல் நகம் அளவு வரை, பரப்புள்ள சிறு சிறு பகுதிகளாகவே பிரித்துக் காண முடிகின்றது. தெரிந்த இவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தாலும் மூளையில் ஒரு சிறு பகுதியாகவே அமைகின்றது. மூளையின் பெரும் பகுதி இன்னும் பாவனையில் இல்லாது (??) இருக்கின்றது, அல்லது அந்தச் செயற்பாடு என்ன என்பது எமக்கு இன்னும் தெரியாமல் இருக்கின்றது.

மனம், உள்ளம் என்று ஒன்று மூளையிற் தொட்டுக் காட்டக் கூடிய ஒரு பகுதியாக இதுவரை அறியப்படவில்லை. இந்த நிலையிற் பல விஞ்ஞானிகள் உள்ளம் பற்றிய வேறுபட்ட கருத்துக்களை முன் வைத்திருக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டு டெஸ்கார்ட்டஸ் என்பவர் "மனம் என்பது மூளையில், பார்க்க, தொடக்கூடிய ஒரு பொருளாக இல்லாமல், மூளையின் இயக்கத்தில் உணரக்கூடிய ஓர் அம்சமாக விளங்குகின்றது'' என்றும், - "மூளையின் எந்த ஓர் பகுதி அழிவுற்றாலும் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும், ஆனால் மனதை அழிக்க முடியாது'' என்றும் கூறினார். ஆனால் டெஸ்கார்ட்டஸ் ஒரு பெரும் கொள்கைப் பிழையைக் கொண்டிருந்தார். உள்ளமும், உடலும் தனித்தனியே சுதந்திரமாக இயங்குபவை என்பது அவரது கூற்று.

அமெரிக்க, அயோவா பல்கலைக்கழக நரம்பியலாளர் அன்ரோனியோ டமான்யோ "டெஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சில காட்சிகள்

கார்ட்டஸின் பிழை'' என்ற தனது புத்தகத்தில் மனம் என்பது உடலின் –அதிலும் முக்கியமாக, மூளையின் ஒரு படைப்பு என்று விவாதிக்கின்றார். எபபடி வானவில் என்பது மழைத் துணிக்கைகள் சூரியனின் ஒளிக் கதிர்களின் வீச்சினால் அழகிய ஒருபொருளாக, ஆனால் எம்மால் தொட்டு உணரமுடியாதவாறு எமக்குத் தோற்றமளிக்கின்றதோ அவ்வாறே எமது மயக்கமற்ற நனவு நிலை (Consciousness) என்பதும், மூளை சாதாரணமாக உடலைச் செயற்படுத்திக் கொண்டு இருக்கின்றபோது வெளிப்படுத்தப்படுகின்ற ஒரு கிளை விளைவாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார். இதற்கு உடலின் பல பாகங்களிலும் இருந்து வெளிப்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருள்கள், புலன்கள் முதலியன தமது பங்களிப்பைச் செய்கின்றன. இவை கூடிய; குறைவான அளவில் வெளியாகின்ற பொழுது அவற்றால் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் எமது உள்ளத்தின் உணர்ச்சிகளாக அநுபவிக்கப்படுகின்றன. பழைய ஞாபகங்கள், பேச்சு முதலியனவும் இவற்றுடன் சேர்ந்து கொள்கின்றன. இவற்றின் மூலமாக ஏற்படும் உணர்வுகளை மானிடம் உருவகப்படுத்துகின்றது.

டப்ட் பல்கலைக்கழக டென்னெட் அவர்கள் மனம் தான் மூளை என்று கூறிவிடுகின்றார். மூளையில் புலன்களுக்கும், செயலாற்றல்களுககும் விசேட பகுதிகள் இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று தொடர்புற்றும், தனித்தும் முழு நேரமும் கூடியும், குறைந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் உள்வாங்கல்களினால் எப்பொழுதும் மாற்றங்கள் மூளையில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றின் வெளிப்பாடே மனம் என்பது இவரது கொள்கை. ஆனால் இந்த மனம் எப்படிச் செயலை ஊக்குவிக்கின்றது? என்ற வினாவுக்கு இவரது கருத்து விளக்கமளிக்கவில்லை. இந்த வினாவுக்கு இவ்விஞ்ஞானியின் விடை எமக்கு மிகவும் பழக்கமானதான விஞ்ஞானிகளின் தோற்றத்திற்கு முந்திய மெய்ஞ்ஞானிகளின் விடையாக இருக்கின்றது.

''ஒரு முனைப்பான மயக்க நிலையற்ற அறிவு மனம் (நனவு நிலை) என்று ஒன்று இல்லை. அது ஒரு மாயை'' என்பதே இவரது விடை. உலகப் புகழ்பெற்ற மசசூசெட் தொழில் நுட்பக் கல்லூரி (MIT) யின் மார்லின் மின்ஸ்கி என்ற இயந்திரவியலாளர் மூளையை ஒரு மாபெரும் ''சுப்பர் கொம்பியூற்றர்'' என்றதுடன் நின்று விடுகின்றார். மனம் இக் ''கணனி'' யின் செயற்பாடு என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றார்.

மூளை, மனம் என்பனவற்றை ஆய்வு செய்கின்ற பெரும் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்ட ஒரு விடயம் — ''சில விடயங்கள் எங்களால் தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. அந்த அளவுக்கு நாம் இன்னும் முன்னேற்றம் காணவில்லை'' என்பதாகும். தத்துவாசிரியர் கொலின் மெக்கின் அவர்கள், ''பௌதிகவியலை குரங்குகள் படிப்பது போன்றது'' என மூளை, மனதைப் பற்றி ஆய்வு செய்பவர்களைக் குறிக்கின்றார். ''அதற்காக, இது ஏதோ அதிசயம் அல்லது இறைவனுடன் சம்பந்தப்பட்டது என்று கூற நான் முன்வரவில்லை'' என்றும் கூறிவிடுகின்றார் அவரும் மூளை, மனம் முதலியவை பற்றிய அறிவு இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றார். இங்கிலாந்தின் பௌதிகவியலாளர் றோஜர் பென்றோஸ் அவர்களும் இதையே ''மூளையில் என்னென்னவோ நடக்கின்றது. இது பற்றி ஒரு துளியேனும் எமக்கு இன்றைய நிலையில் தெரிய முடியவில்லை'' என்று கூறுகின்றார். இவர்கள் மூளையை மட்டுமல்ல, அதனுடன் மனத்தையும், உணர்வுகளையும் ஆராய்ந்து, அவற்றை உணரமுடியாது அங்கலாய்க்கின்றார்கள்.

''உள்ளம், மூளை, விஞ்ஞானம்'' என்னும் நூலை எழுதிய மதிப்புக்குகந்த தத்துவாசிரியர் ஜோன் சேர்ல் அவர்கள் – ''எம்மால் எல்லாவற்றையும் விளங்கிக் கொள்ள முடியும் என்று எண்ணுவது பைத்தியக்காரத்தனம், என்றாலும் அதை விளங்கிக்கொள்ள முடியும் என்ற மாதிரி நடந்து கொள்ளுவோம்'' என்று கூறுகின்றார்.

மூளை, உள்ளம் பற்றிய பல சிந்தனையாளர்களின் பொதுவான இவ்வளவு கருத்துக்களை நாம் அறிந்து கொண்ட பின், மனதின் ஒரு சில முக்கியமான பின்வரும் செயற்பாடுகளை நாம் தெரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

## தகவல்களைத் திரட்டி குவித்துக் கொள்ளல் (ஞாபக சக்தி) - பலர்

பலர் கற்றலையும், ஞாபக சக்தியையும் இரு வேறுபட்ட செயல்களாக கணிக்கின்றார்கள். அது அவ்வாறல்ல. இரண்டுமே புதிய தகவல்களைக் குறிப்பிட்ட ஒரு விதமாகச் சேகரித்து, சேமித்து, பின்பு தேவையான பொழுது திருப்பி மேற் கொண்டு வரககூடிய செயலாகவே கருதப்பட வேண்டும். தற்போதைய கோட்பாடுகளின் படி, மூளையில் செயற்படும் சட்டமைப்பு அலகான நரம்புக் கலங்கள், புலன் நரம்புக் கலங்களினூடாக மின் கணத்தாக்கங்களாக வரும் செய்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமை உறுப்பு




முடிவிடத்தில் இரசாயனப் பதார்த்தங்கள் சுரக்கப்படுகின்றன. இப்பதார்த்தங்கள் நரம்புக் கலங்களின் உட்காவு, வெளிக்காவு நார்களின் முடிவிடங்களில் நரம்பு இணைப்பை ஏற்படுத்துகின்றன.

இவ்விணைப்பு மூலமாக மின் கணத் தாக்கங்கள் நரம்புக் கலத்துக்குக் கலம் குறிப்பிட்ட ஒரு திசையிற் கடத்தப்படுகின்றன இதன் விளைவாக அடுத்த நரம்புக் கலத்தின் செயற்பாடு கூடியோ, குறைந்தோ காணப்படுகின்றன.

1. கடை நுதற் சோணை
2. மூளையின் முற்பக்கம்
3. மொழி உள் வாங்கல்—பேச்சுப் புலன் மையம்.
4. பார்வை மையம் - கட்புல மூளைய மேற்பட்டை-கண்களின் விழித்திரையில் இருந்து பெறப்படும் மின்கணத் தாக்கங்கள் மூலம் சமிக்ஞைகளை ஏற்று, பிரித்து அறிந்து உருக் கொடுக்கின்றது.
5. பிடர்ச் சோணை
6. சுவர்ச் சோணை
7. சுவை மையம்—மெய்யுணர்வு மூளை மேற்பட்டை உடலின் பல பாகங்களில் இருந்து வரும் புலன் செய்திகளை ஏற்று பகுத்துக் கொடுக்கின்றது.
8. இயக்க மையம் - அசைவுகளுக்குரிய மூளைய மேற்பட்டை நனவு நிலைச் சிந்தனையில் ஈடுபட்டு உடல் அசைவுகளைக் கட்டுப்படுத்துகின்றது.
9. நுதற் சோணை
10. பேச்சு இயக்க மையம்

**மூளையம்:-** மூளையின் பெரும் பகுதி இரு மூளைய அரைக் கோளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அரைக் கோளமும் நான்கு சோணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற் பகுதி (வெளிப் பகுதி) நரை நிறப் பொருளை உள்ளடக்கிய மூளைய மேற்பட்டையாகும். உட் பகுதியான வெண்ணிறப் பொருள்—தகவல்களை மேற்பட்டைக்குப் பரிமாற்றம் செய்கின்றது. மூளையம், மூளையின் நுட்பமான, அறிவார்ந்த, சிந்தனை, திட்டமிடுதல், தரப்படுத்தல் முதலிய செயல்களை இயக்குகின்றது.

**நரம்புக் கலங்கள்:-** மூளையின் செயற்பாட்டிற்கு மிக முக்கியமாக அமைவது அதன் அடிப்படைக் கட்டமைப்பு அலகான நரம்புக் கலங்கள் ஆகும். இவை தகவல்களை மின் கணத் தாக்கங்கள் மூலம் கடத்துகின்றன. ஒவ்வொரு நரம்புக் கலங்களுக்கிடையேயும் சிறு இடைவெளிகள் இருக்கின்றன. நரம்புக் கலத்தின் வெளிக்காவு நரம்பு நார்



போதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை, குறிப்பிட்ட முறையில் தங்களிடையே ஒரு தொடர்பாக ஏற்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக, புதிதாக ஒருவரைச் சந்திக்கும் பொழுது, அவரது முகம் விம்பமாக – ஒரு செய்தியாக மூளையைச் சென்றடைகின்றது. இது முதலில் விழித்திரையில் விம்பமாக விழ, இச்செய்தி பார்வை நரம்புக்கூடாக மின் கணத்தாக்கங்களாக மூளைய மேற்பட்டையைச் சென்றடைகின்றது மிருகத்தின் செயற்பாட்டைப் போலல்லாது, மிக உயர்ந்த செயற்றிறன்களைப் பெற்ற மனித மூளையின் நரை நிறப் பொருள் இம் மேற்பட்டையாகும். இவ்வாறு வருகின்ற மின் கணத் தாக்கங்கள், ஒரு சில மில்லி செக்கன்களில் – துளி நேரத்தில், மறைந்து விடுகின்றன. ஆனால் முன் கூறியவாறு குறிப்பிட்ட நரம்புக் கலங்களிடையே ஏற்பட்ட முன்னைய தொடர்புகளை வலுப்படுத்துகின்றது. முன்னமேயே குழந்தைப் பருவத்திலிருந்தே இந் நரப்புக் கலங்களினூடாக முகம் என்னும் விம்பம் பெறக்கூடியதாக இருந்தது. இப்பொழுது குறிப்பிட்ட நபரின் முக விம்பம் அகற்குரிய தனித்துவத்துடன் தெரிகிறது. அடிக்கடி இந் நபரைச் சந்திப்பதாலோ அல்லது அவருடன் தொடர்புடைய, ஒரு பொருளை, ஒரு செயலை ''மன விசையை'' – மென்ரல் ட்ரிக்கர் - ஐ, மேற்கூறிய தொடர்பை உறுதிப்படுத்துவதன் மூலம், இத் தொடர்பு, விம்பம் நீண்ட கால ஞாபக நிலையை அடைகின்றது. இவ்வாறு நடைபெறாதுவிடின் அது குறுகிய கால ஞாபக நிலையை அடைகின்றது. வயதானவர்களுக்கும், இதனால் தான், மூளையில் நோய்த் தாக்கம் இல்லாது போனால், பழைய நிகழ்ச்சிகள், அனுபவங்கள் ஒரு சில குறிப்பிட்ட தொடர்புகள் ஏற்பட்டவுடன் பழைய ஞாபகம் வந்து விடுகின்றது.

ஒவ்வொரு ஞாபகமும் பல தரப்பட்ட நரம்புக் கலங்களின் தொடர்புகளை மாதிரிப் படிவங்களை உள்ளடக்கியதாக இருக்கும் – பார்வைக்கு சில, ஒலிக்கு சில, மணத்திற்கு சில - என்று பல்லாயிரக்கணக்கான நரம்புக் கலங்கள் மிகச் சிறிய மின் கணத் தாக்கங்களை ஒரே நேரத்தில் உண்டாக்குகின்றன. ''இவை அனைத்தின் கலவையே புலன் உணர்வு, அல்லது புலன் உணர்வு மூலம் தோற்றும் உள்ளகக் காட்சி'' என்று கூறுகின்றார் கலிபோர்னியா பல்கலைக்கழக உள மருத்துவ பேராசிரியர் லார்ரி ஸகுவயர். மேலும் அவர் குறிப்பிட்ட சில நேரத்துக்கு இப்படியான மின் கணத் தாக்கங்கள் நீடித்தால் அந்தப் புலன் உணர்வு ஞாபகமாக மாறுகின்றது என்று விபரிக்கின்றார்.

''ஒரு தூண்டலில் பல சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருவது என்பதே பல அனுபவங்கள் ஒன்றுடன் ஒன்றாகத் தொடர்புபடுத்தப்பட்டுக் கவிந்து, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது'' என்பது அவர் விவாதம்.

வேண்டும் பொழுது நினைவுக்குக் கொண்டு வரக்கூடிய கடினமான, கெட்டியான, தெளிவான கருத்துக்கள், சம்பவங்கள் மூளையின் நடுப்பகுதியில் இருக்கும் ஹிப்போகேம்பஸ் ஊடாகவே இணக்கி நிலைப்படுத்தப்படுகின்றது. அமிக்டலா என்னும் பகுதி பயப்பிராந்தி உணர்வை ஞாபகப்படுத்துவது. பேசல் கெங்கிலியா என்னும் மூளையில் இருக்கும் நரம்புத் திரட்டு பழக்கங்களையும், உடலினாற் செய்யும் திறன்மிகு வேலைகளையும் கட்டுப்படுத்துகின்றது. மூளியானது கருத்தில் எடுக்காத தன்னியல்புச் செய்கை, தெறிவினை (Reflex), வழக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட செய்கையைச் செய்யும் அனுபவத்தைப்பெறல், நிபந்தனைக்குட்பட்ட கற்றல் ( Conditioned Learning ) முதலியவற்றை ஞாபகத்துள் அடக்குகின்றது.

மேற்குறிப்பிட்ட பகுதிகள் எவையாவது பாதிக்கப்பட்டால் அப் பகுதியுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட ஞாபகம் இல்லாது போய் விடும்.

## உணர்வுகளின் சக்தி

உடலில் ஏற்படும் காயங்கள் ஞாபக சக்தியை உருவாக்கும் செயற்பாடுகளைப் பகுதியாகவோ, முழுமையாகவோ குழப்புவதன் மூலம் ஞாபக சக்தியை மாற்றும் வல்லமை பெற்றவை. அதே போன்று உள்ளத்தில் ஏற்படும் அழுத்தமான தாக்கங்களும் ஞாபகத் தன்மையை மாற்றுகின்றன. மிகக் கடுமையான உள நெருக்கீடுகள் மூளையின் உயிரியற் செயற்பாடுகளையே மாற்றமடையச் செய்ய வல்லவை. அது மட்டுமல்லாமல், அயோவா பல்கலைக்கழக டாமாசியோ அவர்கள், பகுத்தறிவுள்ள எண்ணங்களுக்கு, உணர்ச்சியே மையப் பொருள் என்று கூறுகின்றார். கற்றலுக்கும், தீர்மானங்கள் எடுப்பதற்கும், உணர்ச்சி அத்தியாவசியம் என்பது அவரது வாதம்.

## உலகத்தை அறிந்து கொள்ளும் சன்னல்கள்

முதுமைப் பருவம் அடைபவர்கள் அவர்களது கண்களில் இருக்கும் வில்லைகளில் ஏற்படும் மாற்றங்களினால், ஒளி உள்ளே புகாது போக, ''பார்வையை இழக்கின்றார்கள்.'' சில குழந்தைகள் பிறக்கும் பொழுதே கண் வில்லையினூடாக ஒளி புக முடியாத மாற்றத்துடன் ''குருடாக''ப் பிறக்கின்றார்கள். ( உதாரணம்– கர்ப்பமாய் இருக்கும் தாய் ஜேர்மன் சின்னமுத்து என்னும் நோயினாற் பீடிக்கப்பட்டால் ) ஆனால் 6 மாதத்திற்குள் முறையான சிகிச்சை அளிக்கப்படாது போனால் நிரந்தரமாக மாற்ற முடியாதவாறு குருடாகி விடுவார்கள். ஆனால், மேற்கூறிய பார்வையை இழந்த– 'குருடாகி' விட்ட முதியவருக்குப் பல காலத்தின் பின்பும் சத்திர சிகிச்சை மூலம் வில்லையை எடுத்து விடுவதன் மூலம் பார்வையைத் திரும்பப் பெற முடியும். இதற்குக் காரணம் மூளையின் முக்கியமான விருத்தி பிறந்து முதல் இரண்டு வருடங்களில் நடைபெறுகின்றது. முதல் ஆறு மாதங்களில் பார்வை இல்லாதுபோனால் மூளைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. மூளையம்:-
2. ஈரிணைச் சடலம்:- மூளையின் இடது, வலது மூளைய அரைக் கோளங்களின் இடையே தகவல் களைப் பரிமாறிக் கொள்ளும் விதமாக. இரண்டு பகுதிகளையும் இணைக்கும் பெரிய நரம்புத் தொகுதிப் பிணைப்பு. ( Band )
3. பரிவகம்:- மூளைக்குச் செல்லும் பெரும்பாலான தகவல் இணைப்பு இடம். ( Relay Station )
4. பரிவகக்கீழ்:- பாலியல் ஓமோன் கள், குருதி அழுத்தம், உடல் வெப்பம் முதலியவற்றைக் கட்டுப் படுத்தும் இடம்.
5. கபச்சுரப்பி:- உடலின் " தலைமைச் சுரப்பி " தனக்கு உரித்தான ஓமோன்களைச் சுரந்து உடலின் மற்ற ஓமோன் சுரப்பிகளையும் கட்டுப்படுத்துவது.
6. அமிக்டலா - இருதயத் துடிப்பு, உள்ளுறுப் புக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்து வது. அத்துடன் பயப்பிராந்தி மனநிலை யைக் கட்டுப்படுத்தும்.
7. ஹிப்போ கம்பஸ்:- மூளையத்தில் நீண்டகாலத் திற்கான நினைவுகளைப் பதிய உதவுவது.
8. நீள் வளைய மையவிழையம்
9. வரோலியின் பாலம்

(8, 9) சுவாசம், குருதிச் சுற் றோட்டம், இருதயத் துடிப்பு, செமிபாடு முதலியவற்றைக் கட்டுப் படுத்தும்.

10. மூளி:- தசை, அங்க அசைவுகளை இணைத் துச் செயற்படுத்த அவசியமானது.
11. அடி நரம்புத் திரட்டு:-அசைவுகளையும், செய்கைகளையும் கட்டுப்படுத்துவது.

போகும் நரம்புகளினூடான புலன் செய்திகள் - மின் கணத் தாக்கங் கள் - சென்றடையமாட்டா. முன் கூறிய விம்பங்கள் ஞாபக நிலை முதலியன ஏற்படமாட்டா. குறித்த நரம்புத் தொகுதிகள் கலங்கள் பாவனைக்குள்ளாகாத தால் அழிவுற்று விடுகின்றன. இதன் பின்பு சத்திர சிகிச்சை செய் தாலும் பார்வை திரும்ப வராது. ஆனால் வயதான முதியவருக்கு, முந்தைய ஞாபகம், குறிப்பிட்ட தொகுதிக் கலங்கள் முதலியன மாதிரிப் படிவங்கள் முதலிய வற்றை முன்னரே ஏற்படுத்தப்பட் டுள்ளதால், " பார்வை திரும்பக் கிடைக்கின்றது. " இதன் அடிப் படையில்தான் தற்காலத்தில் மருத்துவர்கள் குழந்தைகளின் மூளை விருத்திக்கு அவசியமாகப் பல தரப்பட்ட நிற, ஒலி, வடிவ அமைப்புக்களைச் சிசுப் பருவ நிலையிலேயே அவர்களுக்கு விளை யாடப் பாவிக்க அறிமுகப்படுத்தி, அநுபவப்படுத்தி ஞாபக நிலையை உருவாக்க அறிவுறுத்துகிறார்கள். இவ்வாறு செய்வதனால், பார் வைக்குரிய ஒவ்வொரு கலமும் 15, 000 வேறு கலங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, கோடிக்கணக் கான கலங்கள் பார்வை உருவாவ தற்கு ஏதுவாக அமைகின்றன.

இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த செமிர் செகி என்னும் நரம்பியலாளர் நிறம், வடிவம், அசைவு முதலிய ஒவ் வொன்றுக்கும் வெவ்வேறு நரம்பு, மூளைக் கலங்கள் இருப்பதாகவும் இவற்றில் ஏற்படும் சிறு காயங்கள் பெரும் பாதிப்பை விளைவிக்கும் என்றும் கூறுவார். இவர் (Pet Scan) மூலம் மூளையை ஆராய்ந்து, நிறங் களுக்கு என ஒரு பகுதியும், கறுப்பு வெள்ளைக்கு ஒரு பகுதியும், பார் வைப் புலன் பகுதியில் இருப்பதை அறிந்து கூறினார். இவரது ஆய்வு களின் படி. மூளையிற் சில இடங் களில் காயங்கள், குறைகள் ஏற் பட்டால் வேறு பகுதிகள் இயங்கி சிறு உதவி கொடுக்க முடியும் என் பது தெரியப்பட்டது.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்



## ஆணும் பெண்ணும் வெவ்வேறு விதமாகவா சிந்திப்பார்கள்?

பிரபல ஆங்கில நாடகாசிரியர் பேர்னாட்ஷோ தமது உலகப் புகழ் பெற்ற நாடகமான "மை பெயர் லேடி" இல், முக்கிய கதாபாத்திரமான இலக்கியப் பேராசிரியர் ஹிக்கின்ஸ் மூலமாக ஒரு கேள்வியை எழுப்புகின்றார். "ஏன் ஒரு பெண்ணால், ஆணைப் போல் சிந்திக்க முடியாது?". இதே கேள்வியை இன்று விஞ்ஞானிகளும், மருத்துவ பேராசிரியர்களும் கேட்கின்றார்கள். நுட்பமான கருவிகள் மூலமும், ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்பும் அவர்கள் ஆண்களும், பெண்களும் தங்கள் தங்கள் மூளையைச் சிறிது வேறுபாடாகவே பாவிக்கின்றார்கள் என்னும் கருத்தையும் வெளியிட்டிருக்கின்றார்கள்.

விஞ்ஞான பாடங்களிலே மிக அதிகமான புள்ளிகள் எடுத்த முதல் 5 ·/. மாணவர்களிடையே ஆண், பெண் விகிதம் 7 ; 1 ஆகவும். வாசிப்பு, விளக்கத்தில் பெண்கள் ஆண்களை விட அதிக புள்ளிகள் எடுப்பதும் காணப்பட்டுள்ளது இதே போல் பொருள்களைக் களத்தில் வைப்பதில் / காட்டுவதில் ஆண்களும், பிறருடன் பேசுவது, தொடர்பு கொள்ளுதல் முதலியவற்றில் பெண்களும் சிறந்து விளங்குகின்றனர். இந்த வித்தியாசத்துக்கு, மூளையின் இடது, வலது பகுதிகளுக்கிடையிலான தொடர்புகள் பெண்களிடையே அதிகமாகக் காணப்படுவது என கூறப்படுகின்றது. எவ்வாறாயினும் குறைந்த அளவு தொடர்பு இருப்பது ஆண்களின் இரு "மூளைப் பாதி" களும், கூடிய முனைப்பாக தனித்தனியே தனது சிறப்புப் பணியைஆற்ற இலகுவாக இருக்கலாம். இவ்வாறான பிரிவு - அதிகமான கட்டடக் கலைஞர்களும், புகழ் பெற்ற சதுரங்க ஆட்டக்காரர்களும் ஆண்களாக இருப்பதை விளக்கும் ஆண்களின் மூளை முககியமாக இடைவெளி நிரப்புதல் முதலிய வேலைகளுக்கு. இரு மூளைப்பாதிகளைப் பிரயோசனப் படுத்த முடியுமானாலும், வலது பாதியை மட்டுமே பாவிப்பது இச் செயலுக்குக் கூடிய கவனத்தைக் கொடுக்க முடிகின்றது.

முந்திய எண்ணங்களுக்கு மாறாக, பாலியல் ஓமோன்கள் என்று கருதப்படும் ஈஸ்ட்ரஜன், டெஸ்டெஸ்டெரோன், ஓமோன்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே மூளையின் எல்லாப் பகுதியிலும் முக்கியமாக மேற்பட்டையிற் காணப்படுகின்றது. ஆண்களின் உடலால் உற்பத்தி செய்யப்படும் அதிக அளவிலாலான டெஸ்டெஸ்டெரோன் ஓமோன் அவர்களின் மூளையின் இரு பாதிகளும் கூடிய அளவில் தனித்து விசேடத்துவம் பெற்று விருத்தியடைய உதவுகின்றது. பொது நோக்கில் இது இவ்வாறு இருப்பினும், தனித்தனியே நோக்குமிடத்து, சிறப்பாக இயங்கிய பெண்களையும், மிகச் சாதாரணமாக இயங்கிய ஆண்களையும் காண முடிகின்றது. இந்த 1.4 கிலோ எடையுள்ள மூளை எவ்வளவு மகத்தானது?

---

கலிபோர்னிய பல்கலைக்கழக நரம்பியல் விஞ்ஞானி இராமச்சந்திரனின் கூற்றின்படி, மூளையில் ஒரு விசேஷத் தன்மை இருக்கின்றது. அதாவது மூளையில் எந்த ஒரு பகுதியிலும் எந்தவிதத் தகவலும் இல்லாமல் இருக்க முடியாது. மூளை புதிய தகவல்களைப் பெற எப்பொழுதும் முயன்று கொண்டிருக்கும். தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் தானே இல்லாத தகவல்களை உருவாக்கிக் கொள்ளும். உதாரணமாக - கால் வெட்டுப்பட்டு இல்லாது போனால், அதைப்பற்றிய புலன் உணர்வு மூளையைச் சென்றடையாது. அதற்கென இருக்கும் பகுதிக்கு "வேலை இல்லாமல்" போய் விடும். ஆனால், மூளையோ, ஞாபக சக்தி மூலம், இல்லாத கால், இருப்பதாக, நோ, அசைவு முதலியவற்றை "கற்பனைக் கூடாக" காட்டிக் கொண்டிருக்கும்.

### சொல்லாக்கம்

மூளையில் சொல்லாக்கல் திறன், மிக விசேட "நிபுணத்துவம்" பெற்ற கலங்களினூடாகச் செயற்படுத்தப்படுகின்றது. எனவே தான் பலவித காரணங்களுக்காக மூளையிற் பாதிப்பு ஏற்பட்டால், பேச்சுத் திறன் பெரிய அளவிற் சிக்கல் அடைகின்றது. சொற்களைச் சொல்ல முடியாது, உச்சரிக்க முடியாது. பிழையான சொற்களைப் பாவித்தல் முதலிய பல விதமான சிக்கல் உண்டாகலாம். வாஷிங்ரன் பல்கலைக்கழக, நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் கலாநிதி ஜோர்ஜ் ஒஜெமான் அவர்கள், ஒரே மூளையில் வெவ்வேறு மொழிகளுக்கு, வெவ்வேறு கலங்கள் இயங்குகின்றன என்னும் சந்தேகத்தைக் கிளப்பி இருக்கின்றார். கேட்கும் பொழுதும், சொல்லும் பொழுதும் ஒரே வார்த்தைக்கு வெவ்வேறு கலங்கள் இயங்குவதை இவர் காட்டியுள்ளார். மிகச் சமீப காலம் வரை மூளையிற் பேச்சு இயக்கப் பரப்பு ( Broca's Area ), பேச்சுப் புலன் பரப்பு ( Wernickes Area ) என்பவை இரு வேறுபட்ட பகுதிகளாகப் பிரிந்து இயங்குவதாக விஞ்ஞானிகள் கருதினார்கள். ஆனால், டமாஸியோ முதலானோர் மூளையில் இப் பிரிவு முழுமையானதாக இல்லை என்று கூறி, வேறு ஒரு "குவிவு வலயம்" இதற்காக இயங்குவதாகவும் தகவல்கள் இப் பகுதியின் ஊடாகச் செல்லுவதாகவும், இதில் ஏற்படும் பிரச்சனை தான் மூளையில் தகவல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதில் தாமதம், கஷ்டம் முதலியவற்றை உருவாக்குகின்றது என்றும் கூறுகின்றார்கள். இவ்வாறான குவிவு வலயங்கள் வெவ்வேறு கருமங்களுக்கு வெவ்வேறு பகுதிகளில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. மனிதர்கள், மிருகங்கள், பொருள்கள் முதலியவற்றின் பெயர்கள் கடைநுதற் சோனையிலும், வினைச் சொற்களுக்கானது நுதற் சோனையிலும், பெயர்ச் சொற்களை, வினைச் சொற்களை வாக்கியமாக்குவதற்கு மூன்றாவது இடமாகப் பல குவிவு வலயங்கள் இருக்கின்றன.

## நனவு நிலை

டமாஸியோ அவர்கள் "முன் குறிப்பிட்ட குவிவு வலயம் என்பது பேச்சு, எழுத்து முதலியவற்றுக்கு மாத்திரமல்ல, மூளைக்குத் தேவையான – அதன் முழுமையான செயற்பாட்டுக்கு அவசியமான புலக்காட்சி, ஞாபகம், உணர்ச்சி முதலியவற்றுக்கான தகவல்களும் இவ்வாறான குவிவு வலயம் மூலமாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. இவை போன்று ஆயிரக்கணக்கான குவிவு வலயங்கள் மூளையின் மேற்பட்டையில் அமைந்திருக்கின்றன" என்று கூறுகின்றார். இது உண்மையானால் எமது நனவு நிலை, - எம்மையும், எமது சூழலையும் பற்றிய அறிவு நிலை– செயற்படுவதற்குப் பல தரப்பட்ட வெவ்வேறான தகவல்களைச் சேகரித்து ஒருங்கிணைப்பதற்கு இயங்கும் குவிவு வலயங்கள் காரணிகளாக முடியும். இந்த நனவு நிலையே ஒருவரைக் குறிப்பிட்ட ஒரு சூழலின் மையமாக்குகின்றது.

அதாவது டமாஸியோவின் கூற்றின்படி ஒவ்வொரு கணமும் எமது உடலின் விம்பம், கடந்த கால ஞாபக சரித்திரம், வருங்கால எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றுக்கு அமைய, ஓர் எண்ணக்கருவை, எம்மைப் பற்றி நாம் உருவகப்படுத்தி இருப்பது தான் நமது நனவு நிலை என்று நாம் நோக்கலாம். ஆகவே மேற்கூறியவற்றில் எங்காவது குறை ஏற்பட்டால் நமது நிலையின் தன்மையிலும் குறை தென்படும். பல கால முயற்சிகளுக்கும் பின், தன்னைப்பற்றிய கருதக்கூடிய "தான் என்னும் நனவு நிலைக்காக" மூளையில் எங்கேயும் ஒரு குறிப்பிட்ட தொடக்கூடிய பகுதி கிடையாது என்று விஞ்ஞானிகள் முடிவு கூறுகிறார்கள்.

ஒருவருக்கு நனவு நிலை எவ்வாறு உண்டாகிறது என்பதற்குப் பலர் பல கருத்துக்களை முன் வைக்கின்றார்கள். டீ ஒக்சி இரைபோஸ் நியூக்ளிக்கமிலம் டீ. என். ஏ. யின் அமைப்பைக் கண்டு பிடித்த சோல்க் நிறுவன பிரான்ஸிஸ் க்ரிக் அவர்கள் கலிபோர்னிய தொழில் நுட்பக் கல்லூரியின் கரிஸ்டொப் கொக் உடன் இணைந்து "மூளையின் பல பாகங்களிலும் இருந்து நரம்புக் கலங்களினால் அனுப்பப்படுகின்ற மின் கணத் தாக்கங்களின் உப செயற்பாடு தான் நனவு நிலை" என்று கூறுகின்றார். நியூயோர்க் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியின் நரம்பியல் விஞ்ஞானி கலாநிதி ருடோல்போ லலினாஸ் மேற் கூறிய விளக்கத்திற்கு ஒரு சிறிய மாற்றத்துடன் "மின் கணத் தாக்கங்கள் ஒரே நேரத்தில் கண்டபடி ஏற்படாமல் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் ஏற்படுகின்றதன் விளைவு தான் நனவு நிலை" என்று கூறுகின்றார். இவர் "மூளை இக் கலங்களின் தாக்கங்களினால் ஒரு விம்பத்தை உருவாக்கும். இந்த விம்பங்களே நனவு நிலைக்குரிய அடிப்படைகள். உதாரணமாக லலினாஸ் நாம் ஒளி என்று கருதுவது மின் காந்தக் கதிர் வீச்சுக்களே. நிறம் என்பது எங்களது மூளைக்கு வெளியே இல்லாத ஒன்று. அதாவது இது இன்ன நிறம் என்று நாம் நினைத்துக் கொள்வது. ஒலியும் அவ்வாறே. ஒரு பெருமரம் காட்டில் முறிந்து விழுவதை ஒருவரும் கேட்காது போனால் அதற்கு ஒலி இல்லையே! ஒலியென்பதே வெளியுலகின் அதிர்வுகளுக்கும், மூளைக்கும் உள்ள ஒரு தொடர்பு தான். மூளை அதை உணராது போனால் ஒலியென்று ஒன்று இல்லை. அதாவது நாம் விழித்து இருக்கிறோம், நனவு நிலையில் இருக்கிறோம் என்று கூறுவதே ஒரு கனவு நிலை தான்! வானவில்லைப் போல்-இருப்பதை உணர முடியும்-ஆனால் தொடமுடியாது; அளக்கமுடியாது. இது எமது எண்ணம் மட்டுமே! மாயையா? இத்துடன் முன்பு கூறிய சுப்பர் கணனியே மூளை, அதன் செயற்பாடே மனம், என்பன போன்ற கருத்துக்களையும் நாம் மனதிற் கொள்ளலாம்.

இதையெல்லாம் மனதில் இருத்திய சென்டியாகோ பல்கலைக் கழக சர்ச்லன்ட் அவர்கள், "மனதைப் பற்றிய வினாக்களுக்கு விடையாகத் தேடுவது முன்பு சென்றறியாத காட்டில் ஓடும் ஆற்றில் படகிற் சென்று இடம் தேடுவது போன்றது" என்று வர்ணிக்கின்றார் விஞ்ஞானிகள் இன்னும் பல நெடுங்கால ஆய்வுகளுக்குப் பின் தமது அறிவுக்கு அப்பால் என்னவோ ஒன்று இயங்குகின்றது; அது தான் ஆன்மா என்று கூறுவார்களோ!

★

### சுயமாக வலுவூட்டிக் கொள்ளும் மின்கலம்

அஸ்ரிக் மின்கலம் சுயமாகவே வலுவூட்டிக்கொள்ளக்கூடியதாகும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி இசைந்து கொள்ளக்கூடிய இந்த மின்கலம் உள்ளே போய் வெளிவரக்கூடிய முள்ளுகள் கொண்டது. எந்த மின்னிணைப்புக்களுக்கும் பொருத்திக் கொள்ளக்கூடியது. வேறு உப உறுப்புக்கள் எதுவும் இதற்குத் தேவைப்படாது. சக்தி கொடுக்கும் மின் இணைப்புக்குத் தக்கபடி கிடைக்கக்கூடிய இம்மின்கலத்தின் பெறுமதி சுமார் 70 அமெரிக்க டொலர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவாகை சூடிய ஃபிரீஸியன்

பசுக்களின் செழுமையும்,

போசாக்கும் மிக்க பால்

# ஃபாம்ட்ரஸ்ட்

நீங்கள் நம்பத்தகுந்த பால்




விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்ரோர்ஸ்,

சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

ஓங்கு தமிழ் பாரிற் பரவி
வாழ வழி செய்யும்

# "உலக உலா"

பல்லாண்டு காலம் நற்பணிசெய்ய
வாழ்த்துவோர்:

## வண் மேற்கு வைத்திய சாலை,

*18, ஐயனார் வீதி, யாழ்ப்பாணம்.*

*உங்கள் வாழ்வில் நினைவு கூரும்*
*நினைவுகளின் நீண்ட ஆயுளுக்கு*

## "வாழ்நாள் படப்பிடிப்பகம்"

மகளிர் கல்லூரி அருகில், மானிப்பாய்.

பல்லுரு கலப்பு நுட்ப மூலம் கலை அம்சம்
பொருந்திய புகைப்படச் சேவை

குறிப்பு:- கடவுச் சீட்டு அடையாள அட்டைப் படங்கள் 2 மணித்தியாலங்களிலும், கலர்ப் படங்கள் 2 நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

*Give Long LIFE to your memorable*
*events in LIFE through*

## LIFE PHOTO STUDIO

Near Ladie's College, MANIPAY.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவின் உளவுத்துறை

# கடும் போட்டியின்றி, தனக்குத் தானே எதிரியாகிவிட்ட அமெரிக்காவின் சி. ஐ .ஏ.

## 'இறக்கும் தறுவாயில் உள்ள ஒருவன், தான் நலமே எனின் அதன் அர்த்தம் என்ன?'

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்.

ஓட்டப்பந்தயத்தில் இருவர் பங்குபற்றினால் ஒருவரை ஒருவர் துரத்தமுடியும், தனியாக ஓடிச்சாதனை நிகழ்த்த இயலாது; சோவியத் ருஷ்ய ஒன்றியம் 91 இல் சிதறியபின் அதன் உளவுத் துறையான கே. ஜீ, பி, மழுங்கிவிட்டது. இதன்காரணமாக அலட்சியப் போக்கும், ஊக்கமின்மையும் அமெரிக்காவின் சீ. ஐ. ஏயில் மலிந்துள்ளன. நிர்வாகச் சீர்கேடும், ஊழலும், பணத்திற்காகக் காட்டிக்கொடுத்தலும் நிலவுகின்றன. நிர்வாக இயக்குநராக செயலாற்றிய பின் சி. ஐ. ஏயிலிருந்து 1993 இல் இளைப்பாறிய றொபேட் ஒட்ஸ் தான் கண்ட ஒழுங்கீனங்களை அண்மையில் வெளிப்படுத்தியுள்ளார். திருத்தி அமைப்பதற்காகத் தான்எடுத்த முயற்சிகள் தோல்விகண்டுள்ளதாகவும் ஒட்ஸ் ஒத்துக்கொண்டுள்ளார்.

தவறிழைக்கும் சகாக்களைப் பாதுகாப்பதிலும், தவறுகளால் விளையும் அனர்த்தங்களை மூடி மறைப்பதிலும் சி. ஐ. ஏ. அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரசுக்கும், சனாதிபதிக்கும் அறிவிக்காமல் பல முக்கிய தகவல்கள் பதுக்கப்பட்டுள்ளன. உளவுத்துறையின் அதியுயர் பதவி வகித்த தனக்கே தெரியாத பல நடவடிக்கைகள் பலமட்டங்களில் நடப்பதாக ஒட்ஸ் சந்தேகிக்கிறார். தங்கள் மத்தியில் புகுந்துள்ள ருஷ்யாவுக்குச் சார்பான துரோகியை கண்டுபிடிக்கும்படி தான் கட்டளையிட்டதாகவும், அதன் பலன் பூச்சியமென்றும் அவர் வருத்தம் தெரிவிக்கிறார். அன்று சி. ஐ. ஏயினர் முறையாகச் செயற்பட்டிருந்தால் அல்டிறிச் ஏம்ஸ் அகப்பட்டிருப்பான். அவன் காட்டிக்கொடுத்தால் ருஷ்யர்கள் சுட்டுக்கொன்ற பத்து உயிர்களும் காப்பாற்றப்பட்டிருக்கும்.




புதிதாக இயக்குநர் பதவியில் அமர்ந்த ஜோன் டோயிற்ச் தனது பணியின் கடினத்தை நன்கு உணர்ந்துள்ளார். மறுசீரமைப்போடு இழந்த உற்சாகத்தையும் அவர் மீட்டுகொடுக்க வேண்டியுள்ளது. ஏம்சைத் தொடர்ந்து வேறு பல தில்லுமுல்லுகளும் தொடர்கதையாக வெளிவந்துள்ளன. அமெரிக்க முப்படைத்தலைமைச் செயலகம் பென்ரகன் உயரதிகாரியான டோயிற்ச் செய்யும் முதல்வேலை பணவிரயம் சம்பந்தமான, பெருமளவு நிதிகட்டுப்பாடற்ற முறையில் செலவிடப்படுகின்றது, இதனால் பெறும் நன்மைகள் ஒன்றும் கிடையா. தென் – அமெரிக்காவின் கௌத்தமாலா நாட்டின் கேணல் தர இராணுவ அதிகாரி ஜூலியோ அல்பிறேஸ் சி. ஐ. ஏயின் கையாள். இவருக்குப் பெருநிதி கையளிக்கப்பட்டுள்ளது. இவர் பல்லாயிரக்கணக்கான தனது நாட்டு மக்களையும் அங்கு வர்த்தகம் செய்யும் அமெரிக்கர்களையும் பலகாலமாகக் கொடுமைப்படுத்தியுள்ளார். இவரால் ஒரு நன்மையும் கிடைக்காவிடினும் தொடர்ந்து பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனி மேற்குடன் இணைந்தபின் பல திடுக்கிடும் செய்திகள் வெளிவந்துள்ளன. சி. ஐ. ஏயின் பணத்தில் திளைத்த கிழக்குஜேர்மன் ஒற்றர்கள் யாவரும் ருஷ்யாவுக்கும், கொமியூனிஸ்ற் உலகிற்கும் விசுவாசமானவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பூர்வோத்திரத்தை விசாரிக்க சி. ஐ. ஏ யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. அதேபோன்று ஈரான், ஈராக், வடகொரியா, லிபியா போன்ற நாடுகளில் சி, ஐ. ஏயின் பணத்தில் வாழ்ந்தபடி தகவல் அனுப்புவோர் நாட்டுப்பற்றாளர்கள் என்றும், சி. ஐ. ஏயை ஏமாற்றுவோர் என்றும் தெரியவந்துள்ளது. யாவற்றையும் கூர்ந்து கவனித்த மதிப்புக்குரிய செனேற்சபை அங்கத்தவர் டேவிற் போரன் சி ஐ. ஏயை ஒரு டினோசாருக்கு ஒப்பிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த பத்து வருடங்களில் சி. ஐ. ஏ. விட்ட பெருந்தவறுகள்

**1987 கியூபா:**

அமெரிக்காவுக்குத் தப்பியோடிய கியூபா இராணுவ அதிகாரி கொடுத்த தகவலின்படி சி. ஐ. ஏ. ஏமாற்றப்பட்ட விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது. அமெரிக்காவின் சம்பளப்பட்டியலில் இருக்கும் கியூபா ஒற்றர்கள் யாபேரும் போலிகள் என்று தெரிய வந்துள்ளது. இவர்களிடமிருந்து சி. ஐ. ஏ. பெருஞ்செலவில் பெற்றுக்கொண்ட தகவல்கள் யாவும் பெறுமதியற்றவை என்று நிரூபணம் ஆகிவிட்டது.

**1988 ஈரான்:**

அமெரிக்க - ஈரான் தொலைத்தொடர்பு மற்றும் வானொலித்தொடர்பு யாவும் நம்பிக்கையற்றவை என்ற செய்தி சி. ஐ. ஏக்கு கிடைத்தபோதும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன்காரணமாகப் பல அமெரிக்க ஒற்றர்கள் ஈரான் அரசால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**1990 கிழக்கு ஜேர்மனி:**

சி. ஐ. ஏயிடம் ஊதியம் பெறும் இந்த நாட்டு ஒற்றர்கள் யாபேரும் பொய்யர்கள் என்று பின்பு தெரியவந்துள்ளது.

**1994 அல்டிறிச் ஏம்ஸ் :**

மாதாந்திர ஊதியத்திற்கு மேலாகச் செலவுசெய்தபடி மதுவில் மிதக்கும் இந்த சி. ஐ, ஏ அதிகாரி மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சி. ஐ, ஏ. நிறுவப்பட்டபின் வீழ்ந்த மிகப்பலமான அடியை ஏம்ஸ் அதற்குக் கொடுத்துள்ளான்,

**1995 கௌத்தமாலா :**

சி. ஐ. ஏயிடம் பெருந்தொகைப் பணம் ஊதியமாகப் பெற்றபடி பெரும் மனித உரிமை மீறல்களையும், அமெரிக்க வர்த்தகர்கள் மீது தாக்குதல்களையும் கௌத்தமாலா இராணுவ அதிகாரி நடத்தியுள்ளார். சி. ஐ. ஏ. உயரதிகாரிகளுக்கு இவர் நண்பர் என்று அறியப்படுகிறது.

டுள்ளார். உருவத்தில் நல்ல வளர்ச்சி, ஆனால் நிறுவப்பட்ட குறிக்கோள் மறைந்துவிட்டது.

சி. ஐ. ஏயில் நிர்வாகச் சீர்கேடுகளும் தலைதூக்கியுள்ளன, இந்த நிறுவனத்தில் உயர்பதவி வகித்த பெண்மணி ஒருவர் தனக்குப் பெண் என்ற காரணத்திற்காக பதவி உயர்வு மறுக்கப்பட்டதாக வழக்குத் தொடுத்துள்ளார். இவர் பகிரங்கமாக முன்வைத்த குற்றச்சாட்டுகளில் பெண்களை ஓரவஞ்சகமாக நடத்துதல், குறிப்பிட்ட ஒரு சிலர் நிறுவனத்தைத் தமது சொந்தம் போல் கருதுதல், பணமோசடி போன்றவை அடங்கும். இவருடைய வாயை அடைப்பதற்காகப் பெருந்தொகைப் பணம் சன்மானமாகக் கொடுத்து வழக்கு நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கும், அல்டிறிச் ஏம்ஸ் விவகாரமும் சி. ஐ. ஏயின் அண்மைக்கால வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளன.

இன்னுமொரு நெருக்கடி சி. ஐ. ஏ. நிறுவனத்திற்கு உண்டு. அதன் புகழ் மங்கத் தொடங்க திறமைசாலிகள் அதில் இணைய முன்வருவதில்லை. அத்துடன் கப்பல் தாழமுன் வெளியேற வேண்டும் என்ற மனதுடன் பல தரமான மூளைசாலிகள் வெளியேறிவிட்டனர். இன்று இரண்டாம் மூன்றாம் தர ஊழியர்களே காணப்படுகின்றனர். இவர்களிலும் பார்க்க உளவுபார்க்கும் விண்ணில் உலாவும் செய்மதிகள் மேல். உலக நாடுகள் யாவற்றின் தொலைபேசி இணைப்புக்களைச் செய்மதிமூலம் ஒட்டுக்கேட்கும் வசதி அமெரிக்காவிடம் உண்டு. 5,000 அதிகாரிகளைக் கொண்ட சி. ஐ. ஏ. அவசியந்தானா என்று அமெரிக்க வரியிறுப்பாளர்கள் கேட்கின்றனர்,

இந்த விஞ்ஞான யுகத்திலும் நன்கு பயிற்றப்பட்ட ஒற்றனின் தேவை உணரப்பட்டுள்ளது, நாட்டுப் பற்றுடன் வேவு பார்க்கும் திறன் சங்கமிக்கும்போது அதற்கு நிகரேயில்லை. இதை உணர்ந்த அமெரிக்க இராணுவம் சி. ஐ. ஏயில் முற்றாகத் தங்கியிருக்காமல் தனது சொந்த ஒற்றர்படையைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளது.

3000 பேர் கொண்ட இந்த வகையினர் இயங்குவதாக நம்பப்படுகிறது. பாலைவனப்புயல் தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கமுன் ஜெனரல் சுவாட்ஸ்கோப் இராணுவ ஒற்றர்களின் தகவல்களுக்குக் கூடுதல் மதிப்புக் கொடுத்துள்ளார். சி. ஐ. ஏயினர் கொடுத்த தரவுகள் திருப்தியில்லை என்று அவர் பின்பு பகிரங்கமாக அறிவித்துள்ளார். இன்றைய இராணுவ விமர்சகர்கள் சி. ஐ. ஏயை நிறுத்திவிட்டுப் புதிய அமைப்பை நிறுவும்படி அறிவுறுத்துகின்றனர். ஆனால் அமெரிக்க அரசு இதை ஏற்காமல் உள்ளதைப் புனருத்தாரணம் செய்வதையே விரும்புகின்றது. புதிதாக நியமனம் பெற்ற இயக்குநரின் பணி அதுவாகத்தான் இருக்கமுடியும்.

ஆதாரம் ;
நியூஸ்வீக் ஜூன் 12, 1995
ரைம் மே 20, 1995.

★

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒன்றுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்



# போதைப் பொருள் வர்த்தக மேலாள் குழுவின் இறுதி நாள்கள்.

## *கொலம்பியா:* புதியதோர் அரசின் கடும் நடவடிக்கை அதிருஷ்டவசமானது. போதைப்பொருள் வர்த்தக மன்னர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

*தமிழில் :* சொக்கன்

அவன் பெயர் ஜோஸ் சாண் டோக்கிறஸ். உலகின் போதை விற்பனைத் தலைமைப் புள்ளிகளில் ஐந்தாம் இடத்தை வகிப்பவன். கொலம்பிய அரசு இவனைப் பற்றிய தகவல்கள் தருபவருக்கு 560,000 டொலர் சன்மானம் அளிப்பதாய் அறிவித்திருந்தது. கடந்த சில வாரங்களாய் அரசின் தொலைக்காட்சித் திரையிலே அவனது உருவப்படம் அடிக்கடி காட்சிப் படுத்தப்பட்டது. அவன் இவ்வளவு எளிதாகப் பிடிக்கப்படுவான் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. காபொன்டிபாலோ பட்டினத்தின் திறந்தவெளிச் சிற்றுண்டிக்கடை ஒன்றிலே பானம் அருந்திக் கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த காவல்துறை அதிகாரிகள் இருவரின் கண்ணுக்குத் தட்டுப்பட்ட இவனை, அந்தச் சிற்றுண்டிக்கடையின் அண்மையிலே வதிந்த தலைமைக் காவற்றுறை அதிகாரிக்குத் தொலைபேசியில் அறிவிக்கத் துரிதமாக எல்லாம் நடந்து முடிந்தன. சாண்டோக்கிறஸ் வலையில் அகப்பட்ட மீனானான். இவனுடைய கைதைத் தொடர்ந்து இவனுக்கு அடுத்த நிலையிற் செயற்பட்ட பணொர் அரிஸ் பெலற்றா அர்சாயுஸ், ஹென்றி லொயேஸா, கில்பெட்டோ றொட்றிகஸ் ஒறெஜீஎலா, விக்டர் பொட்டினோ ஃபொமெக்கியூ ஆகியோரும் வசமாக மாட்டிக்கொண்டனர். இன்னும் இருவர்தாம் பாக்கி. ''நாம் அறிந்தவரையிலே மிகவும் சக்தி வாய்ந்த போதைப்பொருள் வர்த்தக மேலாள் குழு (Cartel) இது'' என்று போதைப்பொருள் தடுப்பு நிருவாகத்தின் தலைவர் ரொம் கொன்ஸ்ரன்ரின் விமர்சிக்கிறார். கொலம்பியாவின் அதிகாரிகள் தாம் வெற்றிபெற்று விட்டதாய் உணர்வதோடு, மிகவிரைவில் மற்றவர்களையும் சிறைப் பிடித்து, இந்தமேலாள் குழுவை முற்றாக ஒடுக்கி விட உறுதிபூண்டுள்ளார்கள்.



போதைப்பொருள் குழுவில் செபாலொஸ் கைது. தொடர்கிறது இராணுவ பொலிஸாரின் தேடுதல் வேட்டை.

ஐ. அமெரிக்க அதிகாரிகள் இக்குழுவினரைக் கண்டு பிடித்ததன் மூலம் இருநாடுகளுமே பெரும் சாதனை ஒன்றினைப் புரிந்துவிட்டதாகக் கருதுகின்றன. ஏனெனில் போதைப்பொருள் வர்த்தக மேலாள் குழுவினர் போதைப்பொருள் விநியோகிகளாகவும் (Suppliers), ஐ. அமெரிக்காவில் உள்ளோர் அதை வாங்கிப் பயன் செய்பவர்களாயும் இருந்து வந்தனர். எவ்வகையிலும் இவர்களின் நடவடிக்கையை ஒழித்துக்கட்டுவதிலே இருநாடுகளும் குறியாயிருந்தன. சாண்டொக்கிறஸ் தான் ஐ. அமெரிக்காவிற்குப் போதைவஸ்துவை விநியோகிக்கும் பொறுப்பாளனாய் இருந்தவன். குறைந்தது இந்தத் தொடர்பில் 1992 இல் இடம் பெற்ற மூவரின் கொலைகளுக்கும் இவனே பொறுப்பாளி. இம் மூவரில் கியூபாவில் பிறந்த பத்திரிகையாளர் மனுவல் டையொஸ் உனனுவும் உள்ளடங்கினார். லொயேஸா காவல்துறையிடம் சரணடைந்தபோது ஆடை அணிகளில் தன்னைக் கனவான் போலக் காட்டிக் கொண்டான். சங்கிலிவாள் படுகொலையிலும் (Chain Saw Massacres) 107 சாவுகளுக்கும், குண்டெறிந்து 27 பேரின் சாவை ஏற்படுத்திய கொடுங்கொலைகளுக்கும் லொயெஸ் பொறுப்பாளி என்று சந்தேகிக்கப்படுகிறது. கொலம்பியா இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராய் நடவடிக்கைகள் எடுப்பதில் மெத்தனமாய் இருந்து வருவதாக ஐ. அ. அதிகாரிகள் சந்தேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது உண்மையே. இப்பொழுது அந்தச் சந்தேகம் ஓரளவு மறைந்து விட்டது. ''இரண்டு மாதங்களுக்கு முன்புவரை கொலம்பிய அரசின் நடவடிக்கைகளைப் பற்றிப் பாதகமான கருத்தே கொண்டிருந்தேன். ஆனால் அண்மைக்கால நிகழ்ச்சிகள் நம்பகத்தை ஏற்படுத்துகின்றன'' என்று ஐ. அ அரசுத்திணைக்கள அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

கேஜிபி:– கேஜிபி என்பது சோவியத் ருஷ்ய ஒன்றியம் நிலவிய காலத்தில் மிகுந்த ஆற்றல் பொருந்தியதாய்ச் செயற்பட்ட புலனாய்வுக்குழு, போ. பொ. வர்த்தக மேலாள் குழு கணனிகள் மூலமும், உளவாளர்கள் மூலமும் ருஷ்யப் புலனாய்வு நிறுவனத்திற்குச் சமமாகச் செயற்பட்டு வந்துள்ளது. 1970 இல் சாண்டோக்கிறசுக்கும், அவனது வர்த்தகமேலாள் குழுவுக்கும் எதிராகப் பப்லோஎஸ்கொபர் என்பவனின் வர்த்தக மேலாள்குழு மெடெலின் என்ற இடத்தில் இயங்கியது. ஆட்கடத்தல் போலிப்படுத்தல் முதலிய செயற்பாடுகளில் இவ்விரு குழுக்களும் போட்டியிட்டன. 1980 இல் மோஃபியா போதைப்பொருள் வர்த்தகம் சாண்டோக்கிறசினால் திட்டமிட்டு ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட வேளையில் மெடெலின் குழுவால் எதிர்நிற்கக்கூடவில்லை. அது உடைந்துபோயிற்று. இன்று மீண்டும் மெடெலின் குழுவானது. உலகின் கொக்கெயின் விற்பனையிலும், உற்பத்தியிலும் 80 சத வீதத்தைத் தன் கைக்குள் வைத்திருக்கிறது. இது ஆசியாவிற்கு வெளியில் உள்ள மேலாதிக்க நிலையாகும். போ. பொ. நிபுணர்கள் இந்த வர்த்தகத்தில் 2 கோடியிலிருந்து 7 கோடி டொலர் வரை வருமானம் கிடைப்பதாய்க் கணித்துள்ளார்கள். மெடெலின் குழு கடந்த பத்தாண்டுகளாய்க் குண்டு வீச்சு, பயங்கரவாதச் செயல்கள் வாயிலாகக் கொலம்பிய அரசுக்குச் சவாலாய் இருந்து வந்துள்ளது. இராணுவம், காவல்துறை, அரசியல்வாதிகள் உட்படப் பலருக்கும் கையூட்டு (Bribery) வழங்கி அவர்களைத் தன்கைகளில் போட்டுக் கொண்டது, கொலம்பிய ஜனாதிபதி தமது பதவிக்கு வர நடத்திய தேர்தல் பிரசாரத்துக்கு இந்தக்குழுவின் நிதி பயன்படுத்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. இதை அவர் வன்மையாக மறுத்த போதிலும் இதுவரை அவர் சந்தேகத்தற்கு அப்பாற்பட்டவராய் ஆகவில்லை.

ஆதாரம்: மேலும் அதிக காலத்துக்குப் போ. பொ. வர்த்தக மேலாள் குழுக்களின் அக்கிரமங்களைச் சகித்துக்கொள்ள முடியாத நிலை உருவாகிவிட்டது. ஐ. அ. வர்த்தகத் தடையையும், நிதியுதவித் தடையையும் ஏற்படுத்தப் போவதாய் அச்சுறுத்தியதும் சேர்ந்து கொண்டது. இவற்றின் பயனே அண்மைக்காலக் கைது நடவடிக்கைகள் எனினும் தனது நடவடிக்கைகளின் நம்பகத் தன்மையைக் கொலம்பியா, மேலும் நிரூபித்தாக வேண்டும். இதற்கு, கில்பெட்டோ றொட்றிகஸ் ஒறெஜுலாவையும், அவன் சகாக்களையும் நீண்டகாலத்திற்குச் சிறையில் இட்டு அவர்களை வெளித் தொடர்புகளிலிருந்து முற்றாகத் தனிமைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

1992 இல் எஸ்கொபர் என்ற போதைப் பொருள் வர்த்தக மன்னன் எஸ்கொபர், ஆடம்பரமான சிறை வாழ்வை நடாத்தினான். அவன் சிறைப்பட்டிருந்த சிறைச்சாலை '' தேவாலயம் '' ( Cathedral ) என்ற பட்டப் பெயரால் வழங்கியது. அப்படியிருந்தும் அவன் சிறையிலிருந்து வெளியேறி 17 மாதங்கள் சுதந்திர வாழ்வு நடத்தினான்; பின்பு பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். இந்த நிகழ்ச்சி கொலம்பியாவின் சிறை அதிகாரிகளுக்கு நல்ல பாடம்.

கொலம்பியாவின் தலைமை வழக்குத் தொடுக்குநர் ( Chief–Prosecutor ) வல்டி வியிசோ சர்மியென்றோ சட்ட ஒழுங்கில் மிகவுங் கண்டிப்பானவர். கடும்போக்காளர்கள் இவருடன் நேச உறவு கொண்டிருக்கிறார்கள். இவர் போதைவஸ்து விற்பனை பற்றிய தீவிர விசாரணையில் இறங்கியுள்ளார். இவரின் விசாரணையில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கையூட்டுப் பெற்றமையும் இடம் பெற்றுள்ளது. ஆனால் இவரின் முடிவுகளுக்கு அரசு உடந்தையாயிருக்கும் என்பது ஐயந்தான். ஆனால் அவரோ குற்றம் நிரூபிக்கப் படுபவர்களுக்குக் கடுந் தண்டனை வழங்கப் படுவதிற் குறியாயிருக்கிறார். சரண் புகுதல், குற்றத்தை ஒப்புக் கொள்ளல், நன்னடத்தை என்பவற்றிற்குத் தண்டனைக் குறைப்பு வழங்கக் கொலம்பியாவின் குற்றவியற் சட்டம் இடம் அளிக்கிறது. இதன்படி கில்பேட்டோ றொட்றிக்கிறஸ் 14 ஆண்டுகளின் பின்பு விடுதலையடைந்து வெளியில் வரலாம். இவன் வசம் அரசியல் வாதிகள் கையூட்டுப் பெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவற்றை இவன் வெளியிடுவான் என்ற அச்சத்தால் சிறையிலே இவனை நல்ல மாதிரி நடத்தக் கூடும்.

போ. பொ. வர்த்தக மேலாள் குழுவானது ஆயுதபலம் மிக்கது. எந்தக் கொடுமைக்குந் தயங்காதது. அதன் கிளைகளாக ஏறக்குறைய ஓர் இடசின் சிறிய குழுக்கள் இயங்குகின்றன. ஆயுத பலமும், ஒழுக்காறற்ற செயற்பாடுகளும் இவற்றிற்கு உறுதுணைகள். எனவே, தலைமைக்குழு ஒடுக்கப்பட்டாலும் இந்தச் சிறு குழுக்கள் தொடர்ந்து போதைப்பொருள் வர்த்தகத்தை மேலெடுத்துச் செல்லும். அவ்வேளையில் நாட்டிலே பெருங் குழப்ப நிலைகள் உருவாகலாம். ஏற்கனவே, கோப்பிச் செய்கை நிலவும் பொகொட்டா பிரதேசத்தில் இவை மேலாதிக்கம் கொள்ளத் தொடங்கிவிட்டன.

இவற்றின் உறுப்பினர்கள் காட்டுமிராண்டிகளிலும் மோசமானவர்கள். பிரதானமான போர் முடிவுக் கட்டத்தை நெருங்கிய போதிலும், துண்டுதுண்டாக உள்ள குழுக்களின் தொல்லை இன்னுந் தொடர்கிறது. எனினும் தலைமைக்குழு வேர்பாறியதை அடுத்து இவை புதிய பாடமொன்றைக் கற்றுக்கொள்ளலாம். இவை தம்மைச் சர்வதேச மட்டத்துக்கு வளர்த்துக் கொள்ளுமானால், அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கும். அவதானிகள் கடந்த ஆறு மாதத்தில் உண்டான தடைகளில் போதைப் பொருள் விற்பனை ஈடாட்டம் காணும் என்று எதிர்ப்புக் கூறுகிறார்கள். தொடர்ந்து வியாபாரம் வழமை நிலைக்குத் திரும்புவது சாத்தியம் எனவும் சொல்கிறார்கள். இவர்கள் கூற்றில் வியப்படைய ஒன்றும் இல்லை. போதைப் பொருள் விற்பனையாளர், புதிய சவால்களுக்கு எவ்விதம் முகங்கொடுப்பது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்றே தோற்றுகிறது.

*நியூஸ் வீக் ஜூலை 17, 1995*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்திக்கான்:

# வரலாற்றின் விலை என்ன?

**14 ஆம் நூற்றாண்டுக்குரிய பெறுமதி வாய்ந்த கைபெழுத்துப் பிரதியிலிருந்து மூன்று பக்கங்கள் மறைந்து போயின. இம்மறைவானது ஐக்கிய அமெரிக்கக் கல்வியாளர் ஒருவர் மீது நெருடலான பல கேள்விகளை எழுப்பியுள்ளது.**

தமிழில் : சொக்கன்

வத்திக்கான் நூலகக் காவலர்களுக்கு அவர் நன்கு அறிமுகமானவர். தலைசிறந்த கல்வியாளர் என்பதற்கு ஐயம் இல்லை. அவரின் பெயர் அன்ரனி மெலின்தாஸ், 68 வயதானவர், ஐக்கிய அமெரிக்காவின் ஒகியோ மாகாணப் பல்கலைக்கழகத்தில் ஓவிய வரலாற்றுப் பேராசிரியர். அத்துறையிலே ஆழமான அறிவு வாய்ந்தவர் என்ற கணிப்பு அவருக்கு இருந்தது. கோடை விடுமுறையில் வத்திக்கான் வந்து அங்குள்ள 1,50,000 பக்கக் கையெழுத்துப் பிரதிகளை ஆராய்வது அவரின் வழக்கம். மெலின்காசின் அறிவாற்றல்களும், பண்புகளும் வத்திக்கான் நூலகத்திலே அவருக்குப் பெருமதிப்பைத்தேடித் தந்துள்ளன. இதனால் அவர் அந்த நிறுவனத்தின் அலுவலர்களுள் ஒருவராகவே கணிக்கப்பட்டார். 'அவர் தலைசிறந்த அறிஞராயும், உயர்ந்த கனவானாயும் விளங்கினார்' என்று வத்திக்கான் நூலகப் பணிப்பாளரான அயர்லாந்தைச் சேர்ந்த மதகுரு லியனாட் பொயில் அடிகள் கூறுகிறார்.

இவ்வாறிருக்கையில் நூலகத்திலிருந்து 14 ஆம் நூற்றாண்டுக்குரியதான கையெழுத்து நூலிலிருந்து 3 பக்கங்கள் காணாமற் போயின. இவற்றில் இரண்டு பக்கங்கள் ஐக்கிய அமெரிக்காவின் புராதனப் பொருள் விற்பனையாளர் ஒருவருக்கு 500, 000 டொலர் விலைக்கு விற்க ஒழுங்கு செய்யப்பட்டமை தெரியவந்தது. மூன்றாவது பக்கத்துக்கு என்ன நிகழ்ந்தது என்பது தெரியவில்லை.



இவை மறைந்ததிலும் அதிகமான அதிர்ச்சி பொயில் அடிகளுக்கு ஏற்பட்டது. ஏனெனில் இவற்றை விற்க முற்பட்டவர் மெலின்காஸ் என அறியவந்ததுதான். 1,330 அளவில் வாழ்ந்த மானிடவியலாளர் பெற்றாஸ் என்பவர் தொகுப்பித்து வைத்த 156 பக்கங்கள் கொண்ட தொகுதியிலிருந்து இந்தப் பக்கங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் பொயில் அடிகள் 1987 இல் மெலின்காஸ் ஆய்வு நிகழ்த்திவந்த காலப் பிரிவிலேதான் இது நிகழ்ந்திருக்க வேண்டும் என்கிறார்.

கடந்த மாதம் ஐக்கிய அமெரிக்கச் சுங்கச் சேவையின் முகவர்கள் மெலின்காசை இதுபற்றி விசாரித்தனர். தம்மை வினாவிய பத்திரிகையாளர்களுக்குத் தொடக்கத்திலே அவர் கூறியது இது தான். 'இவற்றை என்னிடம் வைத்திருக்கிறேன் என்பது மிகச் சாதாரணமான ஒரு விடயம். இது பற்றி மிக எளிமையான விளக்கத்தை என்னால் தரமுடியும்.' அவர் சார்பிலே ஒகியோ நகரைச் சேர்ந்த சட்டத்தரணி ஜேம்ஸ் ஃபிலிப்ஸ் கூறுவதாவது: 'மெலின்காசின் வசத்திலுள்ள பக்கங்களுக்கு அவர் உண்மைபோலத் தோற்றுகின்ற விளக்கம் அளித்துள்ளார். ஆனால் அவ்வேளையில் அவர் அவற்றை வழங்க ஆயத்தமாய் இருக்கவில்லை.

அரியனவாகப் பெறக்கூடிய நூல்களின் விற்பனையாளர் புறூஸ்ஃபெறினி ஒகியோவின் அக்ரோன் என்ற இடத்தினரான இவர் மே 4ஆந் தேதியன்று மெலின்காஸ், பிளாஸ்ரிக் உறையிட்ட பக்கங்களைத் தம்மிடம் கையளித்ததாக வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஃபெறினி அந்தப் பக்கங்களின் பிரதிகளைப் பிறின்ஸ்டனிலுள்ள ஓவிய வரலாற்றாய்வாளரான ஜேம்ஸ் மறோவிடம் உண்மை கண்டறிய அனுப்பி வைத்தார். மறோ பலநாள் ஆய்வுக்குப்பின் வத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானுடன் தொடர்பு கொண்டு அவை உண்மையானவையே என் புதை அறிந்து உறுதிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து ஃபெறினி, றிச்சாட் சிய்கல் என்பவரை அவர் தலைமை தாங்கிய கிளீவ்லன்ட் சுங்கச்சேவை அலுவலகத்தில் கண்டு முறைப்பாடு கொடுத்தார். சிய்கல் உள்நாட்டுச் சட்டத்தரணி அலுவலகத்துக்குப் பாரப்படுத்தினார். அதேவேளை வத்திக்கான் நூலகத்தில் மறைந்த மூன்று பக்கங்களில் ஒன்று மெலின்காசோடு நடத்திய பேட்டியின் போது அரசிடம் கையளிக்கப்பட்டது.

இவ் விவகாரங்களையிட்டுப் பொயில் அடிகள் சினங் கொள்வதற்குப் பதில் கவலையே அடைந்தார். 'நாங்கள் குறித்த பக்கங்களை மீளப் பெற்றுக்கொண்டோம். ஆனால் மெலின்காஸ் பற்றி என்ன சொல்வது? பாவம் அவரின் கௌரவம் முற்றாக அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது' என்கிறார் அவர். பதினோராண்டுகளாய் வத்திக்கான் நூலகத்தை நிர்வகித்து வரும் அவர் தம்மால் சந்தேகிக்கப்படக்கூடிய கடைசி நபராகவே மெலின்காஸ் உள்ளார் என்கிறார்.

அமெரிக்கப் பேராசிரியரான மெலின்காஸ் 30 ஆண்டுகளாய் வத்திக்கான் நூலகத்துக்கு வருகை தந்திருக்கிறார். பொயில் அடிகளுக்கு முன்னவரான கருதினால் ஸ்டிக்ளருடனும் அவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. 'இவரை நாங்கள் நன்கறிவோம். பெரும்பாலும் எங்கள் நண்பராகவே இருந்து வந்தார்' என்பது பொயில் அடிகளின் கவலை நிறைந்த கூற்று.

மெலின்காஸ் ஒவ்வோராண்டும் யூலை 15 தொடக்கம் செப்ரெம்பர் 15 வரையுமான நாள்களிலே தான் மேற்குறித்த நூலகத்திலே தமது ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார். 'மக்கள் நூலகத்தினுள் வருவார்கள், போவார்கள். ஆனால் மெலின்காசோ தமது ஆய்விலேயே ஆழ்ந்திருப்பார்' என்கிறார் பொயில் அடிகள்.

குறித்த கையெழுத்துப் பிரதி நூலிலே 13 விடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. விடயங்களும், சித்திரங்களும் வெள்ளாட்டுத் தோலிலோ, பசுக்கன்றுத் தோலிலோ எழுதப்பட்டவை. பக்கங்களின் வெற்றிடங்களில் இலத்தீன் மொழியிலே அவற்றின் தொகுப்பாளரான பெற்றாச் பல குறிப்புக்களை எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதே.

நூலின் மறைந்த பக்கங்களான 98. 114. 140 என்பவற்றில் விவசாயம், போர் தொடர்பான விடயங்கள் உள்ளன. பொயிலின் கருத்துப்படி இப்பக்கங்களின் பெறுமானம் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கூற்றுக்கு ஒரு பக்கம் மட்டும் விலக்கு. அதில் மனிதன் ஒருவன் தானியத்தைப் போரடிக்கும் படம் வரையப்பட்டுள்ளது. 'எஞ்சியவை (மற்றைய இரண்டு பக்கங்கள்) அந்தக் காலத்தோடு (14 ஆம் நூற்றாண்டு)தொடர்பான முக்கியமற்ற நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளன' என்பது பொயில் அடிகள் கூற்று. அவரும், அலுவலக ஊழியர்களும் மற்றைய கையெழுத்துப் பிரதிகளிலும் எந்தப் பக்கங்களாவது மறைந்து போயினவா என்று சோதித்ததில் அவ்வாறு ஒன்றும் மறையவில்லை என்பது தெரிய வந்தது.

குறைந்தபட்சம் பத்துப் பன்னிரண்டு அறிஞர்களாவது 1987 இல் பெற்றாசின் நூலிலே ஆய்வு நடத்தியிருப்பார்கள். ஆனால் எவரும் அதில் இருக்கவேண்டிய இரு பக்கங்கள் இல்லாது போனதைக் கவனிக்கவில்லை. பொயில் அடிகள்கூட இரண்டு பக்கங்கள் வெட்டியெடுக்கப்பட்டதைக் கண்டாரேயன்றி மூன்றாவது பக்கம் இல்லாததை முதலிலே கவனிக்கத் தவறிவிட்டார்.

1986 இல் மெலின்காஸ், ஃபுளோறன்ஸ் நகரத் தேசிய நூலகத்திலும் ஆய்வு மேற்கொண்டார். எனவே அங்குள்ள நூல்களிலும் எவையேனும் பக்கங்கள் காணாமற் போயினவோ என்ற ஐயம் அந்த நூலகப் பணியாளருக்கும் ஏற்பட்டது இயல்புதான். ஆனால் அவர்களின் தீவிர சோதனையின் முடிவில் அவ்வாறு எவையும் மறையவில்லை என்று தெரிய வந்தது.

மெலின்காஸ் மீது குற்றவியல் சார் வழக்கெதுவும் தொடுக்கும் நோக்கம் வத்திக்கானுக்கு இல்லை. நூலகத்தின் காப்புக்கு மேலதிக நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யவில்லை. "இந்த நூலகம் 550 ஆண்டுகளாய் இயங்கி வருகிறது. இத்தகைய அசம்பாவிதங்கள் இடையிடையே ஏற்படுவதைப் பொறுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் கோடை விடுமுறையில் நூலகத்தைப் பயன்படுத்த வருவோரில் நாங்கள் அன்போ, ஆதரவோ காட்டவியலாத நிலையிலே தான் இருக்கிறோம். மக்களுக்கு உதவிசெய்யக்கூடிய போதிய ஆயத்தத்துடன் நாங்கள் இல்லை." எனினும் 71 வயதான பொயில் அடிகள் சக மக்களிலே தாம் நம்பிக்கை இழக்க இந்தச் சம்பவம் காரணமாகிவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார். பலவாண்டுகளாகக் கட்டியெழுப்பிய நம்பிக்கையை நண்பரும், சக கல்வியாளருமான ஒருவரின் விளக்கமுடியாத நடத்தை உடைத்துச் சிதைத்துவிட்டதை அவர் உணர்கிறார்.

*கிறெக் பேக்-றோம்*
கென் மையர்ஸ் - கிளிவ்லன்ட் வழங்கிய செய்தியறிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் மொழியில் கவனம் தேவை

தமிழில் : இளையவன்

ஒரு நாட்டிற்குச் செல்வதற்கு முன்பாக அந் நாட்டிற் பேசப்படும் மொழி பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இது வர்த்தக நோக்கங்களுக்காக விஜயஞ் செய்பவர்களுக்கு மிகவும் அடிப்படையானதாகும். இது ரால்ப் வால்டோ மெர்சன் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்த ஒரு கூற்று ஆகும். 1985 முதல் ஐரோப்பாவிலுள்ள பெரிய மொழியியற் பாடசாலை அதன் பாடத்திட்டங்களை இரு மடங்கு பெருக்கியுள்ளது.

வெற்றியின் அடிப்படையானது மற்றவர்களின் மொழியிற் பேசுவதிற தங்கியுள்ளது. ஆனால் ஒரு மொழியில் ஆளுமை பெறுவது என்பது அம்மொழியைப் பேசுபவர்களுடன் சாதாரணமாகச் சம்பாஷிப்பதில் தங்கியிருக்கிறது.

ஆங்கிலம் உலகளாவிய ரீதியில், வர்த்தகப் பயணிகள் மத்தியிற் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு மொழியைப் பேச நிர்ப்பந்திக்கப்படுவது பல விதமான தப்பபிப்பிராயங்களையே ஏற்படுத்திவிடக் கூடியதாகும்.

ஜேர்மனிய மன்னர் ஒருவர் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது மகாராணியைச் சந்திக்க நேரிட்டது. அவர் தனது ஆங்கிலமொழி அறிவைப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டார். அப்போது அரசிக்கு அவர் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார். எப்படி நலமாக இருக்கிறீர்களா? (How are you?) என்று கேட்க வேண்டியதற்குப் பதிலாக, அவர் நீங்கள் யார்? (Who are you?) என்று கேட்டுவிட்டார். ''நான் தான் இங்கிலாந்தின் மகாராணி'' என மகாராணி சூடாகப் பதிலளிக்க நேரிட்டது. இது உண்மையில் நடந்த ஒரு சம்பவம். இரு தரப்பினரும்தத்தம் மொழியிற் பேசும்போதே ஒரு நல்ல விதமான இணக்கம் ஏற்பட முடியும். அப்போது தான் பேச்சுவார்த்தை இயல்பானதாக இருக்கும். அவ்வாறில்லையானால் சந்திப்பில் ஈடுபட்டிருப்பவர்களின் கலாசாரப் பின்னணியும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ''மற்றவர்கள் மொழியிற் பேசி விற்கலாம். ஆனால், வாங்கும் போது உனது மொழியிற் பேசு'' என்பது ஜேர்மனியில் உள்ளதொரு முதுமொழி.

நீங்கள் சொல்ல முற்படும் செய்தி அதன் கலாசார மற்றும் மொழியியல் உணர்வுடன் மற்றவர்களால் கிரகிக்கப் படுகிறது என்பதை நீங்கள் முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். பிறசெல்சில் இருக்கும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பதில் டைரக்டர் ஜெனரலான பீற்றர் பூலே, ''சம்பிரதாய பூர்வ சந்திப்புக்களில் கேலிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்பார். இரவு விருந்துக்குப் பின்னர் பேசும் போது பகிடி விடாவிட்டால் பிரித்தானியர் கோபமுறக் கூடும். இரவு விருந்தின் பின் கேலிப் பேச்சுக்களில் ஈடுபடுவதைப் பிரான்சியர்கள் கண்டிப்பர். உடனடியாக உட்காரும்படி அவர்கள் கூச்சலிடுவர். அத்துடன் போதையில் இருப்பதாகவும் அவர்கள் கருதுவர். இவை ஒரு குறிப்பிட்ட சூழலின் தன்மையை விளங்கப்படுத்தக் கூடியதாகும். பூலே மேலும் கூறுகையில், ''ஒரு சிரிப்புக்குரிய குறிப்பைக் கூறும்போது, முதலில் ஆங்கிலேயர் சிரிப்பர், பின்னர் பிரான்சியரும், இத்தாலியரும் சிரிப்பார்கள், அதன் பிறகு டச்சுக்காரர்களும், இறுதியாகத் தான் ஜேர்மனியரும் சிரிப்பார்கள். ஏனெனில் வசனத்தின் இறுதிச் சொல்லும் வந்த பின்னர்தான் ஜேர்மனியர் தமது உணர்வலையை வெளிப்படுத்துவர்'' என்கிறார்.

இத்தகையதொரு சம்பவத்தில் ஜப்பானியர் தமது முகபாவ மாற்றத்தின் மூலம் உணர்ச்சிகளை வெளியிட்டு விடுவர்.

''இப்போது அமெரிக்கக் கனவான் ஒரு பகிடிக் கதை சொல்லப் போகிறார். அவர் பேசி முடிந்ததும் நீங்கள் உரத்துச் சிரிப்பதுடன், கைகளைத் தட்டி ஆரவாரஞ் செய்ய வேண்டும். அவ்வாறில்லாவிடிற் சங்கடம் நேரும்.'' இவ்வாறு ஜப்பானிய மொழி பெயர்ப்பாளர் ஒருவர் ஒரு தடவை கூறியிருக்கிறார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர் அல்லாத ஒருவர் கடுமையான ஆங்கிலத்தில் பேசிய போது அதனைப் பிரெஞ்சு மொழியில் விளக்கிய ஒருவர், ''உங்களது வாக்



மிகவும் எளிமைப்படுத்தாமல் சிறிய சிறிய வசனங்களாகப் பேசுவது, நீங்கள் நிறுத்து நிதானமாகப் பேசுகிறீர்கள் என்பதைக் காட்டும். விரிவான விவரணங்களைத்தவிர்ப்பதும், நேருக்கு நேர் பார்த்துப் பேசுவதும் பொதுவாகப் பெரிதும் விரும்பப்படும் விடயங்கள். வியாபாரத்தில் நீங்கள் வெற்றி பெற இவை துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென் கருவியில் சங்கீதப் பொத்தானை அழுத்துங்கள்'' என்று தெரிவித்தார்.

நேருக்கு நேர் பேசும்போது இத்தகைய தவறுகள் நிகழாது. ஆனால் இவை மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருப்பவரின் தனிப்பட்ட ஆற்றல்களில் தங்கியிருக்கிறது. முக்கியமான பேச்சுக்களில் ஈடுபடும் இரு தரப்பினரும் தமது நம்பிக்கைக்குரிய மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது நிபுணர்களின் கருத்து. அது வசதியானதுதான். ஆனால் அதில் ஓர் ஆபத்தும் உண்டு. சொந்த மொழி பெயர்ப்பாளரை ஈடுபடுத்தும்போது ஆழமாகச் சிந்திக்காமலேயே தமது எசமான்களின் நலன்களைப் பிரதிபலித்து விடுவர்.

மிகவும் எளிமைப்படுத்தாமல் சிறிய வசனங்களைப் பேசுவது, நீங்கள் நிறுத்து நிதானமாகப் பேசுகிறீர்கள் என்பதைக் காட்டும். விரிவான விவரணங்களைத் தவிர்ப்பதும் நேருக்கு நேர் பார்த்துப் பேசுவதும் பெரிதும் விரும்பப்படும். இணக்கங் காண விரும்புபவருடன் நேருக்கு நேர் பார்த்துப் பேசுவது கலாசார ரீதியிலும் அங்கீகரிக்கப்படத்தக்கது. புன்சிரிப்பை உதிர்த்தபடி மெல்லிய குரலில் ஆமோதித்துக் குரல் கொடுப்பது, பேச்சுக்களைச் செவிமடுக்கும் போது ஜப்பானியர் கைக்கொள்ளும் வழக்கமாகும். தொடர்ந்து நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் நீங்கள் சொல்பவற்றை ஏற்றுக் கொண்டிருப்பதாக மேற்கு நாட்டவர் தவறாக அர்த்தப்படுத்துவர்.

பண்டைய காலந்தொட்டுத் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதை ஜப்பானியர் ஒரு கலையாகவே வளர்த்துக் கொண்டுள்ளனர். தனிப்பட்ட எண்ணங்களையும், அத்தியாவசியத் தேவைகளையும், ஆம் அல்லது இல்லை என்ற கருத்தைத் தரும் சொற்பதங்களை உச்சரிக்கும் விதத்திலேயே புலப்படுத்தி விடுவார்கள்.

அத்துடன் ஜப்பானியர் தமது முகபாவ மாற்றங்களின் மூலம் செய்திகளை உணர்த்தவும், தவறுகள் இடம் பெறாமல் தடுக்கவும் ஒரு தொகுதி விதிகளை வகுத்துள்ளனர். இல்லை என்பதை நேரடியாகக் கூறாமல் இல்லை என்ற பதில் கிடைக்கத்தக்க கேள்விகளை எழுப்பி விடுவதும் அவர்களது வாடிக்கை.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை பிரெஞ்சும், ஆங்கிலமும் எதிர்மறையான அர்த்தங்களைக் கொடுக்கக் கூடிய மொழிகளாகும். உங்கள் இறுதியான இலாப விபரங்களைத் தருக என்று ஆங்கிலத்தில் விடப்படும் ஒரு கட்டளை, அப்படியான ஒன்று இல்லை என்று பிரெஞ்சு மொழியில் அர்த்தப்படுத்தப்படக் கூடும்.

ஆக்கம் : றோஜர் கொலிஸ்
வேள்ட் எக்சிகியூட்டிவ் டைஜெஸ்ற்,
ஏப்ரல் 1995

✢

## செவ்வாய்க் கிரகத்தில் பாவிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட நவீன வாகனம்

செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதனை அனுப்புவதற்கு முதல் அங்கு பாவிப்பதற்குரிய ஊர்திகளைத் தயாரிக்கத் தொடங்கி விட்டார்கள். 1997 ஆம் ஆண்டளவில் பிரயாணங்கள் ஆரம்பிக்க அமெரிக்கர்கள் திட்டமிட்டுள்ளனர். மனிதன் அங்கு காலடி பதிப்பதற்கு முன்பாக றொக்கற் மூலம் சில அத்தியாவசிய சாதனங்களைச் செவ்வாயில் தரையிறக்க அவர்கள் உத்தேசித்துள்ளனர். அவற்றில் ஒன்று இங்கு விபரிக்கப்படும் வாகனம். ஆறு சக்கரங்கள் பூட்டப்பட்ட இந்தச் சகடை போன்ற அமைப்பு பூமியில் இருந்து கொடுக்கப்படும் நெடுந்தூரக் கட்டளைப்படி செயற்படும். இதன் மேற்புறத்தில் சூரிய சக்தியைக் கிரகிக்கும் தட்டுக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பூமியில் இருந்து வரும் கட்டளையைப் பெறும் ஒலிவாங்கியும் (அன்ரெனா) மற்றும் கட்டுப்பாட்டு இலத்திரனியலும் இதிலுண்டு. புகைப்படக்கருவிகளும், செவ்வாயின் தட்ப வெப்பம், உயிரினங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளும் கருவிகளும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. கலிபோர்னியாவில் உள்ள ஜெற் உந்துகணை ஆய்வுகூடம் இதைத் தயாரித்துள்ளது. இது விற்பனைக்கு விடப்படாதபடியால் விலை குறிப்பிடப்படவில்லை.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்


கோடை வெயிலிலே தவிக்கிறீர்களா ?
நாவிற்கும் உள்ளத்திற்கும்
குளிர்ச்சி தரும்

★ குளிர் களி
★ அன்னாசிப் பானம்
★ திராட்சைப் பானம்
★ குளிர் சர்பத்
★ விசேட குளிர் களி

அது

கல்யாணியின்
தனிரகம்



ஆம் கல்யாணி குளிரகத்தின் குளிர்களி - மென்பான வகைகள் தரத்திலும், சுவையிலும் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

அன்பான வரவேற்பு — பண்பான உபசரிப்பு

கல்யாணி குளிரகம்

( கல்யாணி கிறீம் ஹவுஸ் )

73, லெப். கேணல் சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நியாய விலை !

★★ நம்பிக்கை !

★★★ நிறைந்த சேவை !

விஜயம்
செய்யுங்கள்



# குகன் களஞ்சியம்

பலசரக்கு மற்றும் பல்பொருள்கள்
யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள :

## குகன் களஞ்சியம்

180 ( 380 ), கேணல் கிட்டுசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம்

# ஆளணி நிர்வாகம்

## சொல்ல விரும்பியதை என்னிடம் நேரே சொல்லுங்கள்.

*தமிழில்:* திரு. கிருபைராஜா

எவரிடமாவது நீங்கள் எப்பொழுதாவது, 'என்னைப் பற்றி நீங்கள் உண்மையாக என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டதுண்டா? அப்படிக் கேட்டிருந்தால் அதற்கான பதில் ஒரு செருகல், மழுப்பல், சுற்றிவளைப் பாகத்தான் வந்திருக்கும். ஆனாலும் நீங்கள் ஆளணியை நிர்வகிக்கும், அல்லது மேற்பார்வை செய்பவர் ஒருவரானால் அவர்கள் உங்கள் மீது கொண்டுள்ள மாறான கருத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

நீங்கள் நல்ல செயற்றிறமையுள்ள ஒரு முதல்வராக வேண்டும் என்றால் மற்றவர்களுடன் கருத்துப் பரிமாறுவதுடன் அவர்கள் உங்களை விமர்சிப்பதையும் கேட்க விருப்பம் உள்ளவராக இருக்கவேண்டும்.

முதலில் நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு முதல்வர் என்ற முறையில் அவர்கள் உங்களை எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் அவர்களுடன் வாதிடவோ, உங்களைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்தைத் திருத்தவோ முயலக்கூடாது. அவர்கள் தங்கள் நோக்கத்திற்கு அமையக் கூறுவதைச் சரியானதென்று ஏற்று நன்றியும் கூறுங்கள். அவர்களுடைய விமர்சனத்திற்குச் செவிமடுத்து அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது உங்கள் கடப்பாடாகும். உங்களுடைய நடத்தை பற்றி அறிவுறுத்தப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்வதாயின் அவற்றைப் பற்றி மற்றவர்கள் சொல்வதைக் கேட்டறிய ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தாமல் முடியாது. உங்களுக்கு மாறான கருத்துக்களைத் தேடிக்கண்டு ஏற்றுக் கொள்வதால் உங்கள் பொறுப்பின்கீழ் வேலை செய்வோர் உங்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஊகிக்க முயலாமல் அறிந்து உணரலாம்.



உங்களைப் பற்றிய கருத்தைக் கூறும்படி கேட்டுக்கொள்ளும் விதம் தான் உங்களை நீங்கள் அறிந்து கொள்ள உதவும். மற்றவர்களைப் புறமொதுக்கும், அல்லது அவர்கள் மீது குற்றஞ் சுமத்தும் தன்மையான வார்த்தைப் பிரயோகம் செய்யாதீர்கள். உதாரணமாக 'என்னுடைய தலைமைத்துவத்தின் தன்மை பற்றி நான் சிந்தித்துப் பார்த்தேன். என்னை மற்றவர்கள் ------- என்று நினைக்கிறார்கள்' என்று பொருத்தமான சொற்பிரயோகத்தை இடைவெளியில் இட்டுக் கூறுங்கள்.

அந்தக் கூற்று கேட்பவர்களுக்கு, நீங்கள் மற்றவர்கள் விரும்பாத எதையும் செய்வர் என்பதைத் தெரிந்துகொண்டு இருக்கிறீர்கள் என்பதனை அறிவிக்கும். அத்துடன் அதன் மூலம் உங்கள் செயல்முறைக்கு நீங்களே உரிமையும், பொறுப்பும் ஏற்கிறீர்கள் என்பதையும் காட்டுவதாக அமையும். மேலும் கேட்பவரும் கூட உங்களைப் பற்றிய தனிப்பட்ட விடயம் ஒன்றை நீங்கள் அவருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள் என்பதால் தானும் முக்கியத்துவம் பெற்றவரானதோர் உணர்வை அடைவார். அது மற்றவர்களை உங்கள் பக்கம் சாரவைக்க நல்லதொரு வழியாகும். அவர்கள் உங்களுக்கு, நீங்கள் விரும்பும் வாறான மாற்றத்தைச் செய்ய உதவ இயலும்.

ஒருபோதுமே, 'நீங்கள் என்னைப் பற்றிச் சொன்ன ஒரு விடயமான ...... என்பதை நான் கேள்விப் பட்டேன்' என்று கூறாதீர்கள். அது குற்றஞ் சாட்டுவது போல் தொனிக்கும். செவிமடுப்பவருக்கு அத்தகைய சங்கடத்தை ஏற்படுத்தாதீர்கள்.

அடுத்ததாக நீங்கள் செய்யும் எந்தச் செயல் உங்களைப் பற்றிப் பிறர் ஏதாவது ஒருவிதமாக நோக்க வைக்கிறது என்பதை மற்றவர்கள் உங்களிடம் கூறச் செய்யுங்கள். 'நீங்கள் என்னிடம் அவதானிக்கக்கூடிய எந்த விதமான நடத்தைகள் மற்றவர்களை அவ்விதமாக நோக்க வைக்கின்றது?' என்று கேளுங்கள்.

அந்தக் கேள்வி,

- மற்றவர்களின் மனங்களில் கருத்துக்கள் ஏற்பட நீங்கள் செய்யும் செயல்கள் துணை போகின்றன என்பதையும்;
- உங்களுடைய அந்தச்செயல்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியாது என்பதனையும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நீங்கள் கேட்டறிய விளையும் ஆட்களுக்கு அந்தச் செயல்கள் என்னவென்பது தெரியும் என்பதனையும்;

★ அவர்களுக்கு அதனை உங்களிடம் கூற அனுமதி உள்ளதென்பதனையும் ஏற்றுக் கொள்கிறது.

நீங்கள் விரும்பும் விதத்தில் செயல்கள் நடைபெறவில்லை என்பதனைக் கூறி அந்த நிலைமையை நீங்கள் மாற்ற விரும்புகிறீர்கள் என்பதைத் தெளிவுறத் தெரிவிக்க ஏற்ற சந்தர்ப்பம் அப்பொழுது உண்டாகும். நீங்கள், '' நான் அவ்விதம் நோக்கப்பட விரும்பவில்லை; உங்கள் கருத்தை மாற்ற விரும்புகிறேன் '' என்று கூறலாம். அவ்விதம் செய்யும்பொழுது நீங்கள் மற்றவர்களின் அந்தக் கருத்தை ஏற்பவராகவோ, மறுப்பவராகவோ ஆகாமல் இருப்பதுடன் எவரும் பிழை செய்ததாகக் குற்றஞ் சுமத்தாதவராகவும் இருப்பீர்கள், நீங்கள் கூறியது எல்லாம் உங்களைப் பற்றி அவர்கள் எண்ணப்பட்டவாறாக எண்ணப்படுவதை விரும்பவில்லை என்பதுவும், நீங்கள் மாற்றம் ஏற்படுத்த விரும்புகிறீர்கள் என்பதும் தான் ஆகும். அந்த வழிமுறைமட்டுமே கூட உங்களைப்பற்றி மற்றவர்கள் கொண்டுள்ள கருத்தை மாற்ற உதவும்.

இறுதியாக, உங்களின் கீழ் வேலை செய்பவர்களிடம் ஆலோசனை கேளுங்கள். நீங்கள் வேறு எவ்விதமாகச் செயலாற்ற வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் என்பதைக் கேளுங்கள். ஒருபொழுதுமே '' ஆம் '' அல்லது '' இல்லை '' என்று மட்டுமே பதில் வரக்கூடிய கேள்விகளைக் கேட்காதீர்கள். அது நிச்சயமாகக் கருத்துப் பரிமாற்றத்திற்குத் தடையாக அமையும். நீங்கள் ஆம் அல்லது இல்லை யென்று பதிலளிக்கக்கூடிய கேள்விகளைக் கேட்கும்போது ஆட்கள் சங்கடமான நிலையிலிருந்து தப்பிக் கொள்வதற்காகவென்று நீங்கள் சொல்வதனைச் சரியென்று ஏற்றுக்கொள்ளக் கூடும். ஆனால், அவர்கள் தம்முள் உங்களைப் பற்றி ஏற்படுத்திக் கொண்ட கருத்து மாறாமலே தொடரும்.

நீங்கள் மற்றவர்களுக்கு, அவர்கள் உங்களையும், உங்கள் செயற்பாட்டையும் எப்படிக் கருதுகிறார்கள் என்பதைக் கூறச் சந்தர்ப்பங் கொடுக்கும் போது, அவர்கள் அதற்கு ஏற்ற விதமான தங்கள் கருத்தைத் தெரிவிப்பதானது, அவர்களை மிகவும் ஏற்புடைய விதத்தில் வழி நடத்தி அவர்களுடன் வேலைசெய்ய உங்களுக்கு உதவும். அத்துடன் உங்களைப் பற்றிய அவர்களுடைய கருத்தும் கால கதியில் மாறும் ஆனால் ஏற்கனவே நீங்கள் அத்தகைய சுமுக நிலைக்கு மாறாக நடந்திருந்தாலோ, அல்லது அவர்கள் உங்களுடைய நோக்கம் பற்றிச் சந்தேகங் கொண்டிருந்தாலோ, அவர்கள் உங்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை மாற்றிக் கொள்ளக் காலம் எடுக்கும்.

அவர்கள் உங்களை விமர்சிக்கும்போது, நீங்கள் அச்சுறுத்தாத விதமாகவும், சொன்னவற்றிற்கு மாறாக எதிர்வாதம் செய்யாமலும் அவர்களுடைய கருத்தைத் திருத்த முயலாமலும், உங்களுக்கு எதிரான கருத்துக்களைக் கேட்டறியுங்கள். அனைத்திற்கும் மேலாக, நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது பற்றிய இணக்கமொன்று எட்டப் படும் வரை தொடர்ந்து அவர்கள் கூறுவனவற்றுக்குச் செவிசாயுங்கள், பின்பு அதனைச் செய்யுங்கள்.

மற்றவர்கள் உங்களை மறுத்து உங்களைப்பற்றிய அவர்களுடைய கருத்தை மாற்றிக் கொள்ள மறுக்கும் சாத்தியம் எப்பொழுதும் இருக்கும். எனினும், நீங்கள் உங்கள் செயற்பாட்டைப் பற்றிய மாற்றுக் கருத்துகளைக் கேட்க விரும்புபவர் என்று காட்டுவதால் எவ்விதமாகவும் நட்டப்பட மாட்டீர்கள் என்பதுடன் பல விதமாக நயமே அடைவீர்கள். உங்களைப் பற்றிய விமர்சனத்தைக் கேட்டு அறிய விரும்புபவர் என்பதைத் தெரிவிப்பதால் உங்களை அவர்கள் மேலும் விருப்புடன் நோக்குவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

*பயிற்சியும், அபிவிருத்தியும் என்ற அமெரிக்கச் சஞ்சிகையில் மனோவியல் ஆய்வாளரான ஜெரி போம் காட்னர் எழுதிய கட்டுரையொன்றின் சுருக்கம்.*

*வேளட் எக்சிகியூட்டிவ் டைஜெஸ்ட்*
*பெப்ரவரி 1995*

★


## பெரிய சிறப்பு இயல்புகள் சிறிய விலை

*வீட்டில் காரியாலயம் அமைக்க விரும்புகிறவர் இடைவெளியும், நிதியும் போதாமல் இருந்தால் கவலைப் படவேண்டாம். பனசோனிக் கே. எக்ஸ். எஸ். பி 100 என்ற புதிய ஃபாக்ஸ் இயந்திரம் அவர்களுக்கு என்றே செய்யப்பட்டது. சாதாரண கடதாசியிற் பதிவுசெய்யும் (அதற்கென விசேட கடதாசி தேவையில்லை) வெளியேயிருந்து வரும் ஃபாக்ஸ் செய்திகளை அச்சடிக்கும்; பிரதிசெய்யும். செலவு 99' டொலர் மட்டுந்தான். 6.3 அங்குல இடைவெளியில் இதனை வைக்கலாம் இதன் உயரம் 13 அங்குலம், நீளம் 15 7 அங்குலம். அதனுடைய பிரதிசெய்யும் எழுத்தாணி மின்னெழுத்துப்பதிவு எல்ஈடி ஒழுங்கமைப்பு ஒரு டீபீஐ லேசர் அச்சுக்கருவியின் வேலைகளைச் செய்யக்கூடியது கிடைக்குமிடம்: பனசோனிக் தொடர்புச்சாதனங்கள் முறைகள் நிறுவனம், 2 பனசோனிக் வழி, செக்கோக்கஸ், நியூஜேர்ஸி 07094, யூ. எஸ். ஏ.*




பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்துக்குப் பொருத்தமான உணவு

**சில வகையான கொலஸ்ரோல்கள் தேக நலனுக்கு உகந்தவை என்பதை நம்பினால் நம்புங்கள். ஆனால் அதனைப் பெறுவதற்கு உங்கள் வாழ்க்கைப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

*தமிழில் : இளையவன்*

நெஞ்சுவலி, இதய வருத்தம், அல்லது இதயத் தாக்கம் உங்களது வாழ்க்கையை நாசம் செய்துவிடக் கூடும். எதிர் காலத்திலும் உங்கள் வாழ்க்கையின் பகுதிகளாக இவை இருக்க வேண்டுமா? அப்படியானால் உங்கள் உடம்பிலுள்ள கொலஸ்ரோல் சத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

கொலஸ்ரோல் சத்து இரு வகையானது. புரத அடர்த்தி குறைவான கொலஸ்ரோல் அல்லது எல். டி. எல் என்பது ஒரு வகை. இது தான் ஆபத்தானது. இரத்தக் குழாய்களின் உட்புறங்களில் படிந்து முக்கிய வழிகளில் அடைப்பை ஏற்படுத்தும்.

புரத அடர்த்தி கூடிய கொலஸ்ரோல் அல்லது எச். டி. எல் என்பது இரண்டாவது வகை. இரத்தக் குழாய்களிலும், மற்றும் முக்கிய வழிகளிலும் படிந்திருப்பவைகளுக்கு எதிராகத் தொழிற்படுவது இது.

பனை மற்றும் தென்னை உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய மரக் கறி வகைகளில் மாமிச உணவுகளைவிடக் கொலஸ்ரோல் சத்து குறைவாகவே இருக்கிறது. மாமிச உணவு வகைகளைத் தெரிவு செய்வதானால் மீன் முதலாவது தெரிவாக இருக்கலாம். தோல் நீக்கப்பட்ட கோழி மற்றும் கோழிக் குஞ்சுகள் இரண்டாவது தெரிவாகக் கொள்ளப்படலாம். கொழுப்பு நீக்கப்பட்ட பாலுணவுகள் மற்றும் ஆடை நீக்கப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப்படும் யோக்கட், சீஸ், பட்டர்மில்க் போன்றவை அடுத்த இடத்தைப் பெறலாம். பாலுணவுகளில் கொலஸ்ரோல் சத்து பெருமளவில் உண்டு. எனவே அவற்றைத் தவிர்ப்பது அல்லது குறைத்துக் கொள்வது நல்லது. இதில் பால் கெட்டியாக்கப்பட்ட சீஸ், மற்றும் ஐஸ்கிறீம் வகைகளும் அடங்கும்.



*ஜப்பானிய உணவுகளில் கொலஸ்ரோல் குறைவு*

கொலஸ்ரோலின் அளவைக் கட்டுப்படுத்துவதற்குரிய சிறந்த வழி கொழுப்புச்சத்து நீக்கப்பட்ட உணவுகளையும், கொலஸ்ரோல் சேராத உணவுப் பொருள்களையும் உட்கொள்வதாகும். அத்துடன் உங்கள் உடலின் நிறையைப்பேணுவதோடு ஒழுங்கான பயிற்சிகளுக்கு உட்படுவதுமாகும். ஒழுங்கான உடற் பயிற்சி என்பது உடலின் எச். டி. எல் வகையான கொலஸ்ரோலை அதிகரிப்பதும், எல். டி எல் வகை கொலஸ்ரோலைக் குறைப்பதும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. புகைப்பிடித்தலையும் முற்றாகக் கைவிட வேண்டும். புகைபிடிப்பவரிடத்தில் எச். டி. எல் குறைவதும், எல். டி எல் அதிகரிப்பதும் குறிப்பிடத்தக்கது.

கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துவதற்கான முதலாவதும் சிறந்ததுமான வழி உணவைக் கட்டுப்படுத்துவது தான். வெதுப்பிய- வதக்கிய- வேகவைத்த - வறுத்த- அல்லது அவித்த உணவுப் பொருள்கள் நல்ல தெரிவுகளாக இருக்கலாம். பொரித்த- பட்டர் பூசிய- அல்லது எண்ணெய் தோய்த்த உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. இறைச்சி வகைகள்- தானியங்கள் போன்றவற்றை விலக்குவதும் இருதய வருத்தமில்லாமல் வாழ்வதற்கு உகந்தது. சில வகை உணவுகளைக் கீழே காணலாம்.

## இத்தாலிய உணவு

பாஸ்ரா என்பது குறைந்த கொழுப்புடைய, குறைந்த கொலஸ்ரோல் உடைய இத்தாலிய உணவு வகையாகும். சீஸ் மற்றும் இறைச்சி என்பன சேர்க்கப்படாத இடத்து பாஸ்ரா கொலஸ்ரோல் உணர்வுடையவர்களுக்கு விருப்பத்திற்குரிய ஓர் உணவாக இருக்கும். சோஸ் வகைகள் (Sauces) மற்றும் பட்டர் என்பவைகளை உள்ளடக்கிய இத்தாலிய உணவு வகைகளில் இருந்து விலகியிருப்பது நல்லது. இந்தச் சோஸ் வகைகளில் மாரினாராவும், ( தக்காளி, வெங்காயம், மற்றும் உள்ளி என்பவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவது) மார்சாலாவும் (முந்திரி ரசம் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவது) சுவையானதாகவும், குறைந்த அளவில் கொழுப்பு உடையதாகவும் இருக்கும். சிவப்பு அல்லது வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்திலான லிங்தனி இத்தாலிய உணவுகளில் குறைந்த கொழுப்புச் சத்துக் கொண்டதாகும்.

### சீன உணவு

கொதி நீராவியில் வேகவைத்த அல்லது மரக்கறி எண்ணெயில் வாட்டிய சீன உணவுப் பொருள்கள் இருதய வருத்தத்திற்குப் பொருத்தமான திறமான உணவு வகைகள். ஆனால் லொப்ஸ்ரர் சோஸ் (Lobster Sauce) மற்றும் வகைகளைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் நன்கு வறுக்கப்பட்டு ஹீனான் மற்றும் செச்சுவன் பாணியில் பரிமாறப்படும் இறைச்சிகளையும் விலக்க வேண்டும்.

### ஜப்பானிய உணவு

எண்ணெய் கலந்து அவிய வைக்கப்படும் யக்கிமொனோ (Yakimono) உணவும் ஒரு நல்ல தெரிவாகும். சசிமி( Sashimi ) மற்றும் சுசி (Sushi) உணவுகள் குறைவான கொலஸ்ரோலையும், குறைவான கொழுப்புச் சத்தையும் கொண்டவையாகும். குறைவாக கொலஸ்ரோலைப் பேண விரும்புபவர்களுக்கு ரெம்புறா (Tempura) தவிர்ந்த ஏனைய ஜப்பானிய உணவு வகைகள் சிறந்த தெரிவாக இருக்கும்.

### மெக்சிக்கன் உணவு

டோர்டில்லா சிப்ஸ் (Tortilla Chips) மற்றும் றீபிறைட் ( Refried Beans) பீன்ஸ் தவிர்ந்த ஏனைய மெக்சிக்கன் உணவு வகைகள் யாவும் குறைவான கொலஸ்ரோலைக் கொண்டவையாகும். இந்த இரண்டும் எண்ணெய் சேர்க்கப்படுவதால் பெருமளவு கொழுப்பையும், கொலஸ்ரோலையும் கொண்டதாகும். புறிரோஸ் ( Burritos ) என்பதும் ஒரு நல்ல உணவாகும். இது பொரிக்கப்படுவதில்லை.

### பிரெஞ்சு உணவு

பல தரப்பட்ட பிரெஞ்சு உணவு வகைகள் உள. இவற்றில் வேகவைத்த கோழிக் குஞ்சு, மீன் போன்றவையும் உண்டு. இவை கொழுப்புக் குறைந்த உணவுகளாகும். முந்திரி இரசத்தில் வேகவைத்த பிரெஞ்சு உணவு வகைகள் சுவையாகவும், குறைந்த கொழுப்புச் சத்து உடையவையாகவும் இருக்கும். எனினும் Nouvelle Cuising அல்லது Nouvelle Sauces என்பவை கலோரிப் பெறுமானம் குறைந்தவையாகும்.

நன்றி
வேர்ள்ட் எக்ஸிகியூடிவ் டைஜஸ்ட்
ஜூன் 1995

*

## சீனாவின் கண்டம் கடந்து நெடுந்தூரம் பாயும் ஏவுகணைகள்

**'இந்தவகை ஆயுதத்தயாரிப்பை அமெரிக்கா நிறுத்திவிட்டது; ஆனால் சீனா மும்முரமாக ஈடுபட்டுள்ளது.**

இவ்வருட மே 29 ஆம் நாள் சீனாவின் மேற்கு சின்ஜியாங் தளத்திலிருந்து ஈஸ்ற் வின்ட் 31 (கிழக்குக்காற்று 31) என்ற ஏவுகணை சீனாவால் செலுத்தப்பட்டுள்ளது. மத்திய ஆசியாவின் பாலைவனப்பிரதேசத்தின் மேலாக 2000 கி.மீ பறந்த இந்த ஏவுகணை ஆசியநாடுகள் உட்பட உலகின் பாதுகாப்பு ஆலோசகர் யாபேரையும் உலுக்கியுள்ளது. இந்த ஏவுகணை 8.000 கி.மீ வரை பறந்து தாக்கவல்லது. 700 கிலோ நிறையுள்ள அணு ஆயுதத்தையும் காவுந்திறன் அதற்கு உண்டு இந்த நூற்றாண்டு முடியுமுன் 12.000 கி மீ வரை செல்லும்வகையில் ஈ. வி 31 திருத்தி அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

சீனர்கள் வடிவமைத்த இந்த ஏவுகணையின் எரிபொருள் வித்தியாசமானது. இதற்குமுன் அவர்கள் தயாரித்து வைத்திருக்கும் தூரம் பாயும் ஏவுகணைகள் யாவும் திரவ எரிபொருளில் இயங்குபவை, புதியது திடஎரிபொருளில் இயங்கவல்லது. ஆகவே புதியதை வாகனத்திற் பூட்டி எளிதாக இடம் மாற்றலாம் செய்மதிமூலம் அது வைக்கப்பட்டிருக்கும் இடத்தை வேவு பார்ப்பது கடினம். காலப்போக்கில் அதை நீர்மூழ்கிக்கப்பலிற் பொருத்திக் கடலடிக்கும் எடுத்துச்செல்லலாம். நீர்மூழ்கிக் கப்பலில் பொருத்தப்பட்டபின் ஏவுகணையின் இருப்பிடத்தை நிர்ணயம் செய்வது மிகக் கடினமாகிவிடும்,

வடக்கு அமெரிக்காவின் கிழக்குக் கரை நகரங்களான சான் பிரான்சிஸ்கோ. லொஸ் ஏன்ஜலஸ் போன்றவற்றைத் தற்சமயம் இந்த ஏவுகணையால் எட்டமுடியாது. ஆனால் அலஸ்காவையோ மேற்கு ஐரோப்பாவையோ அதனால் தொடமுடியும். சோவியத் ருஷ்ய வீழ்ச்சியின்பின் இந்த வகை ஆயுதத் தயாரிப்பையும், தடுப்பு ஒழுங்குகளையும் அமெரிக்கா நிறுத்திவிட்டது. இப்போது மீண்டும் ஆராய்ச்சியும். தயாரிப்பும் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு உண்டு. அதுமாத்திரமல்ல தாய்லாந்து, ஜப்பான் போன்ற நட்பு நாடுகளுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு அமெரிககாவுக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியப்பூட்டும் காதல்: சினாய்க கடலில் 'உள்ளினு'டன் உறவாடும் அப்துல்லா.

மனித, மீன் நட்புப் பற்றிய மனத்தை நெகிழவைக்கும் உண்மைக்கதையொன்று.

# டொல்பின் ஒன்று, இரண்டு மனிதர்கள் மீது அளவற்ற அன்பு காட்டுகிறது.

தமிழில்: திரு. கிருபைராஜா

விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலும், வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த இரண்டு விலங்குகளுக்கும் இடையிலும், அன்பான நட்பு நிலவியது பற்றிய பல உண்மைக்கதைகள் உள்ளன. இதுவும் அத்தகைய, ஆனால் அரிதான பாசமும், நேசமும் மிக்க நட்புப் பற்றிய கதையாகும். கடலிலே சுதந்திரமாக வாழும் டொல்பின் ஒன்று குறிப்பிட்ட இரண்டு மனிதர்களுடன் மட்டும் நெருங்கிய நட்புக் கொண்டாடுகிறது.

டொல்பின்கள் மூளைத்திறன் மிகுந்த விலங்கினம் என்பதும், அவற்றைப் பிடித்து தொட்டிகளில் இட்டு வளர்த்து மனிதர்கள் சாகச விளையாட்டுக்கள் செய்யப்பழக்கி உள்ளதும் அறிந்த ஒன்றாகும். ஆனால் இந்தக் குறிப்பிட்ட பெண் டொல்பின் அப்படிப் பிடித்து வளர்க்கப்படும் ஒன்றல்ல. அதற்குப் பரந்த பெரிய செங்கடலில் எங்கு வேண்டும் என்றாலும் சுதந்திரமாகத் திரிந்து வாழமுடியும். எகிப்தின் சினாய் பாலைவனத்தின் செங்கடல் ஓரத்தில் உள்ள வழமையாக உல்லாசப் பயணிகள் வந்து போகும் சிறுநகர் ஒன்றான நுவைபாவின் தெற்குப் புறத்தில் வாழும், படிப்பறிவு அற்ற 22 வயதான கிராமத்தவன் ஒருவனான அப்துல்லா என்ற மீனவனுடனும், அவனுடைய சகாவான ஊமையும் செவிடுமான மொசுமட்டுடனும் மட்டுமே அது மிகவும் அன்னியோன்னியமான நட்புப் பாராட்டுகிறது. அந்த அப்துல்லா அது பற்றிக் கூறும்போது; 'அது என்னை நேசிக்கின்றது! நான் விட்டுப் பிரிந்துபோகும் போது ...' என்று சொல்லி அதற்கு மேல் சொல்ல முடியாத உணர்ச்சிவசத் ததும்பலால் தத்தளிப்பவனாக, அது கண்ணீர் விடுகிறது என்பதைத் தன் விரல்களால் தனது கன்னத்தைத் தடவி சைகைமூலம் காட்டுகிறான்.

எப்பொழுதாவது அந்த டொல்பின் ஒரேயடியாகப் பிரிந்து போய் விட்டால் அப்துல்லாவும் துக்கத்தால் கதறி அழுவான் போல் தெரிகிறது. அப்துல்லாவுடன் நட்புக் கொண்டாடும் அந்தக் கடல்வாழ் முலையூட்டி அவனுடைய வாழ்க்கைச் செலவுக்குப் பணம் கிடைக்கவும் வகை செய்துள்ளது. அண்மையிலும், தொலைவிலும் இருந்தெல்லாம் அந்த அதிசயநட்பைக் காண வருவோர்களிற் சிலர் கடலில் அப்துல்லாவுடனும், மொசுமட்டுடனும் நீந்திச் சென்று அந்த டொல்பினுடன் அவர்கள் நட்புக்கொண்டாடுவதைப் பார்ப்பதற்காகக் காசு கொடுக்கின்றனர். அதன்மூலம் கணிசமான தொகை சேர்கிறது.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு அந்த டொல்பின் அப்துல்லாவுடனும், அவனுடைய சகாவுடனும் கடலிலே வைத்து நட்புப்பூண்டு அப்துல்லாவின் வீட்டிற்கும் சென்று வந்தது.

அதுமுதல் அந்த அதிசயநட்பு ஊரவர்களுக்குத் தெரியவந்து பிரபல்யம் உற்றது. நுவைபாவின் சுற்றுலாப் பயணிகள் விடுதி நடத்துவோர் அந்த நகருக்குத் தெற்கே உள்ள இந்த டொல்பின் வந்து நடமாடும் கடற்கரையில் வந்து குவியும் சுற்றுலாப் பயணிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் வசதியாக டொல்பின் கபே என்ற பெயரில் சிற்றுண்டிச்சாலையொன்றும் திறந்து கடற்கரையிலே வட்டமான கூரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட புல்வேய்ந்த நிழல் விதானங்களும் அமைத்து உழைப்பு நடத்துகின்றனர்.

அந்தக்கடற் பகுதிக்குள் அப்துல்லா வந்து நீரில் இறங்கியதும், உடனே அந்த டொல்பினும் அங்கு விரைந்து வந்து அவனைச் சுற்றிவருவதும், அவன்மீது பரிவோடு உராசுவதும், அவனுடைய நெஞ்சிலும் முதுகிலும் தாவித் தனது உடலால் அவனை அணைத்துக் கொள்வதுமாக அதனுடைய தோழமையைக் காட்டி மகிழ்கிறது. அவன் அதனைத் தன்கைகளால் அணைத்து அன்பாகத் தடவிவிடுகிறான். ஆனால் அங்கு வரும் பலநாடுகளைச் சேர்ந்த உல்லாசப்பயணிகள் எத்தனைதான் அன்போடு தடவிவிட்டாலும் அது அப்துல்லாவையும், மொகமட்டையும் தவிர வேறு எவரையும் அத்தனை பொருட்படுத்துவதாக இல்லை.

அப்துல்லா அந்த டொல்பினின் தாடையைத் திறந்து பிடிக்க அதன் வாயினுள் பார்வையாளர்களாக வருபவர்கள் எவரும்கையை வைத்தால்கூட அது நல்ல புரிந்துணர்வோடு எவ்வித தீங்கு செய்யாமல் விட்டுக்கொடுக்கிறது. அப்துல்லா நீருக்குள் அதனைத் தேடிவந்ததும் அது ஏகாந்தமான குதூகலங் கொள்வது போலவே தெரிகிறது.

இந்த டொல்பினின் செயலையிட்டுப் பல ஊகங்கள் எழுந்துள்ளன. இது தனது இணையனை அல்லது குட்டியை ஏதும் வலையில் அகப்பட்டுப் போனதால் இழந்திருக்கலாம், அல்லது இதனையே அப்படி அகப்பட்டுத் தத்தளித்த போது யாராவது காப்பாற்றி விட்டிருக்கலாம் என்றெல்லாம் ஊகிக்கப்படுகிறது. (முற்பிறவி மறுபிறவி பற்றிய நம்பிக்கையுள்ள மதங்களைச் சார்ந்தோர் அந்தக் கோட்பாட்டின்படி இது நிகழ்வதாகக் கருதக்கூடும்)

இஸ்ரேலைச் சேர்ந்த நிபுணர் ஒருவரான மாயா சில்பர் என்பவர் இந்த டொல்பினின் வயதை 24 என்று மதிப்பிட்டுள்ளார். (டொல்பின்கள் 40 வயது வரை வாழும் என்று விலங்கியலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.)

## தனிச்செய்தியனுப்ப

இரு மைல்களுக்குள் இருக்கும் ஒருவருக்கு இருபக்கச் செய்தி ஒன்றை அனுப்ப விரும்புகிறீர்களா? 'பிறைவேற்பேஜ்' சிஸ்ரம் என்ற தனிச் செய்தியனுப்பும் முறையில் 2 எண்வரிவடிவக் கூற்றுச் சொற்கோவையாகச் செய்தியனுப்பும் வசதி இப்போது கையிற் கொண்டு போகும் சிறு கருவி மூலம் கிடைத்துள்ளது. 7 வோற் மின்வலுவில் இயங்கும் தளநிலையம் இருபக்கச் செய்திகளை அனுப்பும். 100 கடிதங்கள் இப்படி அனுப்பலாம். இதன் விலை 230 டொலர். கிடைக்குமிடம்: கொமரின்ட் கொமியூனிக்கேஷன்ஸ், கொமாண்ட் சென்ரர் 10800 பெதானிடி ஆர், ஒரோரா கொலரடோ 80014.

## புதிய நுட்பமான புகைப்படக்கருவி

கனன் ஒளிப்படக்கருவி தானே குவியத்தைத் தூரம் குறைத்துக் கூட்டிச் சரிசெய்ய வல்லதாக அமைந்த முந்திய வரிசை 35 எம் எம் எஸ் எல் ஆரின் பெயர் 'ஈ ஓ எஸ் ஐ'. இப்பொழுது அதற்கு அடுத்த புதுமையான 'கமரா' வெளிவந்துள்ளது. 'ஈ ஓ எஸ் ஐ என்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது புகைப்படக் கலைஞர்களுக்கென்றே சிறப்பாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

5 கோலங்களில் ஏதாவது ஒன்றை நோக்கிக் குவியத்தைச் சரிசெய்யலாம். அதிர்ச்சியைத் தாங்கக் கண்ணாடியையும் பூட்டி விடலாம். இதனுடன் இணைக்கப்படும் 540 ஈ ஸற் ஒளி வீச்சுக் கருவி செக்கனுக்கு 100 பிரகாசம் பாய்ச்சவல்லது. விலை நிர்ணயிக்கப்படவில்லை.

டொல்பினைக் காண அருகிலே நீந்திவருபவர்கள் அதற்கு உரோஞ்சு காயம் ஏற்படுத்தக் கூடிய அணிகலன்களையோ நீச்சல் உபகரணங்களையோ தரித்துக்கொண்டு வரவிடாமல் தடுக்கப்படுகிறார்கள். அத்துடன் ஒரேநேரத்தில் கடலில் இறங்கி அருகில் வருவோர் தொகையையும் கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால் சில சுற்றுலாப்பயணிகள் விடாக்கண்டர்களாக அதற்கு எதிராக நடந்து கொள்வதும் உண்டு. அண்மையிற் பல சுழியோடிகள் அந்த நீர்வாழ் விலங்கைச் சுற்றி நின்றபோது அது அவர்களை விலத்திக் கொண்டு வெளியேற முற்பட்டபோது சுழியோடி ஒருவரின் சுவாச வாயுக் கலனில் முட்டிக் கீறல் காயம் ஏற்பட்டது. அந்தக் காயத்திற்குப் பூசவென இஸ்ரேலிய நிபுணர் ஒருவர் அனுப்பிய களிம்பு மருந்தொன்றை அப்துல்லாவும், மொகமட்டும் பூசிச் சுகப்படுத்தினர்.

அந்த டொல்பினுக்கு அப்துல்லா 'உள்ளீன்' என்று செல்லப்பெயர் வைத்து அழைக்கின்றான். அப்துல்லாவும், மொகமட்டும் கணவாய்களைப் பிடித்து உள்ளீனுக்கு ஊட்டினாலும் அது தனது உணவுத் தேவைக்காக அவர்களை நம்பியிருப்பதாக இல்லை.

டொல்பின்கள் பற்றிய நிபுணரான சில்பர் கூறுகிறார்; 'இந்த டொல்பினுக்கு, தான் விரும்பும்போது விட்டுவிட்டுப்போகமுடியும் ஆனால் அது இன்னும் அங்கேயே நிற்கிறது. தன்னினத்து விலங்குகளைத் தேடிப் பரந்த கடலில் போகாமல் இருப்பது அதன் பிற்காலத்திற்கு அவ்வளவு உகந்ததல்ல. ஆனால் அதனை யார் எப்படி அதற்குக் கூறி அறிவுறுத்த முடியும்?'

நியூஸ்வீக் மே 22, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருவகாலம் பற்றிய நுண்ணிய முன்னுரைத்தல்:

## ஒரு புதிய செய்மதி விரைந்து புயல் எச்சரிக்கைவிட வாய்ப்பளிக்கிறது.

*தமிழில்:* காவல் நகரோன்

நாம் எல்லோரும் ''ச்சூ என்ன வெயில்'' என்றோ, ''என்ன புயல் வரும் போலிருக்கிறதே'' என்றோ காலநிலையைப் பற்றி ஏதாயினும் உரையாடுகிறோம். ''இனி என்ன நிகழுமோ?'' என்ற வினா எம் உள்ளத்தில் துடிக்கும். சென்ற ஆண்டு ஒரு புதிய இனச் செய்மதி (செயற்கை உபகோள்) காலநிலை அறிவிப்புக்கு ''ஜி. ஓ ஈ. எஸ்.'' என்ற பெயரில் புவியைச் சுற்றி வர விடப்பட்டது. புயல், காற்று, அமுக்கம் முதலிய வளிமண்டல மாற்றங்களைத் தேடி அறிந்து புவியிலுள்ளார்க்கு அறிவிக்கும். அதனால் தொலைத்தொடர்புச் சாதனங்களில் காலநிலை எச்சரிக்கைகள் நிச்சயமாகச் சொல்லக் கூடிய வாய்ப்புக் கிட்டும்.

அமெரிக்க தேசிய சமுத்திர வளிமண்டல நிர்வாகத்துறையினர் விண்ணுக்கு ஏற்றிய புதிய வகுப்பைச் சேர்ந்த செய்மதியாகிய ஜீ. ஓ. ஈ. எஸ். -8 இன் நிறை 4641 இறாத்தல். அதன் அமைப்பில் 3 அச்சுப்போன்ற பகுதிகள் துருத்திக் கொண்டு நிற்கின்றன. முன்னர் செய்த சுழலும் செய்மதிகள் போலன்றி இப்புதிய அமைப்பால் அச்செய்மதி தடம் புரளாமல் அமைதியாக விண்ணில் சுற்றி வரும். அதன் இயக்கம் 1 கலனுக்கு 7. 1 மில்லியன் மைல்கள். விண் வெளிப் பாதைகளில் இவ்வளவு வேகமாகச் சுற்றி வரும். அதனால் இது போட்டிக்கு நிற்கும் பிறவற்றினும் சிறந்தது. இதை உற்பத்தி செய்தோர் இது 5 வருடம் நிச்சயமாக வேலை செய்யும் என்று பொறுப்பு நிற்கின்றனர். ஆனால் அதில் உள்ள சக்தி அது ஏழாண்டு வேலை செய்யப் போதுமானது. அதிலிருந்து 15-வரை (பான்ட்) வானொலிச் செய்திகளைச் சர்வ தேச உயர் அதிர்வுகளிலும் (யூ எச். எஃப்) எஸ்-பான்ட் அதிர்வுகளிலிருந்தும் செய்தியை அனுப்பும். குளிர்கால நிலையில் பயன்படுத்துவோர் அதன் மின் கலங்கள் (பற்றறி) நிக்கல்-கட்மியம் இரட்டை உலோகத்தால் பாதுகாக்கப் பட்டிருப்பதைக் கண்டு மகிழ்வர். அவற்றின் மின்சக்தி 12-அம்பியர்-மணி, 105. 7 வாற் சூரியசக்தி மின் உற்பத்தி செய்ய அவை பயன்படும். இச்செய்மதி சுமந்து செல்லும் கருவிகள் புவியினதும், விண்வெளியினதும் வளிமண்டலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை எடுத்துச் சொல்லத்தக்க 3 பெரிய இயந்திரங்களாகும்.

வானவெளியில் இப்போது உலவும் செய்மதிகள் 1970 களில் செய்யப்பட்ட (மொடல்) வகையின. புதிய கார்வகை வந்ததும் பழைய மொடல்கள் பயனற்று விலக்கி வைக்கப்படுவது போலவே இத்துறையிலும் இப்புதிய மொடல் முன்நிற்கும். உற்பத்தியாளர் இதற்கு 220 மில்லியன் டொலர் விலை குறிப்பிட்டார்.

ஜீ. ஓ. ஈ. எஸ். என்பதன் விரிவு புவி நிலைத்துள்ள செயல் திட்ட சூழல் முறை (ஜியோ-ஸ்ரேஷனறி ஒப்பரேஷனல் என்வயர் மென்றல் சிஸ்ரம்ஸ்). அது எம் அன்றாட வாழ்வில் பிரிக்கமுடியாத ஓர் அம்சமாய் விட்டமையால் நாம் அதைப் பெரிதுபடுத்தாமல் சாதாரணமாக்கி விடுகிறோம். புவியைச் சுற்றும் ஜி. ஓ. ஈ. எஸ் செய்மதிகளிலிருந்தே நாம் தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் தினந்தோறும் பார்க்கும் காலநிலை மாற்றத் தோற்றங்கள் பெறப்படுகின்றன. அவை நடுக்கோட்டுக்கு மேலே தமது உன்னத நிலையில் 35, 888 கி. மீ. (22. 300 மைல்) உயரத்திலிருந்து புவியைப் பார்த்துச் சுழல்காற்று, மழை அமுக்கத்தின் மையமும், அசைவும் போன்ற விபரங்களை இங்கு அனுப்புகின்றன.

ஜீஓஈஎஸ்-8 இல் உள்ள 3-அச்சு அதனை இஸ்திரமாக உலாவச் செய்யும் அமைப்பு முறை இதற்குமுன் விண்ணில் உலாவும் ஜீஓஈஎஸ்-7 என்ற சுழல் (பம்பர) முறையில் அமைந்த (இஸ்திரத் தன்மையை உடைய) விண்வெளிக் கலத்தினும் சிறப்பாக அமைந்தது. முந்திய ஜீஓஈஎஸ் -7 இன் உணர் உறுப்புக்கள் பூமியை நோக்குவது அதன் சுழற்சி நேரத்தின் 5 வீத கால அளவுக்கு மட்டுமே. ஏனெனில் அவ் விண்வெளிக்கலம் எப்போதும் சுழன்று கொண்டே புவியை வலம் வரும். அதனோடு ஒப்பிடுகையில், ஜீஓஈஎஸ்-8 எப்போதும் பூமியை நோக்கியபடியே வலம் வரும். அதனால் தொடர்ந்து அவதானங்களைப் பிரதிபலிக்க வாய்ப்பு உண்டு.

இதைவிட ஜீஓஈஎஸ்-8 இன் உருவாக்கி புவியின நிழல் உருவங்களைச் சிறந்த, தெளிவான முறையில் ஆக்கவல்லது. அதன் ஒலியான (சவுண்டர்) வெப்பநிலை அளவீடுகளை வெவ்வேறு உயரத்திற்கேற்ப கணிக்க வல்லது. இவைகளை ஏககாலத்தில் பயன்படுத்தும் வாய்ப்பு உண்டு. ஜீஓஈஎஸ்-7 ஒரு கருவியை மட்டுமே ஒரு முறைக்கு உபயோகிக்கும் ஆற்றல் உடையது.

இப்புதிய செய்மதியிலுள்ள மிக முக்கியமான கருவி உயர்கூறுபாட்டுச் சிதைவு வானொவிமானியே, இது இவ்விண்வெளிக் கலத்தின் புகைப்படக் கருவியாகும். அதிலுள்ள புதிய நிழற் படிவுக் கருவியில் பூகோளத்தின் சரிபாதி முழுவதும் விம்பமாகி விழும். அதனால் ஒரு கோளத்தில் கவிந்துள்ள மேகங்கள் அப்படியே துலக்கமாக விழும். அல்லது மேகங் குழுமியிருப்பதற்குப் புறம்பாகப் புயல் வரக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கண்டு அறிவிக்கும்.

முன்னர் கட்டிய ஜீஓஈஎஸ் கலங்களிலும் இஸ்திரமான கட்டமைப்புடையது. இந்த முறைபடைத்த கலம் புயல்களை முன்கூட்டியே வெகு நுட்பமாக அறிவிக்க வல்லது. ஒரு பிரதேசத்தில் புயல் மையம் கொண்டு கடுமையாகும் போலத் தோன்றினால் அங்குள்ள வானிலை ஆய்வு அதிகாரிகள் மேலும் விபரமான செய்திகளை இக்கலத்திலிருந்து பெற முடியும். இதனால் எந்த நிலப் பரப்பிலிருந்து மனிதரை வெளியேற்றப் பாதுகாப்பான இடங்களுக்குப் போகும்படி அறிவித்தல் கொடுக்கலாம். நிழலாக்கிக் கருவியின் திறமையால் 4 கி மீ (2.5 மைல்) பிரதேசத்தில் சிவப்புக்கு அப்பாற்பட்ட கட்புலனாகாத ஒளிக்கதிர்களின் கூறுபாட்டுச் சிதைவை (றெசொலுயூஷன்) 1024 சாம்பல் நிறச் செதில்களின் மூலம் காட்டும். இது முந்திய ஜீஓஈஎஸ்-7 இன் விம்பமாக்கியின் 64 சாம்பல் ஒளிநிழல் இயைபுநயத்தினோடு (கிறேரோன்) ஒப்பிடுகையில் மிக நுட்பமானதே. வானியலாய்வாளர் முதலிற் கூறிய நுட்பமான ஒளிக்கதிர்க் கூறுபாட்டுச் சிதைவைக் கொண்டு பதியப்படும். ஒளிநிழல் இயைபுப் படங்களிலிருந்து புயல் விபரங்களைத் திரட்டுவதே சுலபமானது எனக் கருதுகின்றனர். அத்துடன் விம்பங்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருப்பதிலேயே புயல் எத்திசையில் செல்லும் என வழிகண்டு எச்சரிக்கை செய்யும்போது முழுதாகச் சரியாகச் சொல்ல முடியும் என்கின்றனர். இதனால் புதிய கருவியனுப்பும் நிழற் படங்களிலிருந்து நம்பகரமான காலநிலை அறிவித்தல்களையும், எச்சரிக்கைகளையும் செய்ய முடியும்.

அக் கலத்திலுள்ள வேறு கருவிகள் வருமாறு: ஒரு மீவிசும்பு ஆய் கருவி (சவுண்டர்) வெப்ப நிலை மாற்றங்களைக் கோடிட்டுக் காட்டக்கூடியது. மற்றொரு விண்வெளிச் சூழல் கண்காணிப்புக் கருவி பூமியின் காந்தப் புலத்தை அளந்து அறிவதோடு, சூரியனில் ஏற்படும் குழப்பங்களில் காலநிலையைப் பாதிக்கக் கூடியவற்றையும் அளந்து கூறும். காலநிலை முன் அறிவிப்புடன் தொடர்பு இல்லாத மற்றொரு பணியையும் இப்புதிய செய்மதி ஆற்றவல்லது. ஒரு விமானமோ, கப்பலோ செயலிழந்து விழுந்தோ, ஆழ்ந்தோ போகும் நிலையில் அது அனுப்பும் குறிச் செய்திகளை (சிக்னல்) தேர்ந்தெடுத்து அறிவிக்கும். அதனால் அவைகளுக்கு உரிய நேரத்தில் உதவி வழங்க வாய்ப்பு உண்டாகும்.

ஜிஓஈஎஸ் செய்மதிகள் மிகச் சிறந்த முழுப் புவி உருண்டையையும் உள்ளடக்கிய பிம்பங்களைத் தினசரி காலநிலை அறிவிப்புக்கு ஆக்கித் தருகின்றன. எனினும், தொடர்ந்து நீண்டகாலப் பகுதிக்குரிய கால நிலை அறிவிப்புக்கு இன்னும் உயர் ஒளி நிழல் இயைபுப் படங்கள் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிஓஈஎஸ் - 8 மட்டுந்தான் விண்வெளியில் உலாவி வரும் கால நிலை அறிவிப்புப் 'பறவை' என்று கருதலாகாது. அமெரிக்க தேசிய சமுத்திர, வளிமண்டல நிர்வாகம் துருவங்களை அண்மித்துப் பதிவாகச் சுற்றும் இரண்டு செய்மதிகளையும் கடமையில் ஈடுபடுத்தி வைத்திருக்கிறது. இவை பூமியில் ஒரு குறித்த இடத்துக்கு மேலே காலை, பிற்பகல் ஒரே நேரத்தில் பறக்கக் கூடிய விதமாக அவற்றின் சுழற்சி நேரம் இசைவாக்கப்பட்டுள்ளது.

ஜிஓஈஎஸ் ''பெரும்படம்'' எடுக்கும் செய்மதி; முழு உலகத்தின் காலநிலை அமைப்பை ஒட்டு மொத்தமாகக் கணிக்கும் ஆற்றல் வாய்ந்தது. மேற்சொன்ன தே.ச.வ. நிர்வாகத்தின் தாழப் பறக்கும் இரு செய்மதிகளும் ஒரு சிறு பிரதேசத்தின் படங்களை விபரமாகப் பதிய வைக்கும். இரு அமைப்புகளும் ஒன்றுக்கொன்று குறை நிரப்பிகளாகச் செயற்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி வேறுபட்ட காலநிலை முன் அறிவித்தற் கருமங்களுக்கு உதவுபவை.

நிலத்தில் அமைக்கப்பட்ட கருவிகளைக்கொண்டு, மரபுவழியாகக் காலநிலை முன்னறிவித்தல் தரும் முறையிலும் பல கணிசமான அளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பாக எடுத்துக் காட்டக் கூடியது, தே. ச. வ. நிர்வாகத்தின் புதிய டொப்ளர் ராடர் (சேணளவி) முறைகள் என்பதாகும். ஆற்றல் வாய்ந்த மின்காந்த அலை அதிர்வு இயக்கத்தைக் கொண்டு நிலத்திலிருந்து வானத்தில் மிதக்கும் முகில்களுக்குச் சென்று திரும்பும் (ராடர்) சேணளவி அதிர்வு எண் கணிப்பின் மூலம் எத்திசையில் அம் முகில்கள் செல்கின்றன என்பதைச் சரியாகக் கூறுகின்றனர். டொப்ளர் சேண் ஒலி மாற்றம் செயற்படுவதற்கு உவமை கூறினால், ஒரு புகை வண்டியின் ஊது குழல் ஒலி, அது நீர் நிற்கும் திசை நோக்கி வருகையில் எவ்விதமான மாற்றங்களைச் செவியிற் படவைக்கும் என்பதைச் சுட்டிக் காட்டலாம். பிழையான நிறத்தில் டொப்ளர் ராடர் விம்பங்கள் தெரிந்தால் எத்திசையிற் காலநிலை மாறுகிறது என்பதை நிச்சயமாகப் புரிந்து கொள்ளலாம். மரபுவழி ராடர் கருவிகள் புயல் மையங் கொண்டுள்ள பிரதேசங்களை மட்டுமே காட்டும்.

காலநிலை முன்னறிவிப்பின் உயிர்நாடியான அம்சம் பொது மக்களுக்கு ஆபத்து நிலைகளை உடனுக்குடன் அறிவிப்பதுதான். இப்பொழுது ஒவ்வொருவரும் தமக்கெனக் கால நிலைச் செய்மதியின் விபரங்களைப் பெறும் 'வானொலி / தொலைக்காட்சி' ப் பெட்டி போன்ற கருவியை வாங்கி வீட்டில் பூட்டி விடலாம். எனினும், சாதாரண மக்கள் பத்திரிகை வானொலி, தொலைக் காட்சிச் சேவை மூலமே இப் புதினத்தை அறிகிறார்கள். அமெரிக்கத் தேசிய காலநிலைச் சேவை என்ற நிறுவனம் உள்ளூர்ச் சிறு சமூகங்களுக்கு (ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் குடியிருப்புகளுக்கு) உடனுக்குடன் காலநிலை எச்சரிக்கை வானொலி

## உள்நாட்டில் புயல் எச்சரிக்கை

ஜி. ஓ. ஈ. எஸ். - 8 விண்வெளியிலிருந்து காலநிலையை அவதானிக்கிறது. அதேவேளை நிலத்தில் அமைக்கப்பட்ட பல புதிய கருவிகள் காலநிலையைக் கண்காணிக்க என்றே ஆக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு சூறைப்புயல்கள் எழுவதற்கு முன் எச்சரிக்கை செய்யும் புதிய தயாரிப்பு 'இறுதி இடையறாவிழிப்பு' எனப்பெயர் உடையது மிசிசிப்பிப் பல்கலைக்கழகப் பௌதிகவியல் அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்ட இது சூறைப்புயல்கள் தூண்டிவிடும், அவற்றிற்குரிய தனிப்பண்புடைய அலை அதிர்வு அல்லது தொனிச்செறிவைக் கண்டுபிடிப்பதன் மூலம் செயலாற்றுகிறது. இதனை வீட்டின் தென்மேற்குக்கூரை மூலையில் பொருத்திவிட்டால், அது கட்புல, செவிப்புல எச்சரிக்கையைக் காட்டும். இக்கருவியின் விலை 139 டொலர். ஜோர்ஜியா மாநிலத்தில், பீச் மாநகரில் உள்ள கே. பி. ஏ. நிறுவனம் இதனை விற்கிறது.

முதலாவது இலத்திரனியல் முன் உரைக்கும் வளி அமுக்கமானி எனக்குறிக்கப்படும், பொதுக்காலநிலை முன்னுரைக்கும் கருவி ஒன்றின் பணியாகும். இதனைச் செய்து முடித்த நிறுவனம் ஒரிகோன் மாநிலத்தில், போட்லந்து நகரிலுள்ள ஒரிகோன் விஞ்ஞான அமையம் என்பதாகும். பி. ஏ – 212 என்ற இக்கருவி 25 மைல் பரப்பளவுக்கு வளி அமுக்கமானியின் ஏற்ற, இறக்கங்களைக் கொண்டு 75 வீதம் சரியான முன்னறிவித்தல்களைத் தரும் என உரிமை கோருகின்றனர் அதனை ஆக்கியோர்,

மேசையில் வைக்கக்கூடிய இக்கருவி தூக்கிச் செல்லும் சிறு வானொலிப் பெட்டி அளவினது; அதில் ஐந்து காலநிலைக் குறியீடுகள் உள. உள்வீட்டு, வெளிநிலை வெப்பம், நேரம் எல்லாம் குறித்துக் காட்டவல்லது. புயல் எச்சரிக்கை காதாற் கேட்கக்கூடிய அபாய ஒலி மூலந்தரப்படும். இதன்விலை 90டொலர்.

ஜி. ஓ. ஈ. எஸ் – 8 உடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்த விரும்பினால் ஒரு கணனி மூலம் அதனைச் செய்யலாம். மிக உயர் அலை அதிர்வு (வி. எச். எஃப்) வானொலிப் பெட்டி ஒன்றை மட்டும் வாங்கி, 400 டொலர் மூலதனமிட்டால் போதும் கணனித் தொடர்புச்சேவை நிறுவனங்கள் செய்மதிகளிலிருந்து கிடைக்குந் தரவுகளைக் கொண்டு கணிக்கப்படும் காலநிலை அறிக்கையைத் தொலைக்காட்சி இரசிகர்களுக்கு வழங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல்கள் எட்டும்படி செய்யப் பெரிதும் முயல்கிறது. இப்பொழுது அமெரிக்கச் சனத்தொகையில் ¾ பகுதியினர், வானொலி மிக உயர் அலை அதிர்வு (வி. எச். எஃப்) வானொலிச் செய்தி மூலம் உடனுக்குடன் இவ் எச்சரிக்கையைப் பெறும் வாய்ப்புடையோர். பலசிறு சமூகங்களுக்குக் காலநிலைச் செய்திகள் கிடைக்கக் கூடியதாகப் பொதுவான இடங்களில் வானொலி அறிவித்தல் ஒலிபெருக்கிக் குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது. செலவு குறைந்த காலநிலை வானொலிப் பெட்டிகளை வீடுகளிற் பொருத்திவிட்டால், அவை எச்சரிக்கை, அல்லது அவதானமாயிருக்கும்படி செய்தி வரும்போது மட்டும் ஒலிபெருக்க ஆரம்பிக்கும். (மற்றப்படி பூட்டிக் கிடக்கும்.) இதன்விலை 25 டொலர் மட்டுமே.

காலநிலைச் செய்மதிகள் தம் பெரும் பயனை நாம் உணரத்தக்க நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, சிறந்த முன்னுரைத்தல் நேரத்தோடே எச்சரிக்கை விடுத்தல்களால், பயங்கரச் சுழிக்காற்றால் ஏற்படும் சாவுகள், அழிவுகள் பெருமளவுக்குக் குறைந்துள்ளன. ஆனால் ஒரு பிரதேசத்தில் சுழிக்காற்று, புயல் வரப்போகிறது என்ற எச்சரிக்கை செய்தவுடன். கடைகள், தொழிற்சாலைகள் மூடப்படுவதால் விளையும் பொருளாதார நட்டம் 50 மில்லியன் டொலராகும். புயல் வீசாமல் விலகிப்போனால் இது வீணான கணிசமான நட்டமே, அதனால் ஜிஓஈஎஸ் அடுத்துக் கண்டுபிடிக்கும் கருவிகள் புயல் வீசிச் செல்லும் பாதையை ஒடுக்கமான எல்லைக்குள் சரியாகச் சொல்லுந் திறன் பெறவேண்டும். அப்பொழுதுதான் வீணான தொழில் நிறுத்த நட்டங்களைத் தவிர்க்க முடியும்.

*பொப்பியுலர் மெக்கானிக்ஸ், ஒக்ரோபர் 1994*

❋

# இவை பெரிய புள்ளிகளுக்கு மட்டுமல்ல;

**தொடர்பாடல்: மலிவாக இருப்பதனாலும், மனத்தை அமைதிப்படுத்துவதாலும் செலூலர் தொலைபேசிகள் சாதாரண உபயோகத்திற்கு வந்துவிட்டன.**

*தமிழில்: திரு. கிருபைராஜா*

செலூலர் தொலைபேசி எப்பொழுது தேவைப்படும் எனக் கூறமுடியாது. ஃபிளா மாநிலத்தின் சனிபெல் தீவில் வசிக்கும் இளைப்பாறிய இரசாயனப் பொறியியலாளர் போல் ஸ்ரோவ்ஸின் அனுபவத்தைக் கவனிப்போம். தனது வீட்டுக் காணியின் பாதை மீது மோட்டார் வாகனத்தைச் செலுத்தி வீடு நோக்கி வரும் பொழுது குறுக்கே ஒன்பது அடி நீளமுள்ள முதலை இனத்தைச் சேர்ந்த அலிகேற்றர் ஒன்று படுத்திருந்தது. தன்னை வரவேற்க வழமைபோல் தனது மனைவி தமது செல்லப் பிராணியான ஐந்து இறாத்தல் நிறையுடைய ஸ்பானியல் நாயான GiGi ஐ வெளியே விட்டுவிடுவாளே என்று பயந்தார். விட்டிருந்தால் GiGi அலிகேற்றருக்கு நல்ல சுவையான உணவாயிருந்திருக்கும். உடனே தனது செலூலர் தொலைபேசியை எடுத்து மனைவியை எச்சரிக்கை செய்து துன்பத்தைத் தவிர்த்துக் கொண்டார்.

சக்திவாய்ந்த செயற்பாட்டு அதிகாரிகள் ஒரு காலத்தில் உபயோகித்த செலூலர் தொலைபேசி இன்று சாதாரண மக்களால் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. நீர் மட்டும் தான் இதை வாங்க இப்போது யோசிக்கிறீர் என்று எண்ணவேண்டாம். செலூலர் ரெலி தொடர்பாடல் தொழிற் கூட்டுச்சபையின் தகவலின்படி பத்து அமெரிக்கரில் ஒருவர் ஒரு செலூலர் தொலைபேசியை வைத்திருக்கிறார். ஒவ்வொருநாளும் 28,000 பேர் செலூலர் சேவைக்கு விண்ணப்பிக்கிறார்கள். கட்டணம் குறைந்து கொண்டே வருகிறது 1988 ஆம் ஆண்டிலிருந்து சராசரி மாதக்கட்டணம் 100 டொலரில் இருந்து 56 டொலராகக் குறைந்து விட்டது.



சாதாரண மக்களின் பாவிப்பிலும் செலூலர் தொலைபேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித சலுகைகளைப் பாவனையாளருக்கு வழங்கி அவர்களைக் கவர, செலூலர் நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. இவற்றில் முக்கிய விளம்பரம் மனதில் நிம்மதியை ஏற்படுத்துவதே. ஆய்வுப் படிப்புக்களில் இருந்து அறிவது யாதெனில், செலூலர் தொலைபேசி வாங்குவதன் முக்கிய நோக்கம் பாதுகாப்புக் காரணங்களுக்காகும். அலிகேற்றர்கள் இல்லாவிட்டாலும் இருண்ட வீதிகள் அல்லது வெறுமையாக இருக்கும் மோட்டார் வாகன தரிப்பிடங்கள் அபாயகரமானவையாகும். மோட்டோறோலா ஆய்வின்படி பத்துப்பேரில் ஒன்பது பேர் இத்தொலைபேசியைக் கொண்டு திரிவதால் பாதுகாப்பாய் இருப்பதாக எண்ணுவதாகவும் புதியவர்களுக்கு உதவ விருப்பமுடையவர்களாக அல்லது அவர்களைப் பற்றிக் காவல்துறைக்கு அறிவிக்க நாட்டமுடையவர்களாக இருப்பதாகவும் அறியப்படுகிறது. லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகரத்தின் அபாயகரமான பகுதியில் சி என் என் கருமபீட அலுவலராக வேலை பார்க்கும் ஷாறி றைலி இரவு நேரங்களில் வேலை செய்யும் பொழுது தனது செலூலர் தொலைபேசியைப் பெற்றார். மோட்டார் வாகனங்கள் திருடர்களால் உடைக்கப்படும் பொழுது மற்றும் அலுவலகக் கட்டடத்தை நோக்கிச் செல்லும் பொழுது பாதுகாப்புக் காவலருக்கு அறிவிக்கவும் தொலைபேசியைப் பயன்படுத்துகிறார். தொலைபேசி வைத்திருக்கும் பொழுது நான் தனித்து இருப்பதாக எண்ணுவதில்லை என்று றைலி கூறுகின்றார் இப்பொழுது இருக்கும் வேலையில் பகலில் வேலை செய்தாலும் தொலைபேசியை வைத்திருக்கிறார். வாகன நெரிசலில் அகப்பட்டிருக்கும்போது நண்பர்களுடன் பேசும் விருப்பத்தைத் தவிர்க்க முயற்சிக்கிறார்.

சேவைக் கட்டணம் குறைந்து கொண்டுபோக, தொலைபேசியின் விலையும் குறைந்து கொண்டு போகிறது பலதரப்பட்ட கவர்ச்சிகரமான வடிவங்கள் கொண்டு செல்லக்கூடிய தொலைபேசிகள் மிகவும் கவர்ச்சிகரமாயுள்ளன. அவை மேலும் சிறியனவாகவும், இலேசானவையாகவும், விசேட அம்சங்கள் உடையனவாகவும், 'பேசும் காலம்' (மின்கலஆயுள்) அதிகரிப்பனவாகவும் உள்ளன. ஐந்து அவுன்ஸ் நிறையிலுங் குறைவான மோட்டோறோலா மைக்ரோ Tac எலிற் தொலைபேசியின் விலை உயர்வாக இருப்பினும் ($ 1000) பல விசேட அம்சங்கள் உடையனவாக இருப்பதால் சந்தையில் இருப்பவற்றில் மிக நுட்பமுடையனவாகக் கணிக்கப்படுகிறது. உள்ளங்கையளவு கருவியை சோனி செய்கிறது. இதில் அதன் கேட்டல்துண்டு மேலே வழுக்கிச் செல்லக்கூடியது. பேர்சன்னா என்று அழைக்கப்படும் சிறிய இலேசான தொலைபேசியை :பியுஜிற்சு இப்பொழுது வெளிவிட்டுள்ளது. பொதுவாகச் செலூலர் தொலைபேசிகளுக்கு டயல் ரோன் இருப்பதில்லை. ஆனால் பேர்சன்னா டயல் ரோனுடன் மற்ற ஆளிகளுக்குப் பதிலாகப் பேசும் ஆளியும் வீட்டுப்பாவனையில் உள்ள இணைப்பில்லாத் தொலைபேசி போல்(Cordless phone) செயற்படக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. கலிபோர்னியாவில் இதன் சேவை தவிர்ந்த விலை: 250 டொலர் ஆகும். ஆனால் சில இடங்களில் மாதாந்த சேவையுடன் 100 டொலர் அல்லது இலவசமாகவும் தொலைபேசி கொடுக்கப்படுகிறது.

செலூலர் தொலைபேசியை நாடுவது மிகவும் ஆசையைத் தூண்டுவதாக அமைந்தாலும், ஒரு முடிவுக்கு வருவது இலேசான காரியமன்று. பலவிதமான திட்டங்களிற் குறைந்த கட்டண வீதத்தைத் தெரிவது மயக்கமளிப்பதாகும். அவசர காரியங்களுக்கு மட்டும் தேவைப்படுவோருக்கு, குறைந்த கட்டணமுடைய 'பாதுகாப்புத்திட்ட'மொன்றுண்டு, மாதக்கட்டணம் மிகக்குறைந்த அளவாக 10 டொலராக இருக்கலாம். ஆனால் உபயோகிக்கும் போது கட்டணம் நிமிடத்திற்கு 1 டொலராகலாம். ஓயாமல் தொலைபேசியை உபயோகிக்கும் செலூலர் போதையுள்ளவர்களுக்கு மாதக்கட்டணம் 200 டொலர் வரை செல்லும். உச்சப்பாவனை தவிர்ந்த மற்ற நேரங்களில் நிமிடமொன்றுக்குக் கட்டணம் 20 சதம் அளவில் இருக்கும்.

செலூலர் சேவையில் அதிக செலவை ஏற்படுத்துவதும் பிரச்சினைக்குரியதுமானது ஊர்சுற்றுவது (Roaming) ஆகும். அதாவது உமது (Cell) புவியியல் பரப்புக்கு வெளியே தொலைபேசியை உபயோகிப்பதாகும். சில செலூலர் நிறுவனங்கள் உயர்வாக உள்ள ஊர்சுற்றும் கட்டணங்களைத் தவிர்க்கக் கூடுதலான புவியியல் பரப்புக்கு உள்ளூர்க் கட்டணங்களையே அறவிடுகிறார்கள். அதிகமான செலூலர் நிறுவனங்கள் தமக்கிடையே தானியங்கி ஊர்சுற்றும் ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளன. ஆனால் மற்றும் சில நிறுவனங்கள் அழைப்புக்கள் (Calls) அனுப்பும் பொழுது அல்லது பெறும் பொழுது தம்முடன் பதிவு செய்யும்படி கோருகின்றனர். உள்வரும் அழைப்புக்களுக்கும், வெளியே செல்லும் அழைப்புக்களுக்கும் பாவனையாளர் பேசும் நேரத்திற்கு வழமையாகக் கட்டணம் செலுத்தியுள்ளார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலூலர் பிரதேசத்தில் மேலும் குழப்பத்தை உண்டாக்கும் வண்ணம் உலகளாவிய, கையிற்கொண்டு செல்லக்கூடிய தொலைபேசி விற்பனையில் ஈடுபடும் அமைப்புக்கள் அனலோக் செலுத்தலில் இருந்து டிஜிற்றல் செலுத்தலுக்கு மாற்றமடையும் தறுவாயில் உள்ளன. அனலோக் தொழில் நுட்பத்தில் ஒரு வழியில் மட்டும் ஓர் உரையாடல் கொண்டு செல்லப்பட்டவேளை டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் 3 அல்லது 4 உரையாடல்களைக் கொண்டு செல்வது ஓர் அனுகூலமாகும். அதாவது லொஸ் ஏஞ்சல்ஸ் போன்ற நெருக்கமான நகரில் ஒரு பாவனையாளர் ஒரு திறந்த சனெலைக் கண்டுபிடிப்பது இலேசானதாகும். அழைப்பாளர் எங்கிருந்தாலும் டிஜிற்றலில் ஒலியின் பண்பு தெளிவாக இருக்கின்றது. ''இலட்சிய நிபந்தனைகளில் ஓர் அனலோக் அழைப்பு மிகவும் சிறந்ததாகும். ஆனால் ஆதார நிலையத்தில் இருந்து தூரச் செல்லும் பொழுது இரைச்சல் அதிகரிக்கலாம்'' என சாண்டியாகோ நகர குவால்கொம் நிறுவன சி.ஈ.ஓ ஏவின் ஜேக்கப்ஸ் கூறுகிறார். ஒட்டுக் கேட்பதைத் தடுப்பதும் டிஜிற்றலின் மேலும் ஓர் அனுகூலமாகும்.

கம்பியில்லாத் தொழில் நுட்பத்தில் அடுத்த அலை பிசிஎஸ் ஆகும். அதாவது சுயதொடர்பாடல் சேவை (Personal Communication Service) இது றேடியோ அலைவரிசையில் செலூலர் தவிர்ந்த வேறு ஒரு பகுதியில் செயற்படுகிறது. இன்னும் சில வருடங்களில் பிசிஎஸ் எதிர்பார்க்கப்படுகிறது.

காரியங்கள் நடைபெறும் வேகத்தை அவதானிக்கும் பொழுது மிகவிரைவில் குடும்பங்கள் யாவும் செலூலர் போனை வைத்திருக்கும் நிலை வரும். தனது பதினேழு வயது மகள் இரவில் வெளியே செல்லும் பொழுது செலூலர் போனை அவரிடம் கொடுத்து விடுவதாகச் சீரிஐஏ இன் பேச்சாளர் மைக்கல் ஹூற்றன் கூறுகின்றார். பாதுகாப்புக் காரணத்துக்காக மட்டுமல்ல நேரம் தப்பி வரும் பொழுது அண்மையில் போன் கிடைக்கவில்லை என்ற வழமையான சாட்டுச் சொல்ல முடியாது; புதிய சாட்டு யாதெனின், மின்கலத்தில் மின்னோட்டம் இல்லை என்பதாகும். மேலதிக மின்கலன்களைக் கொடுத்து விடுகிறேன் என்கிறார் ஹூற்றன்.

குறிப்பு:
இலங்கையில தொழிற்படும்
செலூலர் நிறுவனங்கள்.

01. செல்ரெல் (Cell tel)
02. கோல்லிங் (Call-Link)
03. மொபி ரெல் (Mobi tel)

நியூஸ்வீக் ஏப்ரல் 3, 1995

★

## புதிய வர்ணஜாலத்தில் ஒரு கார்

தென் - கொரியாவின் கப்பல் கட்டும் நிறுவனம் ஹையுன்டாய் (Hyundai) கடந்த சில வருடங்களாகப் பெரும் பாரஞ் சுமக்கும் லொரிகளில் தொடங்கி சிறிய ரகக் கார்வரை தயாரிக்கிறது. இவை பெரும்பாலும் ஜப்பானின் மிற்சுபிசி நிறுவனம் தயாரிக்கும் லான்சர் கார்களை ஒத்திருக்கின்றன. கார் கட்டும் தொழில் நுட்பத்தை லான்சர் நிறுவனததிடமிருந்து வாங்கியதாகவும் சொல்லப்படுகிறது. 1995 ஆம் ஆண்டிற்கான புதிய கார்களை அறிமுகஞ் செய்யும் இந்தக் கொரிய நிறுவனம் இதுவரை பயன்படுத்தப்படாத வர்ணத்தையும் பூசியுள்ளது. நிறம் ஊதா. இது இளைய தலைமுறையினரைக் கவர்ந்திழுக்கும் என்று தயாரிப்பாளர்கள் நம்புகின்றனர்.

எந்தப் புதிய காரைக் கண்டுபிடித்தாலும் வவுனியாவைத் தாண்டி இங்கு வர விடுறாங்கள் இல்லையே!

## சூழல் மாசுபடாமல் எரிபொருள் நிரப்பும் கருவி

வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும்போது அதன் ஆவி காற்றில் கலப்பதைத் தடுப்பது கடினம். அண்மையில் நிற்போரின் கண்களும் மூச்சும் பாதிப்படைகின்றன. வாகனங்களின் புகைக்குழாயினூடாக வெளியேறும் புகைக்கு ஒப்பான தீங்கு விளைகிறது. அண்மையில் அமெரிக்க நிறுவனமொன்று வடிவமைத்த எரிபொருள் நிரப்பும் கருவி எண்ணெயை நிரப்புவதோடு அதன் ஆவி வெளியேறாமல் உறிஞ்சி இழுத்துக்கொள்கிறது. இதன் விலை தெரியவில்லை.

இங்கே!

மண்ணெண்ணெய்ப் புகையைச் சுவாசித்து மூக்கே பெருத்துப் போச்சுது. இதுக்கேதாவது கண்டுபிடிககச் சொல்லி இவாகளுககுச் சொல்ல வேணும.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனித் தொழில்நுட்பம்

# மைக்ரோ சொ.ஃப்ற் (Microsoft) உரிமையாளர் பில்கேற்ஸ் (Bill Gates) எதிர்நோக்கும் சட்டப்பிரச்சனை

"உலகில் விற்பனையாகும் 80 விழுக்காடு தன்னியற் கணனிகள் மைக்ரோ சொ.ஃப்ற் தயாரிக்கும் மென்மைவகை உதிரிப்பாகங்களில் இயங்குகின்றன."

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

தகவல் புரட்சியுகத்தின் நாயகன் பில்கேற்ஸ் என்றால் மிகையல்ல. இவர் நிறுவி வழி நடத்தும் மைக்ரோ சொஃப்ற் தொழிற்சாலை ஆக்கங்கள் கணனியின் மூலப் பொருள்களாக அமைகின்றன. உலகில் மென்மை வகைத் (Soft Ware) தயாரிப்பில் மைக்ரோ சொப்ற் முதலிடம் வகிக்கின்றது. கடின வகைத் (Hard Ware) தயாரிப்பில் அதிக நாட்டம் காட்டாது வின்டோஸ் (Windows), எம். எஸ். டொஸ் (M. S. Dos), வின்டோஸ் என்ரி (Windows N. T) போன்ற மென்மை வகைத் திட்டங்களில் (Software Programmes) இவர் காட்டும் அதீத தீவிரம் இவருடைய வியாபார நோக்கையும், சந்தையை தன் வயப்படுத்தும் இலக்கையும் சுட்டிக் காட்டுகின்றன. பில்கேற்ஸ் நிறுவனத் தயாரிப்புக்களின் தொழிற்பாடு இன்றி உலகின் 80 சத வீதம் தன்னியல் கணனிகள் இயக்கமின்றி உறங்கிவிடும்.

ஆறு இலக்க வருமானச் செல்வந்தர்கள் படிக்கும் ஃபோர்சூன் (Fortune) சஞ்சிகையின் கணிப்பீட்டில் இன்றைய உலகின் கோடீஸ்வரர்களில் ஒருவராக பில்கேற்ஸ் அமைகின்றார். பணக்காரர்களின் விளை நிலமான அமெரிக்காவில் பில்கேற்ஸ் முதலாம், தவறினால் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். பங்குகள், முதலீடுகள் யாவும் பிற நீங்கலாக அவருடைய திரவப்பெறுமதி 10 பில்லியன் டொலர். அவருடைய நிறுவனப் பங்குகள் 141 மில்லியன் எண்ணிக்கை கொண்டவை. இவற்றின் மொத்தப் பெறுமதி ஏறிக்கொண்டே போகின்றது. மைக்ரோ சொஃப்ற் நிறுவனத்தின் 94 ஆம் ஆண்டிற்குரிய நிகர



வருமானம் 5 பில்லியன் டொலர். அமெரிக்காவிலுள்ள கணனி தயாரிப்பு நிறுவனங்கள் யாவும் தங்கள் 94 ஆம் ஆண்டு வருமானத்தை ஒன்று கூட்டினால் 5 பில்லியனிலும் குறைவு தான்.

இது மட்டுமா ஒப்பீட்டு ரீதியில் ஐ பி. எம் நிறுவனம் மைக்ரோ சொஃப்ரிலும் 10 மடங்கு பெரியது. ஆனால் மைக்ரோ சொஃப்ற் நிறுவனத்தின் பெறுமதி இன்று 40 பில்லியன் டொலரிலும் கூடுதலாக உள்ளது. ஐ பி. எம்மின் பெறுமதி இத்தொகையிலும் குறைவு. உலகின் 49 நாடுகளில் மைக்ரோ சொஃப்ற் கிளைகள் காணப்படுகின்றன. இவற்றில் 16,400 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுள் மூவரில் ஒருவர் பெண் ஆவர். மைக்ரோ சொஃப்ற் நிறுவனத்தில் பெற்ற அனுபவத்தை மூலதனமாக்கி அங்கிருந்து விலகிய பின் சொந்தத் தொழில் ஆரம்பித்த ஆயிரக்கணக்கானோர் மில்லியன் டொலர் பெறுமதியாளர்களாக உருவாகியுள்ளனர். மூவர் பில்லியன் டொலரைத் தாண்டி விட்டனர்.

39 வயதினரான கேற்ஸ் அண்மையில் திருமணம் செய்துள்ளார். தனது புது மனைவியுடன் வாழ்வைத் தொடங்க 40 மில்லியன் டொலர் செலவில் வாஷிங்ரன் ஏரியின் கரையில் புதுமையான வீடொன்றைக் கட்டியெழுப்பியுள்ளார். அதன் சுவர்கள் வீடியோ கலை எலத்திரனியல் சித்திரங்கள் போன்ற அடுத்து நூற்றாண்டு அம்சங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவருடைய உடற்பயிற்சிக் கூடத்தில் செயற்கைச் சூரியனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான வியர்வை சிந்தியோட நெடுஞ்சாலையும் இடம் பெறுகின்றன. வீட்டின் கீழ் நிலத்தடி சுரங்க அறையில் 20 கார்கள் நிறுத்த இடமுண்டு. இவ் வருட முடிவில் அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல் வெளிவர இருக்கின்றது. கேற்சின் வாழ்க்கை வரலாறு கணனியின் தற்கால வரலாறாகவே அமைகின்றது.

தொழில்நுட்ப அறிவிலும், சந்தையின் தேவையை அறிந்து உற்பத்திகளை வெளியிடுவதிலும் கேற்ஸ் நிகரற்றவர். மனச்சோர்வு, உடற்சோர்வு போன்றவற்றைத் தீவிரமாக வெறுப்பவர். தனது பிரதம விற்பனை அதிகாரிகளிடமும், பொறியியலாளர்களிடமும் இக்



குணங்களை எப்போதும் எதிர்பார்க்கிறார். இவருடைய தயாரிப்புக்களைச் சந்தைப்படுத்தும் எல்லா முக்கிய முகவர்களையும் சந்திப்பதோடு தகுந்த ஊக்குவிப்புக்களையும் வழங்குகிறார். 'எவ்வளவு திறம்மிக்க பொருளாக இருப்பினும் அது விற்பனையாகாமல் களஞ்சியங்களில் முடங்கினால் ஒருவருக்கும் பிரயோசனம் இல்லை' என்பது கேற்சின் பொன்மொழி. அப்பிள் எனப்படும் இன்னுமொரு (Apple Electronics) கணனி நிறுவனம் ஒரு டொலர் விற்பனையில் 3.3 சத வீதம் தான் இலாபமாகப் பெறுகின்றது. மறுவளத்தில் மைக்ரோ சொஃப்ற் நிறுவனம் அதே வித விற்பனையில் 25 சத வீதம் இலாபம் பெறுகின்றது. கேற்சின் வெற்றியை இதிலிருந்து ஓரளவுக்கு உணரலாம்.

## மைக்ரோ சொ.:ப்ற் நிறுவனம் பிறநிறுவனங்களுடன் செய்துகொண்ட

1. தனியார் விடுதிகளில் பாவிக்கப்படும் தன்னியல் கணனித் திரையில் சினிமாப் படங்களைக் காட்டும் செயற் றிட்டத்தைப் பரீட்சார்த்தமாக மைக்ரோ சொ.:ப்ற் ஆரம்பித்துள்ளது. வாஷிங்ரன் நகரில் 120 விடுதிகள் இந்தச் சேவையைப் பயன்படுத்துகின்றன. இது வெற்றியளித்துள்ளதால் அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய ஐந்து நாட்டு நிறுவனங்கள் பெருந்தொகைப் பணம் கொடுத்துத் தங்கள் நாட்டில் இந்த முறையிற் படம் காட்டும் உரிமையைப் பெற்றுள்ளன. இது பரிமாற்றத் தொலைக்காட்சி முறைமை வளர்ச்சியாகும் (Interactive T V).
2. இன்று உலகின் தகவல் பரிமாற்ற ஊடகமாகச் செயற்படும் தகவல் வலய சேவையை (Internet) அடிப்படையாகக் கொண்டு பில்கேற்ஸ் தனக்குச் சொந்தமான தொலைத் தொடர்புச் சேவையை (Telecommunication) ஆரம்பித்துள்ளார். நாளடைவில் தனது சொந்த வலயத்தை ஆரம்பிக்கும் அவா அவருக்கு உண்டு. இந்த முறைமையை வேறு அமெரிக்க நிறுவனங்களும், இங்கிலாந்து நிறுவனம் ஒன்றும் ஒப்பந்த முறையிற் பின்பற்றுகின்றன.
3. மைக்ரோ சொ.:ப்ற் நிறுவனம் ஹொலிவூட் (Holly wood) இயக்குனர்களான ஸ்ரீபன் ஸ்பீல்பேர்க், ஜெப்றி கற்சன்பேர்க், டேவிற் ஜேப்பன் ஆகியோருடன் ஒப்பந்தம் செய்து சினிமா உலகில் நுழைந்துள்ளது. சினிமாத் தயாரிப்பிலும், வீடியோ தொலைக்காட்சித் தயாரிப்பிலும் கேற்ஸ் முதலீடு செய்துள்ளார். உலகில் அதிகம் விற்பனையாகும் வீடியோ கேம் (தொலைக்காட்சித் திரையில் விளையாட்டு) மைக்ரோ சொ.:ப்ற் நிறுவனத் தயாரிப்பாகும். ஹொலிவூட்டின்

மைக்ரோ சொஃப்ரின் புகழ் பூத்த வின்டோஸ் விற்பனைக்கு வந்து பத்து வருடங்கள் சென்றுவிட்டன. மக்கின் ரொஷ் (Macintosh) நிறுவனத்தின் போட்டித் தயாரிப்பு இதன் விற்பனையை அண்மையில் மழுங்கடித்துள்ளது. மைக்ரோ சொஃப்ரின் டொஸ் திட்டமும் (Dos System) தனது வயதைக்காட்ட ஆரம்பித்துள்ளது. இரண்டு பின்னடைவுகளையும் எதிர்கொள்ள கேற்ஸ் தயாராகிவிட்டார். வின்டோஸ் 95 (Windows 95) எனப்படும் புத்தம் புதிய திட்டம் இவ்வருட ஆகஸ்ற் மாத இறுதி வாரத்தில் வெளிவரவிருக்கின்றது. மைக்ரோ சொஃப்ற் ஆய்வுகூடத்தின் 5 ஆம் கட்டடத்தின் 1091 அறையில் 150 கணனிகள் வின்டோஸ் 95 இன் செயற்பாட்டை இடைவிடாது பரிசோதிக்கின்றன. ஒரு புதிய போயிங் விமானம் பறக்க விடுமுன் காணப்படும் பரபரப்பு இங்குண்டு. அமெரிக்காவையும், உலகையும் வின்டோஸ் 95 கலக்குமென்று திடமாக நம்பலாம். பத்திரிகையாளர்களுக்கு விடப்பட்ட அறிவிப்பில் இக்கணனி ஏற்கனவே 15 மில்லியன் பரிசோதனைகளைத் தாண்டிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இவ்வுலகம் முன்னெப்பொழுதும் காணாத பெரும் விற்பனைப் பாதிப்பை வின்டோஸ் 95 ஏற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனது ஆதாயத்தைப் பெருக்க உலகளாவிய ஒப்பந்தங்கள்.

என்.பி.சி, எஸ்.கே.ஜி, உள்லைன், ஸ்ரார்வேல் போன்ற நிறுவனங்கள் கேற்சின் தேவைக்கேற்ப விளையாட்டுக்களையும், ஒலி அடர்த்தித் தட்டுக்களையும். நினைவக அடர்த்தித் தட்டுக்களையும் தயாரிக்கின்றன.

4. நுண் கணனித் தயாரிப்பில் மைக்ரோ சொஃப்ற் பெரும் முன்னேற்றங் கண்டுள்ளது. இதற்குத் தேவையான உதிரிகளைத் தயாரிப்பதற்காக நான்கு சர்வதேச நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஜப்பானின் சோனி கோர்ப்பரேசன் அவற்றுள் ஒன்றாகும்.

5 தொலைக்காட்சித் திரையிற் காண்பிக்கும் சினிமாப்படங்களை எண் கணனி முறையிற் பதிந்து மைக்ரோ சொஃப்ற் விற்பனைக்கு விட்டுள்ளது. மூன்று சர்வதேச நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் கேற்சின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. ஜப்பானிய நிறுவனங்களும் இதில் அடங்கும்.

6 எலத்திரனியல் வங்கிச்சேவையை அது பல பிரபல வங்கிகளுடன் இணைந்து நடத்த ஒப்பந்தங்கள் செய்தபோது அமெரிக்க நீதித்துறை யாவற்றையும் தடைசெய்துள்ளது.

7. இன்ரர்நெற் மூலம் பொருள்களைக் கடன்வசதியுடன் வாங்கும் சேவை கடன் அட்டை ( Credit Card ) நிறுவனங்களுடன் கூட்டுச்சேர்ந்து மைக்கரோ சொஃப்ற் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. சர்வதேச செயற்பாடு உடைய விசா (Visa International ) மைக்ரோ சொஃப்ருடன் இணைந்து செயற்படுகின்றது.

8. வானொலி அலைவரிசைமுலம் எலத்திரனியல் தபாற்சேவையையும ( E - Mail Electronic Mail ). செய்திக்குறிப்புக்களையும் பரிமாற்றும் சேவையை மைரோ சொஃப்ற் நடத்துகின்றது இதற்காகப் பல பல்தேய நிறுவனங்களுடன் அது கூட்டுச் சேர்ந்துள்ளது.

படுத்தும், என்று கணனித் தொழில் நிபுணர்கள் கருதுகின்றனர். அது வெளிவரும் ஒரு வருட காலத்தில் 40 மில்லியன் பிரதிகள் விற்பனையாகலாம் என்று நம்பப்படுகிறது. வின்டோஸ் 95 இரண்டு வித புரட்சிகர அமைப்பைக் கொண்டுள்ளது. அச்சு எந்திரம் போன்ற அலகுகளைப் பொருத்துவது எளிதாக்கப்பட்டதோடு சுற்றாடலில் பாவிக்கப்படும் கணனிகளுடன் தொடர்பு மிகச்சுலபமாக்கப்பட்டுள்ளது. நெற்வேர்க் நேபர்கூட் (Network Neighbourhood) என்ற ஐகன் ( Icon ) விசையை இருமுறை கிளிக் ( Click ) செய்யும் போது சுற்றாடலில் உள்ள கணனிகள் யாவற்றின் இருப்பிடமும் தெரிய வருகின்றது. இதைப் பெரும் வரப்பிரசாதமாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கணனியுலகின் ஜாம்பவான் என்று கேற்சை வர்ணிப்பதில் நியாயமுண்டு. ஆனால் உள்ளதோடு திருப்திப்படாமல் தனது சாம்ராச்சியத்தை விரிவுபடுத்தும் நோக்கில் பல ஊடுருவல் நடவடிக்கைகளைத் தொடங்கிய பின் அவருக்கு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. ஐ.பி.எம் போன்ற நிறுவனங்கள் மௌனம் சாதித்தாலும், ஆளணி, முதலீடு வருமானம் போன்றவற்றில் சிறிய நிறுவனங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன. வின்டோஸ் அமைப்பு எண்கணனி யுகத்தின் அளவுகோல் என்பதால் அதன் மூலம் பிற நன்மைகளைப் பெற கேற்ஸ் வினளவதாகக் குற்றஞ் சுமத்தப்படுகின்றது. இவ்வளவு பெருந்தொகை மென்மை வகை (Soft Ware) விற்பனையால் கேற்ஸ் சர்வாதிகாரியாகவும், சட்டத்திற்கு முரணான பேர்வழியாகவும் உள்ளதாகச் சிறிய நிறுவனங்களின் ஒன்றியம் பகிரங்க அறிக்கை விடுத்துள்ளது.

கேற்ஸ் சட்டத்திற்கு முரணான செயற்பாட்டில் ஈடுபடுகிறார் என்று எப்படிக் கூறமுடியும்? இதற்கு அமெரிக்க பொருளாதார வரலாற்றையும், சட்டத்துறையின் கட்டுப்பாடுகளையும் நோக்கவேண்டியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள் இணைந்து செயற்பட்டமை அமெரிக்க தொழில் முன்னேற்ற வரலாற்றில் முக்கிய கட்டமாகும். இவ்வாறான இணைப்பின் தோற்றத்திற்குச் சில பொருளாதாரக் காரணிகள் உண்டு. போட்டியைத் தவிர்க்கும் காரணத்திற்காகவும், அதிக இலாபந் தேடுவதற்காகவும், தொழிலாளர் ஊதியத்தைக் குறைப்பதற்காகவும் இணைப்புக்கள் தோன்றின. விலையை நினைத்தவாறு உயர்த்தும் சந்தர்ப்பமும் நிறைய உண்டு. இணைப்புக்கள் பலவகைப்படும் எனினும் மக்களும், சட்டமும் யாவற்றையும் சந்தேகக் கண் கொண்டு நோக்கின. 'நாட்டின் வருமானத்தில் தமக்கிருக்கும் பங்கின் அளவைப் பெருக்கிட அமெரிக்க வர்த்தகர்கள் மேற்கொண்ட முயற்சியே இணைப்பு முறை 'என்று திட்டவட்டமாகச் சட்டம் கூறுகின்றது. இவ்வாறான இணைப்புக்களை 1890 ஆம் ஆண்டின் ஷேர்மன் இணைப்பு எதிர்ப்புச் சட்டம் தடை செய்துள்ளது. வாணிபத்தைத் தடுக்கும சதியமைப்புக்களாகவும் இச்சட்டத்தின் கீழ் இணைப்புக்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ஸ் நிறுவிய மைக்ரோ சொஃப்ற் நிறுவனம் ஓர் இணைப்பு அல்ல. அது பரந்துபட்ட தனியார் உடைமை. எனினும் இணைப்பு எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் இதன் எல்லை மீறிய செயற்பாடுகள் குறுக்கப்பட வேண்டும் என்று போட்டி நிறுவனங்கள் குரல் கொடுத்துள்ளன. கணனி உலகைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வரும் கேற்சின் முயற்சி இதன் காரணமாகத் தடைப்பட்டுள்ளது. கணனி மூலம் வங்கிகளை இயக்கும் உரிமையை 2 பில்லியன் டொலருக்கு கொள் முதல் செய்ய கேற்ஸ் இம் மாதம் தயார் நிலையில் இருந்த போது அமெரிக்க நீதித்துறை அதை நிறுத்தியுள்ளது. அமெரிக்காவின் மிகப் பரந்த அதியுச்ச முதலீடுகள் கொண்ட ஒரு தொழிற்றுறையை தனியொருவருக்குச் சொந்தமான நிறுவனம் தனது பிடியில் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாதென நீதித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செய்மதி மூலம் தொலைத்தொடர்பு, கணனி மூலம் அறிவியல் பிரசுரம், உலகளாவிய தொலைக்காட்சி, எலத்திரனியல் தகவல் பரிமாற்றம், படத்துறை போன்ற இன்னோரன்ன திட்டங்கள் கேற்சிடம் உள்ளன. இவை யாவற்றையும் அவர் இயக்க ஆரம்பித்தால் போட்டி நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல அமெரிக்க அரசியல் அமைப்புக்கே அவர் பெரும் சவாலாக மாறிவிடுவார்.

இவ் வருடம் முடியுமுன் கேற்சின் பரந்த சாம்ராச்சியத்தை நுணுகி ஆராய நீதித்துறை அதிகாரிகள் தயாராகிவிடுவர். கேற்சின் தலை சிறந்த சட்டத்தரணிகள் குற்றச் சாட்டுக்களை எதிர் கொள்ளச் சமகாலத்தில் தயார் நிலைக்கு வந்து விடுவர். இந்த மோதலின் முடிவு அமெரிக்க தொழிற்றுறை வரலாற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

ஆதாரம்:

1. :போர்சூன் டிசெம்பர் 94.
2. ரைம் ஜூன் 15, 95.
3. அமெரிக்க தொழில் இணைப்பு எதிர்ப்புச் சட்டம் - 1890

## இப்பொருளின் செயற்பாட்டை நம்பாமல் ஏமாற்றுவதாகக் கூறுவீர்கள்!

ஒரு கணனித் திரையில் இருந்து உமது சுயவிபர நாட் குறிப்பை இக்கடிகாரம் நேரடியாக வாசிக்கக்கூடியது என்று ஒருவருக்கு நீர் கூறும்பொழுது எல்லோரையும் போல் அவரும் திகைப்படைந்து ''வாரும்! வாரும்!'' உண்மையாக அவ்வாறு செய்கின்றதா? என்று கேட்பார்.

ஆனால் நீர் கூறியது ஒவ்வோர் அணுவும் உண்மையாகும். இணைப்பதற்கு பின்வருவன தேவைப்படும். ரைமெக்ஸ் டேற்றா லிங் கடிகாரமும் அதனுடன் சேர்ந்த சுயதகவலை ஒழுங்கமைக்கும் சொப்ற்வெயாரும், மைக்ரோ சொ:ப்ற் வின்டோஸ் 3.1 இனால் நிரப்பப்பட்ட ஒரு பிசி மற்றும் மேசைமீது வைக்கக்கூடிய சிஆர்ரீ கண்காணிக்கும் கருவியுமாகும்.

சில பொத்தான்களை அமுக்கிவிட்டு உமது கணனி மொனிற்றருக்கு முன்னே கடிகாரத்தைப் பிடிக்கவும். திரையின் மீது ஒளிச் சட்டங்கள் பளிச்சிட்டபின் 20 செக்கன்களில் மைக்ரோ சொ:ப்ற் மற்றும் ரைமெக்ஸ் டேற்றா லிங் சொ:ப்ற் வெயாரில் இருந்து கடிகாரத்தின் சிறிய இலத்திரனியல் கண் 70 பதிவுகள் வரை வாசிக்கும் அன்றைய சந்திப்புக்கள், தொலைபேசி எண்கள், முக்கிய அறிவிப்புக்கள், (Alarms) நிகழ்ச்சி அட்டவணை பிறந்தநாள்கள், வருடாந்த நிகழ்வுகள் போன்றவை பதியப்படும்,

இப்பொழுது உமது கைக்கடிகாரத்தில் எல்லாத்தகவல்களும் சேமிக்கப்பட்டுள்ளன. இனிமேல் ஒரு பிறந்த நாளையோ அல்லது ஆண்டுநிகழ்வையோ மறக்கமாட்டீர். முக்கிய நிகழ்வொன்றுக்கு ஓர் ஏழல் (வாரம்) முன்னே உமக்கு ஞாபகமூட்டும். உருவமாக கடிகார முகத்தில் ஒரு சிறிய கையும் அதன் சுட்டுவிரலைச்சுற்றி நூல் ஒன்று இருக்கும் வண்ணம் உருவமொன்று தோன்றும். குறிப்பிட்ட நாளன்று உருவம் அவசர அவசரமாகப் பளிச்சிட்டு உமது அன்பளிப்போ அல்லது பூக்கொத்தோ வாங்கும் நேரம் அண்மித்து விட்டதைக் காட்டும்.

ஒரு குறிப்பிட்ட சந்திப்பு நெருங்கும்போது யாரைச் சந்திப்பது, எங்கே போன்ற விபரங்களைக் காட்டி பீப், பீப் சத்தமிடும்.

ரைமெக்ஸ் டேற்றா லிங் நேரத்தையும் காட்டும். அதாவது செக்கன், நிமிடம், மணித்தியாலம், நாள், தேதி, மாதம் மற்றும் வருடம் போன்றவையும் ஒவ்வொரு மணித்தியாலமும் பீப், சத்தமிட்டுப் பலதரப்பட்ட அறிவிப்புக்களை அறிவித்து (Alarms) 100 மீற்றர் ஆழத்துக்கு நீர் உட்புகவிடாமல் இன்டிக்லோ இரவு வெளிச்சமும் (Indiglo Night Light) பொருத்தப்பட்டுள்ளது.

உமக்கு நம்பமுடியாமல் இருப்பது எங்களுக்கு விளங்குகின்றது. நீர் நேராக இக்கடிகாரத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம். அல்லது 1-800 367-8463 தொலைபேசியில் அழைக்கலாம், மேற்கூறியவை யாவும் உண்மை. உங்களை ஏமாற்றவில்லை.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத் தரணியெங்கும் தண்ணொளி வீசும்

# “ இராசன் அச்சகம் ”

அளிக்கும் மற்றுமொரு சேவை

LAMINATION காப்புறை இடுதல்.

உங்கள் ஆவணங்கள், அடையாள அட்டைகள்
பழுதுறாதிருக்க, காப்புறை இடுவோர்:



உங்களின்
அச்சுப்பதிப்பு
வேலைகள்
எதுவானாலும்
[illegible] அச்சிலே
தருவோர்:

# இராசன் அச்சகம்

144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org